(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அநுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆனந்த௵ ஆவணி௴—AUGUST 1914. | ஸஞ்சிகை 8. No. 8.

பொருளடக்கம்.

வியாஸங்கள்— பக்கம்.

- வாடகையா ? நிலவரியா ? ... 394
- ஒட்டுமாஞ்செடி பயிர் செய்வது —என். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் ... 397
- க்ராமாபிவ்ருத்திக்குரிய ஸாதனங்கள் 398
- தொழுவத்தெரு ... 400
- பருத்தியின் விளைவு 401
- முட்டைகளைக் குஞ்சுபொரிக்க வைப்பதில் ஒரு நூதன முறை ... 401
- நெல்லில பதர் ... 402
- ஜெயில் கைதிகளுக்கு விவஸாயக் கல்வி... 403
- விற்பனைக்காக காய்கறிகள் ஸாகுபடி செய்தல் ... 403
- விவஸாய கோவாபரேடிவ் ஸங்கங்கள் ... 405
- மூக்குப்பொடி செய்தல் ... 409
- எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி ... 409
- பாடசாலைத் தோட்டம் ,... 413
- சண்டைபோடும் தேசத்தவர்களின் உரிமை 417
- க்ராம ஸுகாதார விதிகள் ... 421
- செடிகளுக்கு ஒரு புது அறிவு .. 425
- சிசுக்களின் ஸம்ரக்ஷணை ... 429
- சண்டையில் முக்யஸ்தர்கள் .. 433
- பிறருடைய விஷயங்களை அறிந்துகொள்ள விரும்புதல் ... 435

விவஸாயப் பகுதி ... 394
கோவாபரேஷன் பகுதி ... 405
வியாபாரப் பகுதி ... 409
வித்யாவிஷயப் பகுதி ... 413
வ்யவஹாரப் பகுதி ... 417
ஸுகாதாரப் பகுதி ... 421
பையன்கள் பகுதி ... 425
ஸ்த்ரீகள் பகுதி ... 429
ஜீவ்ய சரித்ரம் ... 433
சிறு கதைகள் ... 435
பகுதிக் குறிப்புகள் ... 437
மாஸ வர்த்தமானம் ... 441
கால ஸ்திதி ... 447
பஞ்சாங்கம் ... 448

CONTENTS.

Articles— PAGES.

- RENT OR TAX ? ... 394
- GRAFT MANGO CULTIVATION —N. S. Krishnaswami Aiyar, Salem ... 397
- VILLAGE PROSPERITY RULES ... 398
- FARM YARD MANURE ... 400
- COTTON PRODUCTION ... 401
- A NOVEL METHOD OF HATCHING ... 401
- CHAFF IN PADDY ... 402
- AGRICULTURAL EDUCATION TO PRISONERS ... 403
- MARKET GARDENING ... 403
- AGRICULTURAL CO-OPERATIVE SOCIETIES ... 405
- SNUFF MANUFACTURE ... 409
- EXPORT OF OIL SEEDS ... 409
- THE SCHOOL GARDEN ... 413
- RIGHTS OF BELLIGERENT SUBJECTS ... 417
- VILLAGE SANITATION RULES ... 421
- A NEW SENSE IN PLANTS ... 425
- CARE OF BABIES ... 429
- WAR PERSONALITIES ... 433
- INQUISITIVENESS ... 435

The Agricultural World ... 394
The Co-operative World .. 405
The Commercial World ... 409
The Educational World ... 413
The Legal World ... 417
The Sanitary World ... 421
The Boys' World ... 425
The Ladies' World ... 429
Biography ... 433
Short Stories ... 435
Departmental Notes ... 437
Diary of the Month ... 441
Season Report ... 447
Calendar ... 448

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி., 3 & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Books at Concession Rates to Subscribers of "The Practical Life."

The Life and Teachings of Buddha—By the Anagarika Dharmapala. Price As. 12. To Subscribers, As. 8.

Essentials of Hinduism.—A Symposium by representative Hindus. Price As. 8. To Subscribers, As. 6.

King George's Speeches on Indian Affairs.—Part I. A complete collection of all the speeches made by His Majesty during his tour in India as Prince of Wales.

Part. II. Full text of all the speeches delivered by His Majesty during the Coronation Durbar Tour. Price Re. 1. To Subscribers, As. 12.

My Indian Reminiscences.—By Dr. Paul Deussen, Professor of the University of Kiel, translated by A. King. Price Re 1-4. To Subscribers, Re. 1.

The Improvement of Indian Agriculture: Some Lessons from America. By Cathelyne Singh. Price Re. 1. To Subscribers, As. 12

Aspects of the Vedanta.—By various writers, The book also contains the opinions of Max Muller. Dr Goldstucker, Schopenhauer, Victor Cousin, and Dr. P. Deussen on the Vedanta. Second Edition, As. 12. To Subscribers, As. 8.

Dadabhai Naoroji's Speeches and Writings.—An up-to-date exhaustive and comprehensive collection of his speeches and writings. With a portrait. Price. Rs. 2. To Subscribers, Re. 1-8.

Glimpses of the Orient To-day.—By Saint Nihal Singh. In this book, Mr. Singh describes the transition that has taken place in Asia during the last few decades, traces the causes of the awakening and offers a prophecy as to its ultimate effect. Price Re. 1. To Subscribers, As. 12.

The Indians of South Africa.—Helots within the Empire! How they are treated. By H. S L. Polak. This book is the first extended and authoritative description of the Indian Colonists of South Africa, the treatment accorded to them by their European fellow-colonists, and their many grievances. Price Re. 1. To Subscribers, As. 12.

Essays on Indian Art, Industry and Education.—By E. B. Havell, late Principal of the School of Arts, Calcutta. The subjects dealt with are "The Taj and its Designers," "The Revival of Indian Handicraft," "Art and Education in India," "Art and University Reform," "Indian Administration and Swadeshi," "The Uses of Art" Price Re. 1-4. To Subscribers, Re. 1.

All about Delhi.—With 30 illustrations. Price Re. 1-8. To Subscribers, Re. 1-4.

Essays on Indian Economics.—By the late Mahadev Govind Ranade. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

The Depressed Classes.—A symposium by His Highness the Gaekwar of Baroda, Mrs. Annie Besant, The Hon'ble Mr. Gokhale, Sir Valentine Chirol, Rt. Rev. The Lord Bishop of Madras, The Hon'ble Sir Narayan Chandavarkar, The Hon'ble Mr.V. Krishnaswami Aiyar, The Anagarika Dharmapala and others. Price Re. 1. To Subscribers, As. 12.

Light on Life.—A Selection of Five Spiritual Discourses by Baba Premananda Bharati. Price As. 8. To Subscribers, As. 6.

The Indian National Congress.—An account of its origin and growth. Full text of all the Presidential Addresses. Re-print of all the Congress Resolutions. Extracts from all the Welcome Addresses. Notable Utterances on the Movement. Portraits of all the Congress Presidents. Cloth Bound. Over 1,100 pages. Crown 8vo. Rs. 3. To Subscribers, Rs. 2.

A Fragment on Education.—By J. Nelson Fraser, M.A., (*Oxon.*), Principal, Secondary Training College, Bombay. Price Re. 1. To Subscribers, As. 12.

Morley's Indian Speeches.—An enlarged and up-to-date collection. Price Re. 1. To Subscribers, As. 12.

Gokhale's Speeches.—An exhaustive and comprehensive collection of his speeches, with a biographical sketch and a portrait. Over 1,000 pages. Crown 8vo. Price Rs. 3. To Subscribers, Rs. 2-8.

Swami Vivekananda.—An exhaustive and comprehensive collection of his speeches and writings. *Crown 8vo. 800 pages, with four portraits.* Third Edition, revised and enlarged. Price Rs 2. To Subscribers, Re. 1-8.

Sri Sankaracharya's Select Works.—The Text in Sanskrit, Devanagiri type, and an English Translation. By S. Venkataramanan, B.A. Containing more than 700 *verses* in all and including all his important works Bound in Cloth. Price Re. 1-8. To Subscribers, Re. 1.

The Swadeshi Movement.—A Symposium by Representative Indians and Anglo-Indians. Re. 1. To Subscribers, As. 12.

Sri Ramanujacharya.—His Life and Times. By S. Krishnaswami Aiyangar, M.A. His Philosophy. By T. Rajagopalachariar, M.A., B.L Price As. 12. To Subscribers, As. 8.

Sri Madhwa and Madhwaism.—A Short Historic Sketch. By C. N. Krishnaswami Aiyar, M.A. Price As. 12. To Subscribers, As. 8.

The Vaishnavite Reformers of India.—Critical Sketches of their Lives and Writings. By T. Rajagopalachariar, M.A., B.L. Price Re. 1. To Subscribers, As. 12.

Shakespeare's Chart of Life: Being Studies of King Lear, Macbeth, Hamlet, and Othello. By Rev. William Miller, LL.D., C.I.E. Rs. 4. To Subscribers, Rs. 3.

Essays in National Idealism.—By Ananda K. Coomaraswamy, D. Sc. Popular Edition with 6 illustrations. Re. 1. To Subscribers, As. 12.

Industrial India.—By Glyn Barlow, M.A. Second Edition. Price. Re. 1. To Subscribers, As. 12.

Lift Irrigation.—By A. Chatterton. Second Edition. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

☞ *The subscription for the "Practical Life" is Rs. 4 per annum post free. Subscription may commence from any month. Any one who wishes to buy books at the reduced rates must remit one year's subscription in advance. Those in arrears cannot have concession rates.*

G. A. NATESAN & CO., BOOKSELLERS, 4, SUNKURAMA CHETTY STREET, MADRAS.

SIR EDWARD GREY,
Foreign Secretary, England.
ஸர் எட்வர்ட் க்ரே,
அன்ய தேச வ்யவஹார மந்த்ரி, இங்க்லண்ட்.

EARL KITCHENER.
War Secretary, England,
லார்ட் கிச்சனர், யுத்தமந்த்ரி, இங்க்லண்ட்.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ஆனந்த௵ ஆவணி௴, AUGUST 1914. — ஸஞ்சிகை 8. No. 8.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.	Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	6 0 0
Single copy ...	0 6 0	0 8 0
Sample copy ...	0 4 0	0 6 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	... 5 0 0	per month.
½ do	... 2 8 0	do
¼ do	... 1 4 0	do
1/10 do	... 1 0 0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors.—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.	அந்ய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	6 0 0
தனிப்ரதி ...	0 6 0	0 8 0
மாதிரி காபி ...	0 4 0	0 6 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	„ „	2 8 0
¼ பக்கத்திற்கு	„ „	1 4 0
1/10 பக்கத்திற்கு	„ „	1 0 0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3, & 4, ஸுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

நூல் நிலயம்,

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

RENT OR TAX?

வாடகையா? நிலவரியா?

நிலவரியை முப்பது வர்ஷத்துக் கொருதடவை ஸெட்டில்மெண்ட் செய்வதால் நிலஸ்வான்களுக்கு ரொம்ப கஷ்டங்கள் நேருகின்றன வென்றும், நிலவரியை சாசவதமாகச் செய்யவேண்டு மென்றும், இல்லாவிட்டால் 60 வர்ஷத்துக் கொருதடவை, விலைவாசி ரொம்ப ஏறியிருந்தால் மாத்ரம். ஸெட்டில்மெண்ட் செய்து, நிலவரியை நூற்றுக்கு 12½ வீதம் உயர்த்தலாமென்றும் பலர் சொல்லி வருகிறார்கள். ஆனால், சாச்வத ஸெட்டில்மெண்டுக்கு விரோதமாயிருப்பவர்கள் நிலக்காரன் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கும் கிஸ்தியானது வரியல்ல வென்றும் நிலத்துக்கு ஸொந்தக்காரர்களான கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கும் வாடகை யென்றும், ஆகையால் கவர்ன்மெண்டார் தங்களிஷ்டப்படி வாடகையை உயர்த்தலாமென்றும், அதற்காக யாதொரு சட்டமும் செய்யவேண்டியதில்லை யென்றும் சொல்லுகிறார்கள். ஆகவே நிலஸ்வான்கள் செலுத்தும் கிஸ்தியானது நிலவரியா அல்லது நிலத்தின் ஸொந்தக்காரர்களுக்கு வாடகைக்காரன் கொடுக்கும் வாடகைப் பணமா என்ற கேள்வி ஏற்படுகிறது.

இந்தமாஸம் 22-ந்தேதியன்று கர்நூல் ஜில்லா கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்த திவான் பகதூர் கருணாகர மேனன் தமது ப்ரஸங்கத்தில் இவ்விஷயத்தைப் பற்றி விரிவாக ப்ரஸ்தாபித்திருக்கிறார். அவர் சொன்னதை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

நிலஸ்வான்கள் செலுத்தும் கிஸ்தியானது நிலவரியல்ல; வாடகைக்காரன் நிலத்தின் ஸொந்தக்காரனுக்குக் கொடுக்கும் வாடகைப் பணமாகுமென்றால் வாடகைப்பணம் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயித்து சட்டம் செய்யவேண்டுமென்று சொல்வது சரியல்ல. வாடகைப்பணம் என்று சொன்னதினாலேயே நிலத்துக்கு ஸொந்தக்காரர்களாகிய கவர்ன்மெண்ட் வாடகைப்பணத்தைத் தங்களிஷ்டம்போல் உயர்த்தவோ குறைக்கவோ பாத்யமுடையவர்கள் என்று ஏற்படுகிறது. ஆகையால், நிலமானது ஸர்க்காருக்கு ஸொந்தமென்றும், நிலஸ்வான்கள் வாடகை கொடுக்கக்கடமைப்பட்டவர்களென்றும் சொல்லும் இந்தக்கொள்கைக்கு என்ன ஆதாரங்களிருக்கின்றன என்பதை ஆராய்வோம்.

இந்தக் கொள்கைக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஆதிகால ரிகார்டுகளில் யாதொரு ஆதாரமும் இல்லை. 1855-56-ம் வர்ஷத்திய மதராஸ் நிர்வாக ரிபோர்ட்டில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது: "ரயத்வாரி ஏற்பாட்டின்படி நிலம் வைத்துக்கொண்டிருப்பதாக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் அந்த நிலத்துக்கு ஸொந்தக்காரர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர் வரியை நேரில் கவர்ன்மெண்டுக்கு செலுத்தக் கடமைப்பட்டவர். அவர் தமது நிலத்தை பிறருக்கு தானம் செய்யவோ, விற்கவோ, ஒற்றி வைக்கவோ அவருக்கு ஸ்வதந்தரமுண்டு. அவர் இவ்வளவென்று தீர்மானிக்கப்பட்ட வரியை செலுத்திக் கொண்டிருக்கிற வரையில் அவரை கவர்ன்மெண்டார் நிலத்தை விட்டுவிடும்படி செய்யமுடியாது."

மேற்குறித்த இந்த விஷயத்தால் நிலவரி என்பது வாடகையாகுமென்று சொல்லமுடியாது. 1862-ம் வர்ஷத்தில் லார்ட் கானிங்

என்னும் வைஸ்ராய்க்கு சாச்வத ஸெட்டில் மெண்டைப்பற்றி மதராஸ் கவர்ன்மெண்டார் எழுதியனுப்பின ஒரு கடிதத்தில், 'நிலவரி' என்று எழுதியிருக்கிறார்களே யொழிய வாடகை (ரெண்ட்) என்று எழுதவில்லை. 1856-ம் வர்ஷத்தில் கோர்ட் அப் டிரெக்டர்கள் நிலமானது கவர்ன்மெண்டுக்கு சொந்தமில்லை யென்றும், அவர்களுக்கு நிலவரி வஸூல் செய்ய மாத்ரம் பாத்யதை யுண்டேயொழிய, நிலம் தங்களுக்கு ஸொந்தமென்று சொல்லி நிலஸ்வானுக்கு வாடகைக்கு விட்டிருப்பதாக எண்ணி வாடகை வாங்க பாத்யங்கிடையாதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். 1857-ம் வர்ஷத்தில் ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் "இந்தியாவிலுள்ள நிலமெல்லாம் நிலஸ்வான்களுக்கு ஸொந்தமானவை; நிலஸ்வான்கள் நிலவரிமாத்ரம் (கவர்ன்மெண்டுக்குக்) கொடுக்கக்கடமைப்பட்டவர்கள்" என்று சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க நிலம் நிலஸ்வான்களுக்கு ஸொந்தமில்லாமல் ஸர்க்காருக்கு ஸொந்தமாய், ஸர்க்காருக்கு வாடகைப் பணம் வஸூலிக்க பாத்ய முண்டென்று சொல்லும் 'ரெண்ட்' என்னும் கொள்கை எப்படி பினைல் ஏற்பட்டதென்பது விளங்கவில்லை. முதல் முதல் இந்த ரெண்ட் கொள்கையானது 1873-வது வர்ஷத்தில் ஸர் லூயி மாலெட் என்பவரால் ப்ரஸ்தாபிக்கப்பட்டது. பிறகு வேறு சிலர் இந்தக் கொள்கையை ஏற்று அதன் பக்கமாய் வாதிக்கலானார்கள். ஆகையால் கவர்ன்மெண்டார் நிலங்கள் தங்களுக்கு ஸொந்தமென்று சொல்லி தங்களிஷ்டம்போல் கிஸ்தியை தீர்மானிக்கக் கூடும் என்றி அவர்கள் எண்ணுவதற்கு யாதொரு ந்யாயமுமில்லையென்பது தெரியவரும். இதற்குமுன்னல் செய்யப்பட்ட ஸெட்டில்மெண்டுகளெல்லாம் சாச்வதமாகவே செய்யப்பட்டன. கர்னல் ரீட் என்பவர் 1796-ம் வர்ஷத்தில் சேலத்திலுள்ள ரயத்துகளுக்குத் தெரிவித்த ஒரு விளம்பரத்தில் (ப்ராக்ளமேஷன்) பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

"ஒவ்வொரு ப்ரத்யேகமான வயலுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் தீர்வையானது, பூராத் தீர்வையா யிருக்கும்பக்ஷத்தில், அது சாச்வதமான தீர்வை விகிதமாகும்; அதாவது கவர்ன்மெண்டார் இப்போது விதித்திருக்கும் தீர்வைக்கு அதிகமாய் கேட்கமாட்டார்கள்; குறைவாயும் வாங்கிக் கொள்ளமாட்டார்கள். நீங்களும் இப்போதுள்ள விகிதத்துக்கு அதிகமாயும் செலுத்தவேண்டியதில்லை. ஆனல் புன்செய் நிலத்தை ஸாக்கார் செலவில் நன்செய் நிலமாக மாற்றினல், அப்போது மாத்ரம் வரியை உயர்த்தி முன்போல சாச்வதமாக ஏற்படுத்துவார்கள்."

ஸர் தாமஸ் மன்ரோ என்பவர் ஸீடட் டிஸ்ட்ரிக்ட்ஸ் என்னும் கர்நூல், கடப்பை, பல்லாரி ஆகிய இந்த ஜில்லாக்களிலும் இதேமாதிரியாக விளம்பரம் செய்திருந்தார்.

1862-ம் வர்ஷத்தில் சென்னை கவர்ன்மெண்டாரும் தரிசுநிலங்களைத்தவிர மற்ற நிலங்களில் நிலவரியை சாச்வதமாக ஸெட்டில்மெண்ட் செய்வதே சரியென்றும், நிலவரி அதிகம் கிடைக்க வேண்டுமென்றல் தரிசு நிலங்களிலிருந்துதான் கவர்ன்மெண்டுக்கு அதிக வரும்படி வரக்கூடுமாதலால் அவைகளைப்பற்றின மட்டில் சாச்வத ஸெட்டில்மெண்ட் செய்வதில்லை யென்றும் தெரிவித்திருக்கிறார்கள். எவ்வித ஸாக்ஷ்யமும் நிலம கவர்ன்மெண்டுக்கு ஸொந்தமில்லை யென்பதைக் காட்டுகின்றது. மேலும் கவர்ன்மெண்டார் நிலம் தங்களுக்கு ஸொந்தமென்று ஒருபோதும் பாத்யங் கொண்டாடவில்லை யென்றும் தெரியவருகிறது. நிலம் கவர்ன்மெண்டுக்கு ஸொந்தமென்றிருந்தால், நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவனை கவர்ன்மெண்டு அந்நிலத்தை விட்டு விடும்படி கட்டாயப்படுத்தக் கூடுமென்றல். எந்த நிலமாவது கவர்ன்மெண்டுக்கு

வேண்டியிருக்குமானால் கவர்ன்மெண்டார் நிலம் வைத்திருப்பவனுக்கு நோட்டீஸ் கொடுத்து நிலத்தைத் தங்களுக்கு விட்டுவிடும்படி சொல்லலாமல்லவா? ரெயில்வே கம்பெனிகளுக்கு வேண்டியிருக்கும் நிலங்களை, அந்நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு பணம் கொடுத்துப்பெறுமல், நிலங்கள் தங்களுக்கு ஸொந்தமென்னும் பாத்யதையை வைத்துக்கொண்டு அந்நிலங்களை வைத்திருப்பவர்களுக்கு அவைகளை கவர்ன்மெண்டினிடம் விட்டு விடும்படி நோட்டீஸ் கொடுத்து, அவைகளை ரெயில்வே கம்பெனிகளிடம் கொடுக்கலாமல்லவா? ஆனால் கவர்ன்மெண்டோ நிலம் தங்களுக்கு ஸொந்தம் என்னும் கொள்கை ஒன்றிருப்பதை யறியாமலே, ரெயில்வேக்களுக்கு வேண்டியிருக்கும் நிலங்களை வாங்கிக்கொள்வதற்காக சட்டங்களும் செய்திருக்கிறார்கள். நிலங்களுக்கு விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். நிலத்தின் ஸொந்தக்காரன் தனது வாடகைக்காரனி (டெனண்ட்) டமிருந்து நிலத்தை திரும்பி யடைவதற்கு அந்தக் வாடகைக் காரனுக்கு நிலத்திற்கு விலை கொடுப்பதாக ஒரு போதும் கேட்டதேயில்லை.

மேலும் நிலஸ்வானுக்கு தனது நிலத்தை குத்தகைக்கு விடவோ, ஒற்றிவைக்கவோ, விற்கவோ, அல்லது வேறு விதமாய்ப் பராதினம் செய்யவோ, அல்லது, நிலத்தில் உள்ள மரங்களை வெட்டவோ, சுரங்கங்கள் வெட்டவோ, பூரண பாத்யதையுண்டு. இப்படிப்பட்ட பாத்யதைகள் நிலத்தின் ஸொந்தக்காரர்களுக்குத் தான் உண்டு. இந்த பாத்யதைகள் தங்களுக்கு உண்டென்று கவர்ன்மெண்டார் ஒருபோதும் சொன்னதில்லை. இந்த பாத்யதைகளை ஒரு போதும் கொண்டாடவுமில்லை. மேலும் பொதுக் காரியங்களுக்கு நிலங்கள் தேவையாயிருந்தபோது, அப்படி நிலங்கள் வாங்குவதற்குத் தங்களுக்கு அதிகாரம் ஏற்படும்படி கவர்ன்மெண்டார் ப்ரத்யேகமாய் சட்டம்செய்தார்கள். இவைகளையெல்லாம் கவனிக்கும் போது கவர்ன்மெண்டார் நிலங்கள் தங்களுக்கு ஸொந்தமென்று ஒருபோதும் பாத்யம் கொண்டாடவில்லை யென்றும், நிலத்தின் ஸொந்தக் காரர்களுக்கு உள்ள பாத்யதைகளை ரயத்துகளே பாராட்டிவந்தார்களென்றும் ஏற்படுகிறது.

மேற்கூறியவைகளால் இரண்டு விஷயங்கள் வ்யக்தமாய் ஏற்படுகின்றன. அவைகளாவன; (1) நிலமானது ரயத்துக்குதான் ஸொந்தமே யொழிய, கவர்ன்மெண்டுக்கு ஸொந்தமல்ல: (2) மதராஸ் கவர்ன்மெண்டார் சாச்வத ஸெட்டில்மெண்டை அனுஷ்டிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவைகளால்கவர்ன்மெண்டார் தங்களிஷ்டப்படி தீர்வையை மாற்றுவதாகிய பாத்யதையைக் கொண்டாடுவது முடியாதென்று ஏற்படுகிறது.

மேலும் நிலவரியை சாச்வதமாக ஏற்படுத்தி அதிகப்படி ரெவின்யூவுக்கு ஸெஸ்ஸுகள் போடுவதுதான் தற்காலம் வரிவிதிப்பதைப் பற்றியுள்ள கொள்கைகளை யனுஸரித்ததாயிருக்கிறது. வர்ஷத்துக்கு பத்து ரூபாயும் அதற்குக்குறைவாயும் வரிசெலுத்தும் ரயத்துகள் போன்ற பெரும்பான்மையான ஏழை ரயத்துகளுக்கு ஸெஸ் போடக் கூடாது. ஏனென்றால் விலைவாசிகளின் ஏற்றத்தால் அவர்களுக்கு லாபம் ஏற்படுகிறதில்லை. அவர்கள் விற்கக்கூடிய பொருள்கள் ஒன்றுமே கிடையாது. வாங்கவேண்டியவைகளோ அதிகமாயிருக்கின்றன. அவர்களுக்கு நிலவரி போடாமலிருக்க முடியாது. ஸெஸ்ஸுகள் மாத்ரம் போடாமலிருக்கலாம். இதற்காகவும், நிலத்தின்மேல் போடும் வரியை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதடவை அதிகப்படுத்துவதற்குள்ள அதிகாரத்தை சட்டங்களால் நிர்ணயிக்கவும், கவர்ன்மெண்டார், நிலங்கள் தங்களுக்கு ஸொந்தமாகுமென்று சொல்லி வரும் பாத்யதையையும், சட்டத்தின் அதிகார

யில்லாமல் நினைத்தபடி வரியை உயர்த்தும் பாத்யதையையும் விட்டு விடவேண்டியது அவசியமாகும்.

GRAFT MANGO CULTIVATION

BY

N. S. KRISHNASWAMI AIYAR, SALEM.

ஒட்டுமாஞ்செடி பயிர் செய்வது.

தற்காலத்தில் ஒட்டுமாஞ்செடிகளை வைக்க உத்தேசிக்கிறவர்கள் லாபத்தைக் கருதியே செய்கிறார்கள். அவ்வாறு லாபத்தைக் கருதுகிறவர்கள் வ்யாபாரத்திற்கு லாயக்காயுள்ள பருமனும் நல்லவாஸனையும், பார்வைக்கு நல்ல நிறமு முள்ள நாரில்லாத பழங்கள் தரும் மரங்களையே வைத்துப் பயிராக்கவேண்டும். அவ்விதப்பழங்கள் தரும் ஒட்டுமரங்கள் சேலத்தில் பலதினுஸுகள் இருக்கின்றன. அவைகளின் பெயர்களை மார்ச்சு மாஸத்து ஸஞ்சிகையில் சொல்லி யிருக்கிறேன். இப்போதும் அவைகளின் பெயர்களைச்சொல்லி அவைகளின் குணங்களையும் தெரிவிக்கிறேன்.

1. குண்டு-இதைக் காதர்பஸந்து என்றும் சொல்வதுண்டு. இதுவே முதல்தரமானது. பழுத்து 15, 20 நாள் கெடாமலிருப்பதால் இதைத்தூர தேசங்களுக்கு அதிகமாய் ஏற்றுமதி செய்யலாம். இதற்கு விலையும் அதிகம்.

2. மல்கோவா—இதுவும் நல்ல ஜாதியே. காய்கள் அதிக பெரியவை. நல்ல வாஸனையும் ருசியுமுள்ளவை. பழமொன்றுக்கு 1 அணா, 1¼ அணாவுக்குமேல் விற்கலாம். இதுவும் பழுத்து அதிகநாள் கெடாமலிருக்கும்.

3. நடுச்சாலை—இதைப் பீதர்பஸந்து என்றும் சொல்வதுண்டு. இது அதிகமாய்க் காய்க்கும். காய்கள் சீக்ரத்தில் பழுத்து 5,6 நாட்களில் கெட்டுபோகுமாகையால், தூர தேசங்களுக்கு அனுப்பமுடியாது. ஆனால் உள்ளூரிலேயே செலவாய்விடும். இது நல்ல வாஸனையும், மதுரமும், பார்வைக்கு அழகுமுள்ளது. நல்ல விலைபோகக்கூடிய ஜாதி.

4. குதாத்—இது பெரியகாய். பழுக்க 5,6 நாள் செல்லும். பழம் ஒன்றுக்கு 1 அணாவுக்குக் குறையாமல் விற்கலாம். 10 நாள் கெடாமலிருக்கும். உருண்டைவடிவம்.

5. தில்பஸந்து—இதுவும் பெரியஜாதியே. நல்ல விலைபோகக்கூடியது.

6. கிளிமூக்கு—இதைத் தோத்தாபுரி என்றும் சொல்வதுண்டு. இதுவும் பெரியஜாதி. நுனியில் சற்று வளைந்து கிளிமூக்கைப்போலிருப்பதால் இப்பெயர் வந்தது. இதுவும் நல்ல விலைபோகக் கூடியது.

7. சொரக்காமாத்தி—இது பெருத்து சற்று நீண்டிருக்கும். இதைக் காய் ஒன்றுக்கு 1 அணா விதம் விற்கலாம்.

8. பெங்களூரா—இதுவும் நல்ல ஜாதியே. காய் பெரியது. நல்லவிலைபோகக்கூடியது.

9. ஆம்லட்—காய்கள் பெருத்து நீண்டிருக்கும். பழம் 1 அணா, 1½ அணாவுக்குக் குறையாமல் விற்கலாம். நல்லபார்வை யுள்ளது.

10. கத்தேமார்-இதுவும் பெரியஜாதி. காய்கள் பெரியவைகள். பழங்கள் அதிக ருசியாயிராது. நாரில்லை. இதுபோல் இன்னும் பல தினுஸுகளுமுண்டு.

நான் தென் ஜில்லாக்களில் பலவிடங்களுக்குப் போயிருந்தபோது பெரியவைகளான பல தினுஸு மாம்பழங்களைப் பார்த்திருக்கிறேன். அவைகளைப் புசித்தும் பார்த்தேன். அவை நாட்டுப்பழங்களானாலும் நல்ல மேன்மையானவைகளே. அவ்வித மரங்களில் ஒட்டுகள் தயார்செய்து வேறிடங்களில் பயிர் செய்தால் அவைகளின் குணம் இன்னும் மேன்மைப்படும். இம்மாதிரியாகத்தான் ஆதியில் வங்கீளிகள் ஒட்டுகள் தயார்செய்தார்கள்.

ஒட்டுகள் கட்டும் விதம்.

மாம்பழக்காலத்தில் நமக்கு வேண்டிய கொட்டைகளைச் சேகரித்து கேழ்வரகு நாற்று விடுவதற்கு சிறு பாத்திகள் செய்வதுபோல் பாத்திகள் செய்து அவைகளில் சாணுக்கு ஒரு கொட்டைவீதம் நட்டுத் தண்ணீர் பாய்ச்சி வந்தால் ஒரு மாஸத்தில் முளைத்து செடிகள் பெருத்துவரும். ஈரம் காயாமல் பாத்திகளில் வாரத்திற்கு ஒரு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு வந்தால் போதும். 3 மாஸமான பிறகு ஒரு தரம் கொத்தி பாத்திகளிலுள்ள களைகளைப் போக்கி விடவேண்டும். இப்படியே 6-வது மாஸமும் செய்யவேண்டும். ஒரு வர்ஷத்தில் நாற்றுகள் பெருவிரல் பருமனுக்கு மேல் பெருத்துவிடும். பிறகு அவைகளைப் பெயர்த்துஒரு முழம் நீளமுள்ள குழாய்ச்சட்டிகளில் வைத்து நாற்றின் நுனியைக் கத்தரித்துவிடவேண்டும். மேற்படி சட்டிகளில் தண்ணீர் விட்டு வந்தால் 6 மாஸத்தில் நாற்றுகள் வேரூன்றி அடித் தண்டில் சிறு துளிர்கள் புறப்படும். இதுவே அந்நாற்றுகள் சட்டிகளில் வேரூன்றி பிழைத்துக்கொண்டன வென்பதற்கு அடையாளம். இந்த ஸமயத்தில் அச்சட்டிகளைப் பெரிய மரங்களின் பக்கத்தில் கொண்டு போய் ஓட்ட வேண்டும். சில மரங்களின் கிளைகள் கீழே சாய்ந்து பூமியில் படர்ந்திருக்கும். சில வற்றில் மேல் நோக்கியே போகும். கீழாகப்படர்ந்திருக்கும் கிளைகளில் ஓட்டுவது ஸுலபம். மேல் நோக்கிய கிளைகளில் ஓட்டும்போது சட்டிகளின்கீழ் பந்தல் போட்டு சட்டிகள் கீழேவிழாதபடி பத்ரப்படுத்திஒட்டவேண்டும். சட்டியிலுள்ள நாற்றுகளை சட்டிக்குமேல் 6 விரல் உயரம் விட்டு பேனு சீவுவதுபோல் நல்ல பதமான கத்தியால் 4 விரல் நீளம் சீவி விடவேண்டும். அந்த நீளம் பொருந்தும் படி பெரிய மரத்தின் கிளையிலும் கத்தியால் சீவி இரண்டையும் பொருத்தி மேலே மெழுகுத்துணியைச்சுற்றி அதற்குமேல் இறுகலாய் ஒரு சரட்டைச் சுற்றி முடிபோடவேண்டும். இவ்விதம் ஒட்டுகள் கட்டி தினந்தோறும் தவருமல் நாற்றுகளுள்ள சட்டிகளில் தண்ணீர் விட்டு வந்தால் 5,6 மாஸங்களில் இரண்டு கிளைகளும் ஒட்டிக்கொண்டு, பேலே சுற்றியிருக்கும் மெழுகுத்துணி சற்று வெடிக்கும். இந்த ஸமயத்தில் ஒட்டுக்குக் கீழுள்ள கிளையைக் கத்தியால்(V)இந்த மாதிரி பாதியறுத்து விட்டு, பிறகு 20 நாள் கழித்து மீதியுள்ள பாதியையும் அறுத்து எடுத்தால், மேல்கிளை சட்டியிலுள்ள நாற்றில் ஒட்டிக்கொண்டுவரும். இது வே ஒட்டுச்செடி. இவ்விதம் ஒட்டுச்செடிகள் கட்டுவது அதிக கஷ்டமான வேலையல்ல. ஒருதரம் தெரிந்தவர்கள் பக்கத்திலிருந்து செய்து காட்டினுல் யாவரும் கற்றுக்கொள்ளலாம்.

சேலத்து ஒட்டுமாஞ்செடிகளையே வாங்கி வைத்துப் பயிராக்க வேண்டுமென்பது இல்லை. இப்போதோ தென் ஜில்லாக்களின் பலதோட்டங்களிலும் சேலத்து ஒட்டுச்செடிகளை 15-20-வர்ஷங்களுக்கு முன்பே வாங்கிவைத்து அவைகள் பலனுக்கு வந்திருக்கின்றன. அவ்வாறு வைத்துப் பயிராக்கியிருக்கும் தோட்டக்காரர்கள் ஷை மரங்களில் ஒட்டுகள் தயார் செய்து வேண்டியவர்களுக்குக் கொடுத்து லாப மடையலாம்.

என். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர்.

VILLAGE PROSPERITY RULES.

க்ராமாபிவ்ருத்திக்குரிய ஸாதனங்கள்.

மைஸூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஸமஸ்தானத்து க்ராமவாஸிகளின் அபிவ்ருத்தியைக் கோரி அவர்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காக ப்ரசுரப்படுத்தியுள்ளவிதிகளை இங்கு எடுத்துத் தெரிவிக்கிறோம்.

(1)வேலைஇல்லாமல் ஒருவரும் சும்மாவிருக்கக்கூடாது. சோம்பேறிகளில்லாத ஊர்தான் ஸுபிக்ஷமான ஊர் என்று சொல்லப்படும்.

க்ராமத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ப்ரயோஜனமாகக் கூடிய வேலைகளை செய்யவேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய வேலையை தாமே செய்து முடிப்பதில் உத்ஸாகமுள்ளவராயிருக்க வேண்டும்.

2. வேலைசெய்யும் நேரம்:—ஒவ்வொருவரும் 6-மணி நேரத்துக் குறையாமல் 9-மணிநேரம் வரையில் வேலைசெய்ய வேண்டும். வேலையை யஜமானர் இருந்தால் ஒருமாதிரியாகவும் யஜமானர் இல்லாவிட்டால் ஒருமாதிரியாகவும் செய்யாமல், எப்போதும் ஒரேரீதியாக வேலை செய்யவேண்டும்.

3. உதவித்தொழில்:—நாம் விவஸாயம் செய்து நமக்கு சாப்பாட்டுக்குவேண்டிய பயிர்களை ஸாகுபடி செய்துகொள்வதில் எப்போதும் மழையையே நம்பிக்கொண்டிருக்கிறோம். மழை இல்லாத பஞ்சகாலங்களில் வேறு தொழில்கள் தெரிந்திருந்தால் அது ஜீவனோபாயமாயிருக்கும்.

4. கல்வியும் வேலையில்கைப்பழக்கமும்:-எல்லாவிதமான அபிவ்ருத்திக்கும் படிப்பே முக்ய ஆதாரமாயிருக்கிறது. எல்லா சிறுவர்களும், பிள்ளைகளும், பெண்களும், எழுதப்படிக்கவும் கணக்குப்போடவும் தெரிந்து கொள்ளவேண்டும். பெரியவர்கள் கூட கற்றுக்கொள்வதற்கு ரொம்ப வயஸாயிற்றென்று சொல்லக்கூடாது. இதைத் தவிர வேறு ஏதாகிலும் ஒரு கைத்தொழிலைத் தெரிந்து கொண்டிருக்கவேண்டும்.

5. வேலையின் பேரில் ப்ரியம்:—குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே வேலை செய்வதில் ப்ரியத்தை உண்டுபண்ணவேண்டும். எப்போதும் ஏதாவது ஒருவேலை செய்து கொண்டிருக்கும்படி தூண்டவேண்டும். வேலைகள் முடிந்தவுடன் விளையாட்டுகளில் சேரும்படி செய்யவேண்டும்.

6. சாப்பாட்டுக்கு தான்யம்:—க்ராமத்திலிருக்கும் தக்க குடித்தனக்காரர் ஒவ்வொருவரும் தமக்கும் தம்குடும்பத்துக்கும் குறைந்தது 2வர்ஷத்துக்குப் போதுமான அளவு பணம் அல்லது தான்ய வகையராக்களை மீத்துவைத்துக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு குடித்தனத்தலைவனும் தனக்கு ஒரு நல்ல ஸௌக்யமான கல்வீட்டை கட்டிக்கொள்ள முயலவேண்டும்.

7. நாணயமும் நம்பிக்கையும்:—வ்யாபாரத்தில் நாணயத்தையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். ஏதாவது ஒரு கார்யத்தை ஒரு குறிப்பிட்ட கெடுவுக்குள் செய்வதாக ஒப்புக்கொண்டால் அதே மாதிரி செய்து வார்த்தையைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

8. செட்டு:—உன்னுடைய வரவு செலவுக்குக் கணக்கு வைக்கவேண்டும். உன்னால் கூடியமட்டும் பணத்தை மிச்சம் பிடிக்கவேண்டும். வ்யாபாரம், விவஸாயம் இவைகளைத் தவிர வேறு விஷயங்களுக்குக் கடன் வாங்கக்கூடாது. முக்யமாக கல்யாணங்களிலும் மற்ற சடங்குகளிலும் வீண் அதிகச் செலவு செய்யக்கூடாது. செட்டாயிருந்து தான் ஸொந்தமாய் மீத்துவைத்த பணத்தைக்கொண்டு வ்யாபாரம் விவஸாயம் முதலிய துறைகளில் செலவு செய்தால் மேல் மேலும் பணக்காரனாகலாம்.

9. கூட்டுறவு:—இக்காலத்தில் கூட்டுறவால் அதாவது அநேகம்பேர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்வதால்தான் பெரிய வேலைகளும், சீர்திருத்தங்களும் நடைபெறுவது ஸுலபமாகும். ஒவ்வொருவரும் தம் தம் இஷ்டப்படி போகவேண்டுமென்றால், எதிலும் அபிவ்ருத்தி ஏற்படுவது அஸாத்யமாகும். க்ராமத்தார் எல்லாருக்கும் லாபகரமாயிருக்கும்படியான வேலை நடக்கவேண்டுமானால், தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் மனஸ்தாபங்களையும் வித்யாஸங்களையும் பாராட்டாமல் க்ராமத்தார்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து

பொது நன்மைக்குரிய வேலையைச்செய்து முடிக்கவேண்டும். க்ராமத்தில் நடந்து வரும் அல்லது நடத்தப்போகிற எந்த வேலைகளைப் பற்றியும் க்ராமத்திலுள்ள ஜனங்களில் மெஜாரிடி அதாவது பெரும்பாலார் என்ன தீர்மானம் செய்கிறார்களோ, அதை யனுஸரித்தே மற்றவர்களும் நடக்கவேண்டும். க்ராமத்தில் ஒருவருக்கொருவர் ஏற்படுகிற சண்டை தகரார் முதலியவைகளால் இரண்டு கக்ஷிகளுக்கும் மன வருத்தங்களும் கஷ்ட நஷ்டங்களும் அடிக்கடி உண்டாகின்றன. ஆகையால் அப்படிப்பட்ட விவாதங்கள் எல்லாம் கூடுமான வரையில் க்ராமத்திலேயே பைஸலாக வேண்டும். வேண்டுமானால் மத்யஸ்தர்கள் மூலமாய் பைஸல் செய்து கொள்ளவேண்டும்.

10. அநேக ஜனங்கள் சேர்ந்து வேலை செய்து நடத்திவரும் எந்தவேலைகளும் கடைத்தேற வேண்டுமானால், அவைகளில் ஸம்பந்தப்பட்ட எவரும் கார்யங்களை ஒழுங்காய்ச் செய்துவருவதோடு சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். எவரும் தமக்கு மேலிருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கற்றுக்கொள்வதோடு, தமக்குக் கீழ்ப்பட்டவர்களை அடக்கியாளவும் தெரிந்துகொள்ளவேண்டும்.

11. நல்ல நடத்தையும் சாதுர்யமும் :— இவைகள் எல்லாக்கார்யங்களும் சரிவரமுடிவு பெறுவதற்கு மிகவும் அவச்யமானவை. எப்போதும் ஸந்தோஷமாயும் மரியாதையாயும் ஸம்பாஷணை செய்யவேணும்.

12. பொது விஷயங்கள் :—ஒவ்வொருவரும் தமது சொந்த ஊர்களிலும் வெளியூர்களிலும் நடக்கிற வர்த்தமானங்களைத்தெரிந்துகொள்ள வேண்டும். தவிர ஜனங்களுடன் பேசியும், பத்ரிகைகளை வாசித்தும் உலகவர்த்தமானங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும். ரொம்ப முன்னேற்ற மடைந்திருக்கும் வெளிநாட்டு ஜனங்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதையும், அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதையும், எப்படி ஜீவனம் செய்கிறார்களென்பதையும் தெரிந்துகொள்ள ஆவலாயிருக்கவேண்டும்.

FARM YARD MANURE:

தொழுவத் தெரு.

'கமத்தொழில் விளக்கத்து' ஸமீபத்து ஸஞ்சிகை யொன்றில் இதைப்பற்றி ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது. தொழுவத் தெருவை சரியான முறைப்படி சேகரம் செய்தால், பயிர்களுக்கு மிகவும் முக்யமான உணவுப் பொருள்களாகிய பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ், நைட்ரோஜன் ஆகிய இந்த மூன்று பொருள்களும் அதில் அதிக அளவு அடங்கியிருக்கும். பாஸ்பாரிக்ஆஸிடும் பொடாஷும் ஜலத்தில் கரைந்துபோகக் கூடுமாகையால், தொழுவத்தெருவை வெயில், மழை, காற்று ஆகிய இவைகளால் கெட்டுப்போகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். எருசேகரிப்பதில் இரண்டு மேலான முறைகள் இருக்கின்றன. அவைகளாவன மாட்டுத்தொட்டி முறை (பள்ளத்தொழுவம்); குழிமுறை ஆகிய இவைகளே. பள்ளத்தொழுவமுறை பின்வருமாறு. ஒரு ஜோடிமாடு கட்டவேண்டுமானால் 5-முழம் நீளம் 4-முழம் அகலம் உள்ள ஒரு கொட்டகை கட்டி, அதன் கீழ் பூமியை 2 அல்லது 3 அடி ஆழம் வெட்டி மாடு போடும் சாணம், மூத்ரம் ஆகிய இவைகளின் ஸாரம் பூமியில் சுவறிப்போகாதபடி அடியில் காறையாவது ஸிமெண்டாவது போட்டு, மாடுகள் உள்ளே போக ஒரு வழிவிட்டு, சுற்றிலும் தாழ்வான சுவர் வைத்து, நாலு மூலையிலும் மாட்டுக்குத்தீனி போடுவதற்கு இடம் அமைத்துக் கட்டவேண்டும். கூளம், மாடு கழித்த வைக்கோல், தழை முதலியவைகளை தரையில் பரப்பி மாடுகளை உள்ளேவிடவேண்டும். இரவில் மாடுகள் போடும் சாணமும், மூத்ரமும் குப்பை கூளத்தில் ஊறிக்கொ

ண்டு விடும். மறுநாள் சாணத்தை குப்பை கூளத்தில் பரவலாய்ப் போட்டு அதன்மேல் மறுபடியும் முன்போலவே குப்பை, மாடு கழித்த வைக்கோல்முதலியவைகளைப்போட்டு மாட்டைக் கட்டிவைக்கவேண்டும். இப்படி சிலகாலம் செய்துவந்தால் சாணமும் மூத்ரமும் குப்பை கூளங்களோடு கலந்து நல்ல எருவாகும்.

குழிமுறை பின்வருமாறு:—5-முழம் நீளம் 5-முழம் அகலமுள்ள ஓர் பந்தல் ஒன்று போட்டு, அதன் கீழ் 3-முழஆழமுள்ள ஒரு குழி வெட்டி, எருவாரம் பூமியில் கவுறிப்போகாதபடி குழியின் அடியில் காறையாவது ஸிமெண்டாவது பூசி, அதில் தினந்தோறும் சேரும் சாணி, குப்பை, கூளம், சாம்பல் முதலியவைகளைக் கொட்டி வைத்து வந்தால் குழிநிரம்பி எருவும் குப்பையும் சேர்ந்து மட்கி நல்ல எருவாகும்.

COTTON PRODUCTION.

பருத்தியின் விளைவு.

அநேக வர்ஷங்களாய் அமெரிக்காவில்தான் அதிகமாகப் பருத்தி விளைகிறதென்று யாவரும் சொல்வதுண்டு. 1912-13-ம் வர்ஷத்தில் உலகத்தில் உண்டான பருத்தியில் மூன்றில் இரண்டு பாகம் அமெரிக்காவில் விளைந்தது. ஆனால் 1913-14-ம் வர்ஷத்திலோ அமெரிக்காவின் பருத்தி மாஸூல் ரொம்ப ஜாஸ்தியாயிருந்தும், மற்ற தேசங்களின் மொத்த மாஸூலைவிடக் குறைந்துபோயிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. இதற்குக் காரணமென்னவென்றால், இங்கிலண்ட், ப்ரான்ஸ், ஜெர்மனி, ஆசியா கண்டத்திலுள்ள தேசங்கள் ஆகிய இவைகளிலும் இவைகளைச்சேர்ந்த குடியேற்ற நாடுகளிலும் பருத்தி ஸாகுபடியை அதிகரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதே. இதல்லாமல் அமெரிக்காவிலேயே பருத்தி ஸாகுபடியின் செலவு அதிகமாகிவிட்டதாம். இந்தியாவில் சென்ற 1911-12-ம் வர்ஷத்தில் கிட்டத்தட்ட 33 லக்ஷம் பேல் பருத்தி விளைந்திருக்க, 1913-14-ம் வர்ஷத்தில் 52-லக்ஷம் பேல் பருத்தி கிடைத்திருக்கிறது. பின்வரும் கணக்குகளால் இன்னின்ன மாகாணங்களில் இவ்வளவு பருத்தி விளைந்ததென்பது தெரியவரும்.

	1913-14.	1912-13.	1911-12.
மாகாணங்களும் ராஜ்யங்களும்	பேல்கள்	பேல்கள்	பேல்கள்
பம்பாய்	1,397,000	1 324,000	599,000
மத்யமாகாணங்களும் பேராரும்	961,000	910,000	918,000
மதராஸ்	513,000	471,000	335,000
பஞ்சாப்	594,000	373,000	241,000
ஐக்யமாகாணங்கள் ...	484,000	428,000	251,000
ஸிந்து	133,000	123,000	124,000
பர்மா	60,000	46,000	32,000
பீஹாரும் ஒரிஸ்ஸாவும் ...	19,000	19 000	19,000
பெங்கால் ...	13,000	21,000	25,000
வடமேற்கு எல்லை மாகாணம்	14,000	13,000	12,000
அஸ்ஸாம் ...	12,000	10,000	11,000
அஜ்மீர்-மீர்வாரா ...	15,000	26,000	12,000
ஹைதராபாத் ...	400,000	300,000	300,000
மத்ய இந்தியா ...	273,000	206,000	22,000
பரோடா ...	175,000	196,000	96,000
ராஜபுதனம் ...	132,000	125,000	73,000
மைசூர் ...	16,000	19,000	17,000
மொத்தம் ...	5,201,000	4,610,000	3,288,000

A NOVEL METHOD OF HATCHING.

முட்டைகளைக் குஞ்சுபொரிக்க வைப்பதில் ஒரு நூதன முறை.

சீனாவில் கோழிமுட்டைகளைக் குஞ்சுபொரிக்க வைப்பதற்கு ஒரு நூதன முறை அனுஷ்டிக்கிறார்களாம். இந்த முறையில் கோழிகள் வேண்டியிருப்பதில்லையாம். அந்த முறையின் விவரம் பின்வருமாறு.

முதலில் அவர்கள் நெல்லை எடுத்துக்கொண்டு அதை இளம் வறுப்பாய் வறுக்கிறார்கள். வறுத்த பிற்பாடு அதைக் கொஞ்சம் வெதுவெதென்ற சூடாகும் வரை குளிர வைக்கிறார்கள். பிற்பாடு ஒரு மரத்தொட்டியில் இந்த நெல்லை 3 அங்குலம் உயரத்துக்குப் பரப்பி அதன்பேரில் 100 முட்டைகளை வைக்கிறார்கள். இதற்கு

மேல் இரண்டு அங்குல உயரத்துக்கு நெல்லைப் பரப்பி அதன்மேல் 100 முட்டைகள் வைக்கிறார்கள். இப்படி 6-தரம் நெல்லைப் பரப்பி 5 தடவை முட்டைகளை வைக்கிறார்கள். இப்படியாக ஒவ்வொரு தொட்டியிலும் 500 முட்டைகள் வைக்கப்படும். இந்த நெல்லை 24 மணிக்கு ஒரு தடவை வறுத்து சுடவைக்க வேண்டும். இப்படி நெல்லை வறுக்கும்போது முட்டைகளை எடுத்துவிடுவார்கள். முட்டைகளை எடுத்துவிட்டு மறுபடியும் பரப்பும்போது, கீழ் வரிசை முட்டைகள் மேல்வரிசையிலும், அதற்கடுத்த மேல்வரிசை முட்டைகள் 2-வது வரிசையிலும் இவ்விதமாக வைக்கப்படவேண்டும். முதல் வரிசையிலிருந்த முட்டைகள் கடைசிக்குப் போய்விடவேண்டும். இப்படி தொட்டியில் பரப்பிவிட்டு தொட்டியை பருத்தியால் மூடிவிடுகிறார்கள்.

கோழிக்குஞ்சுகளும் வாத்துக்குஞ்சுகளும் 20-நாளிலிருந்து 30-நாளைக்குள் உற்பத்தியாகின்றன. இந்தக் குஞ்சுகள், பெட்டைகளிலிருந்து குஞ்சு பொரித்தால் அந்தக் குஞ்சுகள் எவ்வளவு திடகாத்ரமாயிருக்குமோ, அவ்வளவு திடகாத்ரமா யிருக்கின்றனவாம்.

CHAFF IN PADDY.

நெல்லில் பதர்.

நெல்லில் பதர் ஜாஸ்தியாவதும் குறைவதும் அநேக காரணங்களைப்பொருத்திருக்கின்றன. அவைகளில் சில பின்வருமாறு:—

1. பயிர் கதிர்வாங்கஆரம்பிக்கும்போது அககம்பக்கத்திலுள்ள பயிர்களில் கதிர்வாங்காமல் ஒரு பயிர்மாத்ரம் கதிர் வாங்கினால், அதை ஈக்கள் வந்து குடித்து அந்தக் கதிர்களை சப்பிவிடும். அப்போது கதிர் சரியானபடி பிடிக்காமல் பதராகும். இதற்கு சில இடங்களில் ஈக்குடி என்றும், மற்றும் சில இடங்களில் காவாய் என்றும் சொல்வதுண்டு. இந்த ஈக்களை ஒரு வலையினாலாவது அல்லது வேஷ்டியினாலாவது பிடித்துக் கொன்றுவிடலாம்.

2. பயிர் கதிர் பருவமாகும்போது, தண்டில் ஓர்வித புழு இருந்து த்வாரம்செய்து கதிரடைந்த தண்டைக் காயச்செய்கிறது. இப்புழு தாக்கும்போது ஜாஸ்தி பதர் உண்டாக ஏதுவாகும். இந்தப் பூச்சி தாள்களில் முட்டையிட்டு வைக்கும். முட்டைகள் நெடுநாள் தாள்களிலேயேயிருந்து அப்பால்பயிராகும்போது மறுபடியும் பயிரைப் பிடிக்கின்றன. ஆகையால் இந்நோய் தாக்கிய இடங்களில் பயிர் மாஸூல் ஆனபின், தாள்களை வயலில் விட்டுவைக்காமல் அவைகளை உழுதாவது அல்லது மற்ற எவ்விதத்திலாவது அப்புறப்படுத்த வழிதேடிக் கொள்ளவேண்டும்.

3. கதிர் வாங்கும் ஸமயத்தில் சரியான ஜலவஸதியாவது மேல்மழையாவது இல்லாவிட்டாலும், புஷ்பித்தவுடன் ஜாஸ்தி மழையாவது அல்லது ஜாஸ்தி காற்றாவது அடித்து புஷ்பங்களை உதிர்த்துவிட்டாலும், மணி சரியானபடி பிடிக்காமல் பதர் ஜாஸ்தியாவதற்கு இடமுண்டாகும்-என்று 'கிருஷிகன்' எழுதுகிறது.

SEED COTTON.

விதைப் பருத்தி.

பருத்திவிதை முதலில் மூன்றுதரம் எடுக்கும் பருத்தியிலிருந்தாவது, கடைசியில் ஓய்ந்த காலத்தில் எடுக்கும் பருத்தியிலிருந்தாவது எடுக்காமல், 4, 5, 6-வது தரம் எடுக்கும் பருத்தியிலிருந்து தெரிந்தெடுக்கவேண்டும். அப்போதும் நோயில்லாமல் நன்றாய் வளர்ந்தும், அதிகமாய்க் காய்ந்தும், திரண்டுருண்டிருக்கும் காய்களிலிருந்து வெடிக்கும் பருத்தியிலிருந்து விதையெடுத்து விதைத்தால்தான் நல்ல மாஸூல் அடையலாம்.

கம்போடியாப் பருத்தி சரியான மாஸூல் கொடுக்காமலிருப்பதற்கு அநேக காரணங்களுண்டு. மேற்சொன்ன முறைப்படி விதை

யெடுக்காவிட்டாலும், பயிர் நோயால் பீடிக்கப் பட்டாலும், நன்றாய் புஷ்பித்திருக்கும்போது அதிக மழைபடித்தாலும், தண்ணீர் அதிக மாய்ப் பாய்ச்சினலும், இளஞ்செடிகளா யிருக்கும்போது மழையில் அடிபட்டாலும், வடிகால் வஸதியில்லாம லிருந்தாலும் மாஸூல் குறைந்துபோகும்.

AGRICULTURAL EDUCATION TO PRISONERS IN JAIL.

ஜெயில் கைதிகளுக்கு விவஸாயக் கல்வி.

தஞ்சாவூர் ஜெயிலிலுள்ள வயஸான கைதிகளுக்கு விவஸாயக் கல்வி கற்பிப்பதற்காக மாஸம் 50-ரூபாய் சம்பளத்தில் ஒரு விவஸாய போதகரை ஒரு வர்ஷத்துக்கு கவர்ன்மெண்டார் நியமித்திருக்கிறாகள். பரீக்ஷார்த்தமாக செய்யப்படும் இந்த ஏற்பாடு த்ருப்திகரமாக நடந்து வந்தால் இதை எப்போதும் நடந்து வரும்படி செய்வாராகளாம். இந்த ஏற்பாடு மிகவும் ச்லாகிக்கத் தக்கதாகும். இது நன்றாய் நடநது வருமானல் குற்றங்கள் செய்து தண்டிக்கப்பட்ட கைதிகள் ஜெயிலிலிருந்து விடுதலையான பிறகு, நல் வழியில் திருந்தி நன்னடத்தையுடன் காலக்ஷேபம் செய்வதற்கு இடமேற் படுவதோடு, சாஸ்த்ரீய விவஸாயம் பரவுவதற்கும் ஸுலபமான மார்க்கம் ஏற்படும்.

MARKET GARDENING.

விற்பனைக்காக காய்கறிகள் ஸாகுபடி செய்தல்.

விற்பனைக்காக காய்கறிகள் ஸாகுபடிசெய்யும் தொழிலானது மேல்நாடுகளில் ப்ரபலமடைந்திருப்பதுபோல் இந்தியாவில் ப்ரபலமடைந்திருக்க வில்லையென்று சொல்லலாம். இந்தத்தொழில் பட்டணங்களுக்கு ஸமீபத்தில்தான் நன்றாய் நடந்து வரக்கூடும். இந்தியாவில் பட்டணங்கள் மிகக்குறைவாதலால் இந்தத்தொழில் ரொம்ப வ்ருத்தியாகாமலிருக்கிறது. ஆனல் அநேக பெரிய ஊர்களில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டு வருவதால் இந்தத்தொழில் வ்ருத்தியடைய மார்க்கம் ஏற்படுமென்று சொல்லலாம்.

காய்கறி ஸாகுபடியில் நாம் சிலவிஷயங்கள் ரொமபவும் முக்யமாய் கவனிக்க வேண்டியிருக்கிறது. இவைகளில் விதைவிஷயம் முக்யமானது விதைகள் நன்றாயிராவிட்டால் தக்க பலனடைவதென்பது முடியாது. மேல்நாடுகளிலும் ஆஸ்ட்ரேலியா கண்டத்திலும் காய்கறித் தோட்டக்காரர்கள் விதைகள் விஷயத்தில் ரொம்ப கவலையெடுத்துக் கொள்ளுகிறார்கள். நல்லவிதைகளுக்கு ஐந்து லக்ஷணங்களிருக்கவேண்டும்.

(1) விதைகள் சுத்தமாயும் வேறு ஜாதிகள் கலக்காமலுமிருக்கவேண்டும்.

(2) விதைகளை விதைத்தால் அந்தந்த ஜாதிகளில் ரொம்ப உயர்ந்த தினுஸான பயிர், காய் அல்லது பழம் கிடைக்கவேண்டும்.

(3) விதைகளில் பெரும்பாகம் முளைக்கக் கூடியனவாக இருக்கவேண்டும்.

(4) அவைகளோடு களைகளின் விதைகள் கலந்திருக்கக்கூடாது.

(5) விதைகளில் சிறு பருக்கைக்கற்கள், குச்சிகள், 'தூசி துப்புகள்' முதலியவை இருக்கக்கூடாது.

விதைகள் எவ்வளவு காலம் கெடாமலிருக்குமென்பது காய்கறிகளின் தினுஸுகளுக்குத் தக்கபடியும், அவைகள் பயிராகும் நிலைமைக்குத் தக்கபடியும் வித்யாஸப்படும். விதைகளை யெடுத்தவுடன நன்றாய்க் காயவைத்து அதை பத்ரப்படுத்துவதில் ரொம்ப ஜாக்ரதையெடுத்துக்கொண்டால் விதைகள் அதிககாலம் கெடாமலிருக்கும்.

இந்தியாவில் உபயோகப்பட்டுவரும் சில சீமைக் காய்கறிகளின் விதைகள் எவ்வளவு காலம கெடாமலிருக்கு மென்பதைக் கீழே குறிப்பிடுகிறோம்.

	வர்ஷங்கள்.
பீன்ஸ்	3
காபேஜ் (முட்டை கோஸ்)	3
காரட்	1
கக்கரி	5
சீமைக்கத்தரி	5
சலாதுக்கீரை (லெட்டிஸ்)	4
வெங்காயம்	1
முள்ளங்கி	2

DOUBLE SEEDLING PLANTING.

இரண்டு அலகு நடுதல்.

நெல் ஸாகுபடியில் ஒற்றை நாற்று நடாமல் இரண்டு நாற்றுகளாகச் சேர்த்து நடுவதால் லாபமுண்டா என்பதை யறிவதற்காக ஸாமல் கோட்டா விவஸாயப்பண்ணையில் சென்ற 5-வர்ஷங்களாகப் பரீக்ஷை செய்து பார்த்தார்கள். ஒற்றை நாற்றுப் நடாமல் இரண்டு நாற்றுகள் சேர்த்து நடுவதற்கு அதிகப்படியாக நாற்றுகள் செலவாவதற்குத் தகுந்தபடி அதிக மாஸூல் கிடைக்கவில்லையென்று அந்தப் பரீக்ஷைகளால் தெரியவந்தது. ஆகவே ஒற்றை நாற்று நடுதலே நல்ல முறையாகும்.

DESTRUCTION OF WEEVIL.

அந்துகளை அழித்தல்.

தான்யங்களில் அந்து உற்பத்தியாகி அவைகளை சேதப்படுத்துவதை எல்லோருமறிவார்கள். அவைகளைத் தொலைப்பதற்கு இரண்டு வழிகளுண்டு. ஒன்று தான்யங்களை நன்றாய் ஈரம் போகக் காயவைத்தபின் சேர் கட்டுதல். மற்றொன்று அப்படி காய்ந்த தான்யங்களை சேர்கட்டும்போது இடையிடையே கொஞ்சம் கஞ்சாங்கோரை இலைகளைப் பேர்டுவதே. இப்படிக் கட்டப்படும் சேர்களில் அந்துகள் உற்பத்தியாவதில்லையென கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.—'விச்வகர்ம குலோபகாரி.'

URINE DRINKING BY CATTLE.

மாடுகள் மூத்ரம் குடிப்பது.

மாடுகள் மூத்ரம் குடிப்பது மாட்டுத் தீவனத்தில் உப்பு ஸத்து குறைந்திருப்பதனுல் தான். மாடுகளுக்குப் பருத்திக்கொட்டைப் பிண்ணாக்கு முதலிய தினுஸுகள் கொடுக்கும்போதும், கஞ்சித்தண்ணீர் முதலிய தண்ணீர் காட்டும்போதும், மாடு ஒன்றுக்கு, தினம் 1-க்கு 3 ரூ. எடை வரை சாப்பிடும் உப்புகொடுத்துக்கொண்டு வந்தால், இப்பேர்ப்பட்ட மூத்ரம் குடிக்கும் வழக்கம் வந்தே இருக்கமாட்டாது. மூத்ரத்தைக் குடிக்கும் மாடுகள் ஸாதாரணமாய் இளைத்துக்கொண்டு வருவதுண்டு. கழுத்தில் முக்காணியைப்போல் ஓர்வித உபாயம் மூங்கிலில் செய்து, மாட்டுக் கழுத்தில் போட்டு வைத்திருந்தால், அம்மாடு மூத்ரத்தைக் குடிக்க கழுத்தைத் திருப்பும்போது, முக்காணியின் முனைகள் கழுத்தில் குத்தி அவ்வுபத்ரவத்தினுல் மாடு மூத்ரத்தைக் குடிக்கும் பழக்கத்தை விட்டுவிடும்.

POULTRY MANURE.

கோழி எரு.

ஒரு பெரிய கோழி வர்ஷம் ஒன்றுக்கு 80-ராத்தல் முதல் 90-ராத்தல் வரையில் எச்சமிடும். கோழிகள் தங்கியிருக்கும் இடங்களை தினந்தோறும் பெருக்கி, அங்கேயுள்ள குப்பையையும் எச்சத்தையும் வாரி, ஆடுமாடுகளின் சாணம் முதலியவைகள் போட்டு வைக்கும் எருக்குழியில் கொட்டிவைத்துக் கொள்ள வேண்டும். இந்த எரு பழமரங்களுக்கு ரொம்ப ச்லாக்யமானது.

The Co-operative World.

கோவாபரேஷன் பகுதி.

AGRICULTURAL CO-OPERATIVE SOCIETIES.

விவஸாய கோவாபரேடிவ் ஸங்கங்கள்.

சில காலமாக அநேகம் பேர் கவர்ன்மெண்டார் கோவாப்ரெடிவ் நாணய ஸங்கங்களை மாத்ரம் வ்ருத்திசெய்ய அதிக கவனம் செலுத்தி வருகிறார்களென்றும், கோவாபரெடிவ் முயற்சியால் பூராப்பலன் கிடைக்கவேண்டுமானால் இந்தியா முழுவதும் விவஸாய கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொல்லி வருகிறார்கள. ஸமீபத்தில் கோவாபரெடிவ் ஸங்க சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதில், விவஸாய கோவாபரேஷன் வ்ருத்தியடைவதற்கு ஒரு தூண்டு கோல் ஏற்பட்டிருக்கிறது.

இதனால் அநேகர் அன்ய நாடுகளில் கோவாபரேஷன் விஷயமாய் நடந்துவரும் முயற்சிகளையும், அவ்விடத்திய அநுபவங்களையும் அநுஸரித்து இந்த தேசத்திலும கோவாபரேஷனை அபிவ்ருத்திசெய்ய பல ப்ரேரணைகள் சொல்ல முன் வருவார்கள். ஆனால் விவஸாயகோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிக்கு முன் ஐக்யமுறையில் விவஸாய ஸம்பந்தமான வேலைகளை நடத்தவேண்டியது அவச்யமென்ற எண்ணம் ஜனங்களுக்குள் உண்டாக வேண்டியது அவச்யமாகும். இந்த விஷயத்தைப் பற்றி சென்னை விவஸாய டிரெக்டராகிய மிஸ்டர் சாட்விக் விரிவாக ஒரு வ்யாஸம் எழுதி ஸமீபத்தில் நடந்த கோவாபரெடிவ் கான்பரென்ஸில் வாசித்தார். அதன் ஸாராம்சத்தை கீழே எழுதுகிறோம்.

அவர் ஒரு ஊரில் விவஸாய கோவாபரேடிவ் ஸங்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்னால் அந்த ஊரின் நிலைமைகள் யாவற்றையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது ரொம்பவும் அவச்யமென்று சொல்லுகிறார். எந்த இடத்திலாவது விவஸாய ஸங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்றால், அந்த இடத்தின் நிலைமைகளை நன்றாய் பரிசோதித்துத் தெரிந்து கொள்ளாமலே அவ்விடத்தில் விவஸாய கோவாபரேடிவ் ஸங்கம் ஏற்படுத்தி வ்ருத்திசெய்யலாம் என்று எண்ணுவது பிசகாகும். அல்லாமலும் விவஸாய கோவாபரேடிவ் ஸங்கங்களை ஏற்படுத்தி நடத்துவது கோவாபரேடிவ் நாணய ஸங்கங்களைப்போல அவ்வளவு ஸுலபமல்ல. விவஸாய கோவாபரேடிவ் ஸங்கம் ஒன்றை ஓர் ஊரில் ஏற்படுத்தி நடத்தவேண்டு மென்றால், கீழே சொல்லிய இரண்டு விஷயங்களைப்பற்றி நன்றாய் பரிசீலனை செய்யவேண்டும்.

(1) விவஸாயிகளுக்கு தாங்கள் வேளாண்மை செய்து மாஸூல் விளைவிப்பதற்கு தேவையாயிருக்கும் ஸாமான்கள் கிடைப்பதிலாவது அல்லது விளைந்த மாஸூலை சேகரம்செய்து தகுந்தபடி விற்பனை செய்வதிலாவது ஏதாவது நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றனவா? அவ்விடத்து விவஸாயிகள் ஒன்று சேர்ந்து நடந்துகொள்வதால் அந்தநிர்ப்பந்தங்கள் நீங்கவோ, குறையவோ கூடுமா?

(2) அந்த ஊரில் ஸங்கங்கள் ஸம்பந்தமான வேலைகளை கவனித்து பார்க்கவும், பிசகு புரட்டில்லாமல் வேலைகளை மேற்பார்வை பார்த்து நிர்வகிக்கவும் யோக்யதையும் தொழில் அறிவும் உள்ளவர்களிருக்கிறார்களா?

விவஸாய ஸங்கங்கள் ஏற்படுத்துவதில் லாபகரமாய் நடக்குமோ, நஷ்டம் ஏற்படுமோ என்ற ஸந்தேகம் இல்லாமல், திட்டமாய் லாபகரமாய் நடக்கக்கூடிய வேலைகளைச் செய்

வதற்கே ஸங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். மேலும் அந்த ஸங்கம் ஊரார் எல்லாருக்கும் பழக்கமாயுள்ள வேலைகளை செய்வதாயுமிருக்க வேண்டும். சில ஊர்களில் கால்நடைகள் விலை ரொம்ப அதிகமாயிருப்பதால் க்ராம வாஸிகளுக்கு ரொம்ப ச்ரமம் ஏற்படலாம். ஆனால் அந்தக் காரணத்தைக்கொண்டே, ஒரு க்ராமத்தில் கால்நடை யபிவ்ருத்தி ஸங்கம ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஸங்கத்தில் சேரக்கூடியவர்களுக்கு கால்நடை வளர்ப்பதைப்பற்றிய விஷயங்களில் கொஞ்சமும் பரிச்சியமிருக்காது. மேலும் கால்நடை வளர்ப்பதற்கு வேண்டிய ஸாதனங்கள் குறைவாயிருக்கக்கூடும். இப்படியிருக்க அவ்வூரில் கால்நடையபிவ்ருத்தி ஸங்கம் ஏற்படுத்துவதென்பது லாபம் ஏதோ வாரிக் கொட்டி விடலாமென்று துணிந்து செய்யும் தொழில் போலாகும்.

ஆனால் எந்த இடங்களிலாவது விவஸாயிகள் தாங்கள் ஸாகுபடி செய்யும் ப்ரதானப் பயிர்களுக்கு வேண்டியிருக்கக்கூடிய எருவும கால்நடைகளுக்கு வேண்டிய தீவனமும் வெளியூர்களிலிருந்து வந்து கொண்டிருந்து, அவைகளை விவஸாயிகள் வாங்குமுன் அவைகள் அநேக வ்யாபாரிகள் கைமாறி வருவதாயிருந்தால், அந்த இடங்களில் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்த வஸதிகளிருக்கின்றன வென்று சொல்லலாம். அவ்விடங்களில் ஒரு கோவாபரெடிவ் ஸங்கம ஏற்படுத்தி தக்கவிதமாக நிர்வகித்து வந்தால் எருக்கள், பிண்ணாக்குகள் முதலியவைகளை ஒவ்வொரு விவஸாயியும் தனியாக வாங்கினால் கிடைக்கக்கூடிய லாபத்தைவிட ரொம்ப மலிவாயும், நல்ல சரக்காகவும் விலைக்கு வாங்கலாம். இப்படிப்பட்ட ஸங்கங்கள் அநேக இடங்களில் ஏற்படுத்தலாம். ஆனால் எந்த இடத்தில் இந்த ஸங்கம் ஏற்படுத்துவதாகச் சொன்னாலும், அந்த இடத்தின் வ்யாபார நிலைமை எப்படியிருக்கிறதென்பதை முன்னாடியே நன்றாய் அறிந்து கொள்ளவேண்டியது ரொம்ப அவசியமாகும்.

CO-OPERATIVE PROGRESS IN INDIA.

இந்தியாவில் கோவாபரேஷனின் முன்னேற்றம்.

விவஸாயம் செய்பவர்கள், தொழிலாளிகள், இன்னும் ஸ்வல்ப வருமபடியுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்குள் செட்டு, பிறருடைய உதவியை எதிர்பார்க்காமல் தாமே முயற்சி செய்தல், கூட்டுறவு முதலான குணங்களை வ்ருத்தி செய்யும் பொருட்டு கவர்ன்மெண்டார் 1904-ம் வர்ஷத்தில் கோவாபரெடிவ் க்ரெடிட் ஸொஸைடிஸ் ஆக்ட் என்று ஒரு சட்டம் செய்தார்கள். பிறகு 1912-ம் வர்ஷம் மார்ச்சு மாஸத்தில் அதை ரத்துசெய்து கோவாபரெடிவ் ஸொஸைடிஸ் ஆக்ட் (1912-ம வர்ஷத்திய 2 வது ஆக்ட்) என்று ஒரு திருத்தச்சட்டம் செய்தார்கள். கோவாபரெடிவ் ஸங்கங்கள் விவஸாய ஸம்பந்தமான ஸங்கங்களென்றும், விவஸாய ஸம்பந்தமல்லாத ஸங்கங்களென்றும் இரண்டு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. விவஸாய ஸம்பந்தமான ஸங்கங்களிலிருக்கும் மெம்பர்களில் விவஸாயிகள் 5-ல் 4-பங்குக்குக்குறையாமல் சேர்ந்திருக்க வேண்டும். அதே மாதிரி, விவஸாய ஸம்பந்தமல்லாத ஸங்கங்களில் மெம்பர்களில் 5-ல் 4 பாகம் விவஸாயிகளல்லாதவர்களா யிருக்கவேண்டும். ஒவ்வொரு ஸங்கத்திலும் 18 வயஸுக்குமேல் பட்டவர்களாக 10 அல்லது அதற்கு அதிகமான மெமபர்களிருக்க வேண்டும். இவர்கள் ஒரே க்ராமத்தில அல்லது க்ராமத்தொகுதியிலிருப்பவர்களாகவாவது, ஒரே ஜாதி, வகுப்பு, அல்லது இனத்தைச்சேர்ந்தவர்களாகவாவது அல்லது ஒரே தொழிலைச் செய்பவர்களாகவாவது இருக்கவேண்டும். இதனடியில் கண்டிருக்கும் கணக்கிலிருந்து 1908—09 முதல் 1912—13-ம் வர்ஷம் வரையில் கோவாபரெடிவ் முயற்சி எப்படியிருந்ததென்பது தெரியவரும்.

	1908-09	1909-10	1910-11	1911-12	1912-13
சங்கங்களின் எண்ணிக்கை—					
சென்ட்ரல் ...	15	31	59	120	224
விவசாய ஸம்பந்தமானவை ...	1,738	3,106	4,894	7,562	10,966
விவசாய ஸம்பந்தமல்லாதவை ...	210	291	368	495	582
மொத்தம் ...	1,963	3,428	5,321	8,177	11,792
மெம்பர்களின் எண்ணிக்கை ...	180,388	224,397	305,058	403,318	648,888
மூலதனம்—	ரு.	ரு.	ரு	ரு.	ரு.
கடன்கள் ...	40,30,436	64,87,316	1,12,81,153	1,98,87,310	3,24,08,064
பங்குபணம் ...	13,71,123	21,49,644	31,69,695	60,58,037	79,05,935
மெம்பர்கள் செய்த டிபாஸிட் ...	16,05,237	24,93,015	41.83,979	65,07,698	91,26,809
ஸர்க்கார் உதவி ...	6,85,493	7,20,433	7,28,455	9,34,668	9,43,308
ரிஸர்வ் பண்டு ...	1,90 929	3,90,620	5.51,320	9,92,454	15,55,622
மொத்தம் ...	79,33,218	1,21,81,027	1,99,04,602	3,33,80,162	5,19,39,788
பட்டுவாடா—					
மெம்பர்களுக்கு திருப்பிக்கொடுத்த டிபாஸிட் ...	7,39,227	10,29,115	20,45,671	40,39,974	92,40,603
திருப்பிக்கொடுத்த கடன் ...	23,98,625	28,48,466	41,08 588	96,36,223	1,61,10,337
கடனுக்கொடுத்தது ...	77,08.347	1,03,89,114	1,69,72,824	2,58,93,879	4,14,87,282
வாங்கின கடனுக்கும் டிபாஸிட்டுக்கும் கொடுத்த வட்டி	2,27,584	4,59,889	7,82,508	13,10,193	21,92,458
டிவிடெண்டு, போனஸ் கொடுத்தது ...	45,309	63,325	1,14,182	1,41,701	3,02,113
ஸிப்பந்தி, இல்லாரச் செலவு ...	75,139	1,10,440	1,58,135	2,60,652	4,25,379
இதர பாபத்துக்கள் ...	10,26,807	9,05,553	14,15,086	19,73.783	26,83,324
மொத்தம். ...	1,22,21,038	1,58,05,901	2,56,96,994	4,26,56,405	7,28,41,496

CO-OPERATIVE BANKS.

கோவாபரேடிவ் பாங்கிகள்.

பம்பாய் கவர்ன்மெண்டார் கோவாபரெடிவ் பாங்கிகளைப்பற்றி பத்திரிகைகளுக்கு ஸமாசாரம் தெரிவிப்பதற்காக வெளியிடப்படும்ப்ரெஸ் நோட் என்று சொல்லப்படும் ஒரு அறிக்கைப் பத்ரம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பின்வரும் விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஒரு நபருக்கும் கோவாபரேட்டிவ் பாங்கி, யூனியன் ஆகிய இவைகளில் இப்போது 1000 ரூபாய்க்குமேல் பங்குகள் விற்கக்கூடாதென் றிருக்கும் நிபந்தனையால் சில ஸமயங்களில்

மேற்படி பாங்கிகளுக்கும், யூனியன்களுக்கும் போதுமான மூலதனம் வஸூல் செய்வதில் ரொம்ப கஷ்டம் ஏற்படுகிறதென்பதை யுத்தேசித்து, சென்ற வர்ஷம் நடந்த பம்பாய் ப்ரொவின்ஷியல் கோவாபரேடிவ் கான்பரென்ஸ் ஒரு நபருக்கு 1000 ரூபாய் வரையில் தான் பங்குகள் விற்கலாமென்றிருப்பதை மாற்றி, 3000 ரூபாய் வரையில் விற்பதற்கு பாங்கிகளுக்கும் யூனியன்களுக்கும் அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் செய்து அனுப்பிற்று. கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தில் கண்டிருக்கும் கொள்கையை ஏற்றுக்கொண்ட போதிலும், அதைப்பற்றி பொதுவாக அதிகாரம் கொடுப்பது அவச்யமாகவும்உசிதமாகவுமில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் எந்த ஸங்கமாவது ஒருஷேர் ஹோல்டருக்கு 3000 ரூபாய் வரையில் பங்குகள் விற்க அதிகாரம் வேண்டுமென்று விரும்பினால், அந்த ஸங்கம் கவர்ன்மெண்டாருக்கு இது விஷயமாய் மனுப்போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஸங்கங்களுக்கு ஷை அதிகாரம் கொடுக்கு முன், அதிக பங்குள்ளவர்களுக்கு அனாவச்யமாய் அதிக அதிகாரம் ஏற்படாமலிருக்கும்படிக்கு ஸொஸைட்டிகள் தங்களுடைய பைலாக்களை தகுந்தபடி மாற்றியிருக்கவேண்டுமென்றும் கவர்ன்மெண்டார் சொல்லுகிறார்கள். கோவாபரேடிவ் ஸொஸைடிஸ் ஆக்ட் 21-வது ஸெக்ஷன்படி இப்போது ஒரு ஸங்கத்திலிருக்கும் பங்குகளை ஸிவில் கோர்ட்டார் ஜப்தி செய்யக்கூடாதென்றிருப்பதை மேலே சொல்லியபடி அதிக பங்குகள் விற்க அனுமதி பெறும் ஸங்கங்களுக்கு அன்வயிக்காமல் ரத்து செய்யப்படுமென்றும் கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள். ஏனென்றால் அப்படிப்பட்ட ஸங்கங்களில் மெம்பர்களாயிருப்பவர்கள் கூடுமான வரையில் பணக்காரர்களாகவே இருக்கக்கூடுமாகையால் அவர்கள் தங்களுடைய நன்மையைத்தாங்களே பாதுகாக்கக் கூடிய நிலைமையிருப்பார்கள்.

MR. WACHA ON CO-OPERATION.

கோவாபரேஷனைப்பற்றி மிஸ்டர் வாச்சா சொல்வது.

இந்திய விவஸாயிகள் ஐக்ய முயற்சியால் தான் கடைத்தேற வேண்டுமென்று அங்கங்கே கவர்ன்மெண்டாரும் ப்ரமுகர்களும் ஐக்ய முயற்சியை வ்ருத்தி செய்ய பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் இந்திய தேசாபிமானிகளில் ஒருவரும், ஜனங்களைப்பற்றிய பொருளாதார நிலைமையை ஆராய்ச்சி செய்வதில் நிபுணருமாகிய மிஸ்டர் டி. இ. வாச்சா ஐக்ய ஸங்கங்களால் இந்திய விவஸாயிகளுக்கு ஒரு நன்மையும் உண்டாகப் போகிறதில்லையென்றும், அவைகள் கடைசியில் வீணான வேலையாய்த் தான் முடியுமென்றும் எழுதுகிறார்.

இந்திய விவஸாயிகளை கடனிலிருந்து விடுவித்து அவர்களுடைய ஸ்திதியை செம்மைப்படுத்தவேண்டுமென்பதே கவர்ன்மெண்டாரின் எண்ணம். கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்துவதால் இப்படி செய்ய முடியுமா? முடியாது என்பதே மிஸ்டர் வாச்சாவின் அபிப்ராயம். ஐக்ய ஸங்கங்கள் செய்யக்கூடியதெல்லாம் தற்கால உபசாந்திகளே.

இந்திய விவஸாயியின் பெரும் கஷ்டம் அவன் பட்டிருக்கும் கடன். அந்தக்கடனை நிவர்த்திக்க கோவாபரெடிவ் ஸங்கங்களால் முடியாது. ஆகையால் அவைகள் ஏற்படவேண்டியதே அனாவச்யம். இந்திய விவஸாயிகளை ஆளாக்க, ஈஜிப்ட் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் விவஸாய பாங்கி போன்ற பாங்கிகள் ஏற்பட்டால் தான் முடியும் என்கிறார் மிஸ்டர் வாச்சா. இந்த பாங்கி விவஸாயிகளுடைய கடனைத் தீர்த்து அவர்களிடத்திலிருந்து சிறுகச்சிறுகக் கடனை வாங்கிக் கொண்டு அவர்களை ஆளாக்குகின்றன. இப்படி ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு ஸர்க்கார் பாங்கி ஏற்பட்டு க்ராமங்களிலும் பட்டணங்களிலும் கிளைபாங்கிகள் ஏற்படுத்தி வேலை செய்தால்தான், விவஸாயி கடைத்தேறக்கூடும் என்றும், தற்காலத்தில் நடைபெறும் ஐக்ய ஸங்கங்கள் கிளைபாங்கிகளாக ஒத்துழைக்கலாமென்றும், ஒரு போதும் ஐக்ய நாணய ஸங்கங்களால்மட்டும் விவஸாயிகள் கடைத்தேறமாட்டார்களென்றும் மிஸ்டர் வாச்சா கண்டிப்பாய் எழுதுகிறார்.

The Commercial World.

வ்யாபாரப் பகுதி.

SNUFF MANUFACTURE.

மூக்குப்பொடி செய்தல்.

மூக்குப்பொடி செய்ய பின்வரும் முறை மிகவும் ச்ரேஷ்டமானதென்று சொல்லப்படுகிறது. மூக்குப்பொடிக்கேற்றதான புகையிலையை வேண்டியளவு நல்லதாகப் பார்த்துப் பொறுக்கிக் கொள்ளவேண்டும். இலைகள் பெரியதாகவும், கரும்பழுப்பு நிறமாகவும் இருக்க வேண்டும். புகையிலையில் தூசிபடிந்திருக்கக்கூடுமாதலால் அதை நாலைந்து நிமிஷம் ஜலத்தில் அலசியெடுத்தால் அதிலுள்ள தூசியெல்லாம் போய்விடும். பிறகு இலைகளை இரண்டு நாள் வெயிலில் காயப்போடவேண்டும். முதல் நாள் இரவில் இலைகளை வெளியில் விட்டுவைக்காமல் எடுத்து உள்ளே வைத்திருந்து மறுநாள் காலையில் மறுபடியும் வெயிலில் எடுத்துக் காயப்போடவேண்டும். காயும்போது ஒரு தடவை இலைகளை திருப்பிப்போடவேண்டும். இலைகள் காயும்போது ஆகாயத்திலுள்ள தூசிகள் இலைகள்மேல் படியுமாதலால், அவைகளின்மேல் ஒரு மெல்லிய துணியாவது மஸ்லினாவது போட்டுவைப்பது நல்லது. இலையைக் கையால் தொட்டால் ஒடிந்து நொருங்கிப் பொடியானால் நன்றாய்க்காய்ந்துவிட்டதென்று தெரிந்து கொள்ளலாம்.

பிறகு இலைகளை தூசிதுப்பு இல்லாமல் சுத்தம் செய்த ஸிமெண்ட் போட்ட தரையில் போட்டு குழவியினாலாவது, சிறு இரும்பு உலக்கையினாலாவது பொடி செய்ய வேண்டும். பொடியில் இருக்கும் நார், குச்சி முதலியவைகளை எடுத்தெறிந்து விட்டு, சுத்தமான பொடியை சிறு குவியலாகக் குவித்து வைத்துக் கொள்ளவேண்டும். அந்தப்பொடியில் பன்னீர், லாவண்டர், ஆட்டோ டி ரோஸ் முதலிய வாஸனைகளைத் தெளித்து, ஒரு பெரிய ஸ்பூனால் கலந்து, பிறகு கையால் கலந்து கொடுக்க வேண்டும். அந்தப் பொடியை ஒரு பெரிய கெட்டித்துணியில் கொட்டிப்பரப்பி வெயிலில் காயவைக்க வேண்டும். காயும்போது தூசிகள் பொடியில் படியாமலிருக்கும்படி கூடிய மட்டும் ஜாக்ரதையெடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு மறுபடியும் அந்தப்பொடியை ஸிமெண்ட் தரையில் கொட்டி நன்றாய்ப்பொடி செய்து இன்னொரு தடவை வாஸனைசேர்த்துக் காயவைக்கவேண்டும். இப்படி மூன்று அல்லது நான்கு தடவை வாஸனை சேர்த்துக் காயவைப்பது நல்லது இப்படி அதிக தடவை வாஸனை சேர்த்துக் காயவைப்பதால் வாஸனை அதிகமாகவும் அதிககாலம் நீடித்திருக்கக் கூடியதாகவுமிருக்கும்.

கடைசிதடவை காயவைத்த பிறகு ரொம்ப நயமாக அரைத்து மஸ்லின் துணியில்போட்டு வஸ்த்ரகாயம் செய்யவேண்டும். வஸ்த்ரகாயம் செய்வதில் மிச்சமாக இருப்பதை மறுபடியும் பொடிசெய்து வஸ்த்ரகாயம்செய்து இப்படியே எல்லாவற்றையும் வஸ்த்ரகாயம்செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். இது கடைகளில் கிடைக்கும் ஸாதாரண பொடியைவிட ரொம்ப மேலானதென்று சொல்லப்படுகிறது.

EXPORT OF OIL SEEDS.

எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி.

1913-14-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியிலிருந்து கடல் மார்க்கமாய் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியான சரக்குகளில் எண்ணெய் வித்துக்களின் மதிப்புதான் ரொம்ப அதிகமாயிருக்கிறது. மொத்தம் ஏற்றுமதியான சரக்குகளின் மதிப்பில் இது 100-க்கு 21-பாகமாகும். 1912-13-ம் வர்ஷத்தில் இது

நூற்றுக்கு 18·96 வீதமாயிருந்தது. சென்ற வர்ஷத்தில் 5,32,90,000 - ரூபாய் மதிப்புள்ள 2,58,948-டன் எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதியாயின. இது 1912-13-ம் வர்ஷத்திய ஏற்றுமதியைவிட நிறையில் நூற்றுக்கு இரண்டு பங்கு வீதம் அதிகமாகவும், மதிப்பில் நூற்றுக்கு 13-பங்கு வீதம் அதிகமாகவும் இருக்கிறது.

பின்வரும் கணக்கில் 1912-13-ம் வர்ஷத்திலும் 1913-14-ம் வர்ஷத்திலும் ஏற்றுமதியான எண்ணெய் வித்துக்களின் நிறையும் மதிப்பும் காட்டப்பட்டிருக்கின்றன.

எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி.

எண்ணெய் வித்துக்கள்.	1912—1913.		1913—1914.		1913—14—ல் அதிகம் அல்லது குறைவு	
	அந்தர்	ரூபாய்	அந்தர்	ரூபாய்	அந்தர்	ரூபாய்
ஆவியாகக்கூடிய எண்ணெய் வித்துக்கள் ...	45,132	2,75,979	55,236	3,33,198	+ 10,104	+ 57,219
ஆமணக்கு ...	3,96,013	28,23,233	1,88,567	18,40,350	— 207,446	—14,82,883
கொப்பரை ...	6,84,721	1,28,38,681	7,61,726	1,56,45,534	+ 77,005	+27,06,853
பருத்திக்கொட்டை ...	2,41,558	9,30,112	83,832	3,21,743	— 1,57,726	— 6,08,369
வேர்க்கடலை ...	36,03,456	2,92,34,026	39,46,362	3,44,48,448	+ 3,42,906	+52,14,422
எள் ...	30,477	3,03,743	65,411	6,65,888	+ 34,934	+ 3,62,145
மற்றவைகள் ...	65,043	5,24,125	77,818	6,34,425	+ 12,775	+ 1,10,300
	50,66,400	4,96,29,899	51,78,952	5,32,89,586	+ 1,12,552	+63,59,687

மேலே காட்டிய கணக்குகளில் ஆவியாகக்கூடிய எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதியானது நிறையில் நூற்றுக்கு 22 - பங்கு வீதமும், மதிப்பில் 21-பங்கு வீதமும் அதிகமாயிருக்கிற தென்று தெரியவரும். இதற்குக் காரணம் கொத்துமல்லி அதிகமாய் ஏற்றுமதியானதே. இது 1912-13 - ம் வர்ஷத்தில் 2 லக்ஷத்து 56 ஆயிரம் ரூபாய்க்கு ஏற்றுமதியாகியிருக்க 1913-14-ல் 3,08,000 ரூபாய்க்கு ஏற்றுமதியாயிற்று.

கொப்பரை.

கொப்பரை அதாவது காய்ந்த தேங்காய்ப் பருப்பின் ஏற்றுமதி வர்ஷாவர்ஷம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. 1907-1908-ம் வர்ஷத்தில் 21¼ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள கொப்பரை அன்ய ப்ரதேசங்களுக்கு ஏற்றுமதியாகியிருக்க, 1913 - 1914-ம் வர்ஷத்தில் 155½ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள கொப்பரை ஏற்றுமதியாயிற்று. ஏற்றுமதி அதிகமாயிருப்பதற்கேற்ப கொப்பரையின் விலையும் அதிகமாகியிருக்கிறது. 1908-09-ம் வர்ஷத்தில் ஒரு அந்தர் கொப்பரை 13 ரூ. 6 அணுவாக இருந்தது. 1913-14-ம் வர்ஷத்தில் 20 ரூ. 6 அணு வாக அதிகரித்திருக்கிறது. இப்படிகொப்பரை ஏற்றுமதியின் அளவும் கொப்பரையின் விலையும் அதிகமாகியிருப்பதற்குக் காரணம், மேல்நாட்டில் புதிதாகக் கண்டு பிடித்த ஒரு முறையால் கொப்பரையின் ருசியைப்போக்கினதில் ஜனங்கள் அதை சாப்பாட்டில் அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்திருப்பதேயாம்.

1912-13-ம் வர்ஷத்தில் 6,84,721 அந்தர் நிறையுள்ள கொப்பரை ஏற்றுமதியாயிற்று. 1913-14-ம் வர்ஷத்திலோ 7,61,726 அந்தர் கொப்பரை ஏற்றுமதியாயிற்று. இதில் நூற்றுக்கு 71-பாகம் கொச்சியிலிருந்து ஏற்றுமதியாயிற்று. சென்ற வர்ஷம் ஜெர்மனிக்கு ஏற்றுமதி குறைந்து போயிற்று. 1912-13-ம் வர்

ஷத்தில் 103.07 - லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 5.48 லக்ஷம் அந்தர் கொப்பரை ஜெர்மனிக்கு ஏற்றுமதியாயிருக்க, 1913-14-ம் வர்ஷத்தில் 98.64-லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள 4·79 லக்ஷம் அந்தர் கொப்பரை ஏற்றுமதியாயிற்று. ஆனால் பெல்ஜியம் முந்தினவர்ஷத்தைவிட சென்ற வர்ஷம் ஆறுபங்கு அதிகமாகவும் ப்ரான்ஸ் மூன்றுபங்கு அதிகமாகவும், ரஷ்யா நூற்றுக்கு 70 - பங்கு அதிகமாகவும வாங்கிக் கொண்டன.

வேர்க்கடலை.

மொத்தம் ஏற்றுமதியான தைலவித்துக்களில் நூற்றுக்கு 76 - பாகம் வேர்க்கடலையாகும்.

1912-13-ம் வர்ஷத்தில் 36,03,456-அந்தர் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 2,92,34,026 ரூபாயாகும். 1913-14-ம் வர்ஷத்திலோ, 39,46,362 அந்தர் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 3,44,48,448 ரூபாயாகும். ஆகவே 1913-14-ம் வர்ஷத்தில் அதற்கு முந்தின வர்ஷத்தியதைவிட 52,14,422 ரூபாய் மதிப்புள்ள 3,42,906 அந்தர் வேர்க்கடலை அதிகமாக ஏற்றுமதியாகியிருக்கிறது. அதாவது வேர்க்கடலையின் ஏற்றுமதி சென்றவர்ஷம் (1913-14) நிறையில் நூற்றுக்கு 9-விதமும், மதிப்பில் நூற்றுக்கு 18-விதமும் அதிகரித்திருக்கிறது.

ஏற்றுமதி அதிகமாகியிருப்பதற்கு முக்ய காரணம் என்னவென்றால், வேர்க்கடலையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயிலுள்ள வாஸனையைப் போக்க ஒரு புது முறை கண்டு பிடிக்கப்பட்டிருப்பதே இதனால் அந்த எண்ணெய் வாஸனையும் ருசியுமில்லாமல் போய் சாப்பிடுவதற்கேற்றதாகிறது. இந்த வாஸனை போக்கின எண்ணெய் ஐரோப்பாவின் தென் பாகங்களில் ரொம்பவும் உபயோகப்பட்டு வருகிறதாம். இதை 'ஆலிவ் ஆயில்' என்னும் எண்ணெய்க்குப் பதிலாகவும் உபயோகிக்கிறார்களாம்.

வேர்க்கடலை ஸாகுபடியின் விஸ்தீரணம் நூற்றுக்கு 27 விதம் அதிகரித்திருக்கிறது. பல்லாரி, கர்நூல், அனந்தபுரம் முதலிய ஜில்லாக்களில் இதன் ஸாகுபடி ரொம்ப தீவிரமாய் வ்ருத்தியாய்க் கொண்டிருக்கிறது.

ஏற்றுமதியான வேர்க்கடலையில் பெரும்பாகம் ப்ரான்ஸுக்குப்போயிற்று. ப்ரான்ஸுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட வேர்க்கடலையின் மதிப்பு 3,08,96361 ரூபாயாகும். ஜெர்மனி 5-லக்ஷம் ரூபாய்க்கும், பெல்ஜியம் 10-லக்ஷம் ரூபாய்க்கும், இட்டலி 4-லக்ஷம் ரூபாய்க்கும், ஆஸ்ட்ரியா ஹங்கேரி 12-லக்ஷம் ரூபாய்க்கும் ஈஜிப்ட் 3-லக்ஷம் ரூபாய்க்கும் வாங்கிக்கொண்டன. கீழ்க்கண்ட அட்டவணையால் இன்னின்ன துறைமுகங்களிலிருந்து இவ்வளவு நிறையுள்ள வேர்க்கடலை ஏற்றுமதியாயிற்றென்பது தெரியவரும்.

	1912-13	1913-14
மதராஸ்	... 34,692 டன் *	72,653 டன்
கூடலூர்	... 77,199 ,,	48,195 ,,
நாகப்பட்டணம்	33,022 ,,	32,388 ,,
பரங்கிப்பேட்டை	28,302 ,,	25,030 ,,
புதுச்சேரி	... 110,565 ,,	86,509 ,,

* டன் என்பது 20 அந்தராகும்.

மற்ற எண்ணெய் வித்துக்கள்.

1912-13-ம் வர்ஷத்தில் 2,41,558 அந்தர் பருத்திக்கொட்டை ஏற்றுமதியாயிற்று. 1913-14-ம் வர்ஷத்திலோ 83,832 அந்தர்தான் ஏற்றுமதியாயிற்று. அதாவது நூற்றுக்கு 65-விதம் ஏற்றுமதி குறைந்து போயிற்று. இங்கிலண்டில் இதன் விலை குறைந்து போனதாலும், நமது ராஜதானியில் பருத்திக் கொட்டையை கால்நடைகளுக்குத் தீனியாக

அதிகமாக உபயோகித்ததானும் இப்படி ஏற்று மதி குறைந்து போய்விட்டதென்று சொல்லப் படுகிறது.

எள்ளின் ஏற்றுமதி 1912-13-ம் வர்ஷத்தில் 30,477 அந்தராகஇருந்தது, 1913-14-ம் வர்ஷத்தில் 65,411-அந்தராக அதிகரித்திருக்கிற தென்றாலும், அதற்கு முந்தின 5 வர்ஷத்து ஏற்றுமதியின் சராசரியைவிட ரொம்பக்குறைவாகவேயிருக்கிறது.

ஆமணக்கு விதையின் ஏற்றுமதி ரொம்ப குறைந்துபோய்விட்டது. 1911-12-ம் வர்ஷத்திய ஏற்றுமதியைவிட 1912 - 13-ம் வர்ஷத்திய ஏற்றுமதி ரொம்ப குறைவென்று சென்ற வர்ஷமே குறிப்பிட்டிருந்தோம். 1913-14-ம்வர்ஷத்திலும் இது நூற்றுக்கு 52-பாகம் நிறையிலும் மதிப்பிலும் குறைந்து விட்டது. மாஸூல் ரொம்ப குறைவாயிருந்ததோடு, சரக்கும் ரொம்ப மட்டமாயிருந்ததே இதற்குக் காரணம்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஏப்ரல், மே மாஸங்களில் அடியில்கண்ட விவரப்படி 10 ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப் பட்டன.

ஏப்ரல்௴

1	வ்யாபாரக் கம்பெனி	...	5,00,000
1	கம்பெனி (மேலே சொன்னது தவிர)	...	20,000
2			5,20,000

மே௴

1	கப்பலோட்டுங் கம்பெனி	...	4,00,000
3	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலேசொன்னது தவிர)	...	8,00,000
1	பருத்திமில் கம்பெனி	...	32,00,000
1	அரிசிமில் கம்பெனி	...	5,00,000
1	தேயிலைத் தோட்டக் கம்பெனி	...	3,00,000
1	நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி	...	20,00,000
8			72,00,000

A POTTERY FACTORY.

ஒருமண் பாண்டத் தொழில் சாலை.

வடக்கே மத்ய இந்தியாவிலுள்ள க்வாலியர் ஸமஸ்தானத்தில் மண் பாத்ரங்கள்செய்ய ஒரு தொழில்சாலை ஸ்தாபித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குவேண்டிய யந்த்ரங்கள் அடுப்புகள் முதலியவைகள் ஐரோப்பாவிலிருந்து தருவித்திருக்கிறார்கள். அந்தத் தொழில்சாலையில் பீங்கான் பாத்ரங்களும், வீடுகட்ட உதவும் ஓடுகளும் செய்யப்படும். க்வாலியர் ஸமஸ்தானத்து ஸிந்தியா மஹாராஜா அந்தத் தொழில்சாலை விஷயத்தில் ரொம்ப கவனம் செலுத்தி வருகிறார்.

TANNING INDUSTRY.

தோல் பதனிடுந்தொழில்.

சென்னை வண்ணாரப்பேட்டைக்கு ஸமீபத்தில் ஒரு தோல் பதனிடும் கிடங்கும், தோல் பதனிடும் முறைகளைக் கற்பிக்க ஒரு பாடசாலையும் ஸ்தாபிக்க சென்னை கவர்ன்மெண்டார் எண்ணங்கொண்டு, இப்பொழுது அங்கே ஒரு புதிய கட்டிடம் கட்டி வருவதாக 'விச்வகர்ம குலோபகாரி' தெரிவிக்கிறது.

The Educational World

வித்யாவிஷயப் பகுதி.

THE SCHOOL GARDEN.

பாடசாலைத் தோட்டம்.

பாடசாலைகளில் மாணவர்களைக்கொண்டு தோட்டங்கள் வைத்துப் பயிர்செய்வதின் நோக்கம் அவர்கள்படிக்கும் பாடங்களுக்கு ஓர் உதவியாக ஏற்படுவதோடுகூட அந்தத் தோட்டங்கள் மூலமாய் பிள்ளைகளுக்கு விவஸாயமும், பூந்தோட்டவேலையும கற்றுக்கொடுப்பது என்று பலர் எண்ணிவருகிறார்கள். பாடசாலைத் தோட்டங்களை பிள்ளைகளுக்கு விவஸாயவேலையைக் கற்றுக்கொடுப்பதற்கு ஒரு ஸாதனமாக உபயோகிப்பது முற்றிலும் தவறான நோக்கமென்று ஒருநிருபா ஒரு இங்லீஷ் பத்ரிகைக்கு எழுதுகிறார். ஏனென்றால் அப்படிச்செய்வது வித்யாசாஸ்த்ர ஸம்மதமாயிராததோடு இந்த ஏற்பாடு இதுவரையில் பயனற்றதாகவே முடிந்திருக்கிறதாம். பாடசாலைத்தோட்டத்தின் உண்மையான நோக்கமென்னவென்றால் இயற்கைப் பாடத்துக்கு ஒரு ஸாதனமாயிருப்பதும, அதன்மூலமாய் பொதுவாய் பிள்ளைகளினுடைய கல்வி வ்ருத்தியடைவதுமே. இந்தநோக்கங்களை யனுஸரித்தே பாடசாலைகளில் தோட்டங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று அவர் சொல்லுகிறார்.

பாடசாலைத் தோட்டங்களில் பிள்ளைகள் வேலை செய்வதனால் அவர்களுக்கு அறிவு வ்ருத்தியாவதோடு, அவர்கள்ஸந்தோஷமாகப் போதுபோக்குவதற்கும் இடமேற்படுகிறது. அவர்களுக்கு வேலையில் ப்ரியம் ஏற்படுகிறது. கார்யங்களை ஒழுங்காயும், சுத்தமாயும் செய்யப்பழக்க மேற்படுகிறது. அழகு, வர்ணம், ரூபம் இவைகளைப்பற்றி தெளிவான எண்ணங்கள் உண்டாகின்றன.

பாடசாலைத் தோட்டங்களின் உதவியைக்கொண்டு இயற்கைப்பாட ஸம்பந்தமாக பிள்ளைகளுக்கு அநேக விஷயங்கள் கற்றுக்கொடுக்கலாம். இதற்கு உபாத்யாயர்கள் ரொம்பப் படித்தவர்களாயிருக்கவேண்டும்.

பின்வரும் விஷயங்கள் இயற்கைப்பாடத்தில் தோட்டத்தின் உதவியால் கற்றுக்கொடுக்கக் கூடியவை. பாடசாலைத்தோட்டம் இருக்குமிடமும் அதன்தோற்றமும்; வெயிலும் நிழலும்; ஸூர்யனும் ஸூர்யமண்டலமும்; ஸூர்யன் ஆகாயத்தில் 'ப்ரயாணம்' செய்யும் விதம்; ஆகாயத்தின் சீதோஷ்ண ஸ்திதி; அதன் மாறுபாட்டிற்குக் காரணங்கள்; உஷ்ணத்தை யளத்தல், 'தெர்மாமிடர்' எனனும் உஷ்ணம் அளக்கும் கருவி; ஜலம் ஆவியாய்ப் போவது; ஸூர்யவெளிச்சம் எப்படி செடிகளின் வளர்ச்சிக்கு உதவுகிறது; பனி, காற்று; மண்ணின் தன்மை, பூமியிலுள்ள பலவகை மண்கள் (களி, மணல், வண்டல் முதலியவைகளின் குணாகுணங்கள்); நிலங்களை அளத்தல்; நிலங்களிலுள்ள ஜலத்தை வடியவிடுவதின் அவச்யம், வடியவிடுவதின் ப்ரயோஜனம்; ஜலத்தின் தன்மைகள்; வறட்சி; மேல்மண்ணைப் புழுதியாக்குவதும், அதனால் மண்ணீரத்தைப் பாதுகாப்பதும்; விதை; விதைகள் முளைக்குமா என்பதற்குப்பரீக்ஷை; விதைகள் முளைப்பது; முளைப்பதற்குவேண்டிய ஸாதனங்கள்; செடிகள் நடுவதில் ஒன்றுக்கொன்று இருக்கவேண்டிய தூரம்; ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணத்தில் எத்தனைசெடிகள் நடலாமென்பதைக் கண்டுபிடித்தல்; மழை; அது எப்படி உண்டாகிறது; மழையின் அளவும் செடி வளர்ச்சியும்; வெவ்வேறு ப்ரதேசங்களின் மழையளவு; 'ரெய்ன்கேஜ்' என்னும் மழையளக்கும் கருவி; மான்ஸூன்ஸ் என்னும்

பருவமழைகள்; செடிகளின் வளர்ச்சி, மண்ணிலும் ஆகாயத்திலுமுள்ள செடியுணவுகள்; ஆகாயத்தில் இன்னின்ன வாயுக்களிருக்கின்றனவென்பது; செடிகள் ஆகாயத்தை சுத்தமாய் வைத்திருப்பது எப்படி; செடியின் பாகங்கள்; புஷ்பம்; புஷ்பங்களில் கருத்தரித்தல்; பழமும் விதையும் எப்படி உண்டாகின்றனவென்பது; பூச்சிகளும், பறவைகளும் செடிவளர்ச்சிக்கு ஸாதகபாதகமாயிருப்பது; களைகள், செடிநோய்கள்; பாத்திகள்போடுவது; தோட்டத்தின் ப்ளான்; மாஸஅலை நிறுப்பது; கணக்குகள் வைப்பது; இயற்கைப்பாடத்தில் படித்தவைகளைப்பற்றி வியாஸங்கள் எழுதுவது முதலியவை. இன்னும் இவைகளைப்போல் வேறு பலவிஷயங்களையும் கற்பிக்கலாம்.

இதுவிஷயமாக மேல்சொன்ன நிருபர் பின்வரும் யோசனைகளைத் தெரிவித்திருக்கிறார்.

(1) இயற்கைப்பாடத்தில் கீழ்வகுப்புகளுக்குக் கற்பிக்கவேண்டிய விஷயங்களுக்கும், உயர்ந்த வகுப்புகளுக்குக் கற்பிக்கவேண்டிய விஷயங்களுக்கும், தனித்தனியாக ஜாப்தாக்கள் அதாவது ஸிலபஸ் (Syllabus) எழுதி வைத்துக் கொள்ளவேண்டும. இந்த ஸிலபஸ்கள் உபாத்யாயர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

(2) மேல்சொன்ன ஸிலபஸில் சொல்லப்படும் பாடங்களையெல்லாம் சிறுவர்களுக்கு 12-வது வயஸு முடிவதற்குள் கற்பித்துவிடவேண்டும. தாவரசாஸ்த்ரம், ப்ராணிசாஸ்த்ரம், ரஸாயனசாஸ்த்ரம், ப்ரக்ருதி சாஸ்த்ரம், பூதத்வசாஸ்த்ரம், வானசாஸ்த்ரம் ஆகிய இந்த சாஸ்த்ரங்களில் ஸாதாரண அநுபவத்துக்கொத்த விஷயங்களையெல்லாம் ஷை ஸிலபஸில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

(4) கற்பிக்கவேண்டிய பாடங்களில் அந்தந்தப் பருவங்களுக் கேற்றவைகளை அந்தந்தப் பருவங்களில் கற்பிக்க ஏற்பாடு செய்துகொள்ளவேண்டும். அந்தந்த ப்ரதேசங்களின் நிலைமைக்குத் தக்கவாறு பாடங்கள் இருக்கும்படி ஸிலபஸை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(5) இந்த ஸிலபஸின்படி இயற்கைப்பாடம் கற்பித்தானபிறகு, பிள்ளைகளுக்கு ரஸாயன சாஸ்த்ரம் (கெமிஸ்ட்ரி), ப்ரக்ருதிசாஸ்த்ரம் (பிஸிக்ஸ்), பயாலஜி என்னும் ஜீவசாஸ்த்ரம் ஆகிய இவைகளை க்ரமமாக மூன்றுவர்ஷம் கற்பித்து வரவேண்டும்.

(6) இந்தப்படிப்பு முடிந்தபிறகு பையன்கள் மேல் வகுப்புகளில் எந்தவிதமான கல்வியை விரும்புகிறார்களோ, அல்லது எந்தவிதமான தொழில் அல்லது உத்யோகம் விரும்புகிறார்களோ அதற்கு அநுஸரணையான சாஸ்த்ரத்தை படித்துக்கொண்டு போகவேண்டும்.

CINEMATOGRAPH.

ஸினிமாடோக்ராப்.

நகர்ந்து கொண்டிருக்கும் பொருள்களையும், காட்சிகளையும் போட்டோ எடுத்து, அவைகளை நகர்ந்து அசைந்துகொண்டிருக்கும்படியே படமாகக் காட்டிவரும் ஸினிமாடோக்ராப் என்னும் யந்த்ரத்தின் அற்புதத்தை அநேகர் பார்த்திருப்பார்கள். அதனால் நாம் நேரில் பார்க்க முடியாத பல காட்சிகளையும் பொருள்களையும் அவைகள் இயற்கையில் எப்படிக் காணப்படுமோ அப்படியே நாம் பார்த்து ஸந்தோஷமடையலாம். சக்ரவர்த்தியின் முடிசூட்டுவைபவத்தை பார்க்க எல்லோரும் லண்டனுக்குப் போகமுடியாது. ஆனால் அதை ஸினிமாடோக்ராப்பில் நன்றாய்ப் பார்க்கலாம். மேலும் நாமே நேரில் சென்று பார்த்தாலும் பல அஸௌகர்யங்களால் எல்லா வைபவத்தையும் ஒருமிக்கப் பார்ப்பது முடியாமல் போய்விடும். ஸினிமாடோக்ராப்பில் படம் பிடிப்பவர்கள் தங்களுக்கு வேண்டிய விதமெல்

லாம் ஸௌகர்யம் செய்துகொள்வார்கள். ஆகையால் படங்களை வேண்டியபடி எல்லாம் பிடித்துக் காட்டக்கூடும். இன்னம் அமெரிக்காவிலுள்ள நையகாரா நீர்வீழ்ச்சி, லண்டன் ம்ருகக்காட்சி சாலை முதலிய பிள்ளைகள் வகுப்பில் கற்றுக்கொள்ளும் பல விஷயங்களும் நேரில் பார்த்தால் எப்படியிருக்குமோ அப்படியே காட்டப்படுகின்றன. இந்தப் படங்களோடு பொருள்கள், ப்ராணிகள் முதலியவைகளின் சப்தமும் சேர்க்கப்பட்டு உண்மையில் அவைகள் நேரில் இருப்பதுபோலத் தோன்றும்படியும் செய்யப்படுகின்றன. இவைகளைப் பார்ப்பதால் பள்ளிக்கூடத்திலுள்ள மாணவர்களின் கல்விக்கு ரொம்ப ஸாதகமாக ஏற்படுகிறதென்று பலர் சொல்லிவருகிறார்கள். மேல்நாடுகளில் பள்ளிக்கூடங்களில் ஸினிமாடோக்ராப்பை ரொம்பவும் உபயோகிக்கவேண்டுமென்று முயற்சிகள் நடந்துவருகின்றன. இந்தியாவிலும் அதை உபயோகிக்க வேண்டுமென்று சிலர் சொல்லிவருகிறார்கள்.

நிற்க ஒரு இங்கிலீஷ் பத்திரிகை இந்த யந்த்ரத்தால் உண்டாகக்கூடிய நன்மை தீமைகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறது.

"சில வஸ்துக்களை போடோக்ராப்பில் பார்ப்பதைவிட ஸினிமாடோக்ராப்பில் பார்ப்பதால் விஷயம் நன்றாய் விளங்குமென்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் இந்த விதமான படங்களை சிறுகுழந்தைகளுக்குக் காட்டுவதில ப்ரத்யேகமாய் கற்றுக்கொள்ளக் கூடியது ஒன்றுமிராது. அதனால் நேரிடும் கெடுதிகள் மாத்ரம் அதிகமாயிருக்கின்றன.

(1) படங்கள் ஆடுவதாலும் அதிக ப்ரகாசமான வெளிச்சத்தாலும் கண்ணுக்குக் கெடுதல் உண்டாகிறது.

(2) பிள்ளைகள் இவைகளைப் பார்ப்பதால் ஸாதாரண படங்களைப் பார்த்து ஸந்தோஷமடைய முடியாதவர்களாகி விடுகிறார்கள்.

(3) ரொம்ப காமஸம்பந்தமானவும், பெரும் அமனியுண்டாக்கக் கூடியனவுமாகிய காட்சிகளை விலக்கிவிட்டாலுங்கூட பொய்யானவும் ஆபாஸமானவுமான படங்கள் ஏராளமாய் காட்டுகிறார்கள்.

(4) இதைப் பார்த்தவர்கள் "சித்ரகலைகள்" என்று சொல்லப்படும் எதையும் பார்த்து அநுபவிக்க இயலாதவர்களாகி விடுவார்கள். மேலும், பாடங்கள் கற்பிப்பதற்கு வேண்டிய ஸாமான்யமான உபகரணங்கள்கூட வேண்டிய அளவுக்கு இல்லாத இந்த தேசத்து ஸெகண்டரி ஸ்கூல்களில் ரொம்ப விலை ஏறப்பெற்றதும், ரொம்ப இழிவானதுமான இந்த யந்த்ரத்தை உபயோகிக்கும்படி செய்ய சிலர் முயலுகிறார்களே!" என்று அந்தப் பத்திரிகை எழுதி முடிக்கிறது.

RULED Versus PLAIN PAPER.

ரூல் போட்ட கடுதாசியும் ரூல் போடாத கடுதாசியும்.

பாடசாலைகளில் பிள்ளைகள் அப்யாஸங்கள் எழுதுவதற்கு ரூல்போட்ட 'நோட்' புஸ்தகங்கள் உபயோகிக்கிறார்கள். பரீக்ஷை காலங்களில்தான் ரூல்போடாத கடுதாசிகளை உபயோகிக்கிறார்கள். இந்த இரண்டுவிதக் கடுதாசிகளில் எதில் எழுதிப் பழகுவது நல்லது? இதைப்பற்றி ஒருவர் பின்வருமாறு அபிப்ராயப்படுகிறார்.

ரூல்போட்ட கடுதாசியில் எல்லாரும் எழுதும்படி செய்வதால் எல்லா 'நோட்டுபுஸ்தகங்களிலும் எழுதும் வரிகள் கோணலாயில்லாமல் ஒரே சீராயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் ரூல்போட்ட கடுதாசிகளில் எழுதுவதால் ஸுலபமாயும், நேர்த்தியாயும் எழுதலாமென்கிறார்கள். இப்படி ரூல்போட்ட கடுதாசிகளில் எழுதிக்கொண்டே வரும் பையன்கள் பரீக்ஷை காலங்களில் ரூல்போடாத கடுதாசிகளில் எழுத ஆரம்பித்தால் வரிகள்

ரொம்ப கோணலாய்ப் போய்விடுகின்றன. எழுத்துக்கள் லக்ஷணமாயமைவதில்லை. மேலும் பள்ளிக்கூடக் காலங்களல்லாத நேரங்களில் ரூல்போடாத ஸாதாரண கடுதாசிகளிலேயே எழுதவேண்டியிருக்குமாதலாலும், அப்போது நன்றாய் எழுதவேண்டியிருக்குமாதலாலும், பாடசாலைகளில் ரூல்போடாத கடுதாசிகளில் எழுதும்படி பையன்களை பழக்க வேண்டும்.

சில விடங்களில் ஸாதாரண பள்ளிக்கூடத்துப் பரீக்ஷைகளில் ரூல்போட்ட கடுதாசியை ஸாதாரண கடுதாசியின் அடியில் வைத்துக்கொண்டு எழுதும்படி விடுவதுண்டு. அப்படிச் செய்வதும் நல்லதல்ல. ஏனென்றால் பெரிய பரீக்ஷைகளில் ரூல்போட்ட தாள்களை பரீக்ஷை நடக்குமிடங்களுக்குக் கொண்டுபோவது கூடாதாகையால் அப்படிச் செய்து பழகின மாணவர்கள் பரீக்ஷைகளில் நேர்த்தியாய் எழுதமுடியாமல் தவிப்பதுண்டு.

ஆகையால் ரொம்பத் தாழ்ந்த வகுப்புகளில் பிள்ளைகள் ரூல்போட்ட கடுதாசிகளில் எழுதலாமென்றாலும், உயர்ந்த வகுப்புகளில் ரூல் போடாத் கடுதாசிகளால் தான் எழுதிவர வேண்டும்.

ரூல்போடாத கடுதாசிகளில் எழுதும்போது முதலில் வரி கோணலாகுமாதலால் அதற்குப் பின்வரும் விதிகளைக் கவனிப்பது நல்லது. எழுதுபவர் கடுதாசியை தமக்கு நேராக வைத்துக்கொள்ளவேண்டும். இடதுகைப்புறத்தில் 2¼-அங்குலம அகலமுள்ள இடத்தைக் ('மார்ஜின்', Margin) காலியாக விட்டுவிட்டு, கடுதாசியின் மேல்புறத்தில் ஒரு அங்குலம் விட்டு எழுத ஆரம்பிக்கவேண்டும். எழுதிக்கொண்டு போகும்போது முதல் வரியானது கோணலாயிராமல் கடுதாசியின் ஓரத்துக்கு ஸமதூரமுள்ளதாயிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். கொஞ்சம் கோணலாயிருந்தால் உடனே வரியை சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். சிலதடவைகள் ஜாக்ரதையுடனெழுதிவந்தால் பிறகு வரிகள் கோணாமல் எழுதமுடியும். முதல் வரி எழுதின பிறகு அந்த வரியைப் பார்த்துக்கொண்டே இரண்டாவது வரியைக் கோணலில்லாமல் எழுத முயலவேண்டும். எப்போதும் வரி கோணுகிறதா என்பதை கவனித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

TEACHING GRANTS.

டீச்சிங் க்ராண்டுகள்.

குண்டூர், பல்லாரி, செங்கல்பட்டு, மதுரை ஆகிய இந்த ஜில்லாக்களில் உள்ள எலிமென்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்குக் கொடுக்கும் டீச்சிங் க்ராண்டுகளை பரீக்ஷார்த்தமாக மாஸாமாஸம் கொடுத்துப்பார்க்க வேண்டுமென்றும், இந்த ஏற்பாடு எப்படி நடந்துவருகிறதென்பதைப்பற்றி வித்யா டிரெக்டர் 1916-ம் வர்ஷம் மார்ச்சு௴ ஒரு ரிபோர்ட்டு தயார்செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்ப வேண்டுமென்றும், இந்த ஏற்பாடு த்ருப்திகரமாக நடந்துவந்து இதைமற்ற ஜில்லாக்களிலும் அனுஷ்டிக்க வேண்டுமென்றால அதற்குவேண்டிய ப்ரேரணைகளை அவர் தெரிவிக்க வேண்டுமென்றும், கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

INDUSTRIAL EDUCATION IN MADRAS.

சென்னையில் கைத்தொழில் கல்வி.

கைத்தொழில் கல்வியில் ஊக்கம் பாராட்டும் கனவான்கள், ஸுமார 40-பேர், சென்ற ஜூலைமாஸம், 7, 8-தேதிகளில் சென்னை கைத்தொழில் டிரெக்டராபீஸில் ஒரு மீட்டிங் கூடி கைத்தொழில் கல்வியைப்பற்றி ஆலோசித்தார்கள். கைத்தொழில் கல்வியைப்பற்றி கவனிக்க ஒரு கௌன்ஸில் ஸ்தாபிக்க வேண்டுமென்றும, கைத்தொழில் ஸ்கூல்களுக்கு வேண்டிய உபாத்யாயர்களைப் பயிற்சிசெய்விக்க கைத்தொழில் நார்மல் ஸ்கூல் ஒன்று ஸ்தாபிக்கும்படி கைத்தொழில் டிரெக்டரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், தற்காலம் அனுஷ்டானத்திலிருந்துவரும் டெக்னிகல் பரீக்ஷைகள் த்ருப்திகரமாயில்லையென்றும், அவைகளையொழித்துவிட்டு அவைகளுக்குபதிலாக வேறு த்ருப்திகரமானஏற்பாடுகள் செய்யுமபடி கைத்தொழில் டிரெக்டரைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும். தீர்மானங்கள் செய்தார்கள்.

The Legal World.

வ்யவஹாரப் பகுதி.

RIGHTS OF BELLIGERENT SUBJECTS.

சண்டைபோடும் தேசத்தவர்களின் உரிமைகள்.

சண்டைபோடும் இரண்டு தேசத்துக் குடிகள் சண்டை ஸமயத்தில் தங்கள் தேசத்தை விட்டு சத்ருவின் தேசத்திலிருக்கும் பக்ஷத்தில் அவர்களைப பற்றியும், அவர்களுக்கு அந்த ஸமயம் அந்த தேசத்திலிருக்கக் கூடிய சொத்து, கொடுக்கல் வாங்கல் முதலிய வ்யவஹாரம்,வ்யாபார ஸம்பந்தம் ஆகிய இவைகளைப் பற்றியும் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இண்டர்நாஷனல் லா என்னும் பரஸ்பர தேச சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைமைகளைத் தெளிவாகச் சொல்லுவதற்கு தற்காலம் சண்டை செய்யும் இங்க்லண்ட் ஜெர்மனி ஆகிய இவ்விரண்டு தேசங்களையும் உதாரணங்களாக எடுத்துக்கொள்வோம். இப்போது இங்க்லீஷ்க் குடிகள் ஜெர்மன் குடிகளோடு எவ்விதமான ஸம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது. ந்யாயமாய்ப் பார்க்கும் பக்ஷத்தில் இங்க்லீஷ்க்காரர்கள் ஒவ்வொருவரும் ஜெர்மன் தேசத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் விரோதிதான். இருந்தாலும் சண்டைகாலத்தில் இங்க்லண்டிலிருக்கும ஜெர்மன் குடிகளுக்கு இங்க்லீஷ்காரர்கள் தங்களது கவர்ன்மெண்டின் உத்தரவில்லாமல் ஒருவிதமான இடையூறும் செய்யக்கூடாது. இங்க்லீஷ்க்காரர்களுக்கும் ஜெர்மன் தேசத்தாருக்கும் ஒருவிதமான வ்யாபார ஸம்பந்தமுமிருக்கக்கூடாது. முன்னால் அப்படி ஸம்பந்தம் இருந்தாலுங்கூட சண்டை ஆரம்பித்தவுடன் அந்த ஸம்பந்தம் நின்றுவிடுகிறது. இங்க்லீஷ்காரர்களுக்கும் ஜெர்மனிக்காரர்களுக்கும் உள்ள அக்ரிமெண்டுகள் நிறுத்தப்படுகின்றன. ஆனால் இங்க்லீஷ்காரருக்கு ஜெர்மனியிலோ அல்லது ஜெர்மனி, தேசத்தவர்களுக்கு இங்க்லண்டிலோ, ஏற்பட்டிருக்கக்கூடிய பாங்கியிலுள்ள சொத்துக்களாவது அல்லது வேறு விதமான வ்யாபாரங்களின் பங்குகள் போன்ற சொத்துக்களாவது பறிமுதல் செய்யப்படமாட்டா. சண்டை நடக்கிறவரையில் அவைகளுக்கு வட்டி கொடுக்கப்படமாட்டாது. சண்டை ஓய்ந்து ஸமாதானம் ஏற்பட்ட பிறகு பூராவாக வட்டி முதலானவைகள் கொடுத்துவிடப்படும்.

தவிர, சண்டை நடக்கும் ஸமயத்தில் இங்க்லீஷ்காரர் ஜெர்மனி தேசத்திலாவது, ஜெர்மன் தேசத்தார் இங்க்லண்டிலாவது இருக்கும்படி ஸம்பவித்தால், அந்தந்த தேசத்து கவர்ன்மெண்டின் உத்திரவுப்படி அவர்களிருக்கும் இடத்திலேயே இருந்து வரலாம; அல்லது அந்த அயல் தேசத்தைவிட்டு வேறு இடங்களுக்குப் போனாலும் போகலாம். உத்திரவின்படி அயல் நாட்டில் தங்குபவர்களை யுத்த கைதிகளாக்குவது வழக்கமில்லை. சண்டை காலத்தில் அன்ய தேசத்தில் தங்க இஷ்டமில்லாதவர்களுக்கும் அப்படித்தங்கும்படி உத்திரவு கிடைக்காதவர்களுக்கும் வெளிநாட்டுக்கோ அல்லது, தங்கள் சொந்த தேசத்துக்கோ, எல்லா சொத்துக்களுடன் புறப்பட்டுப் போவதற்கு வேண்டிய அவகாசம் கவர்ன்மெண்டார் கொடுப்பார்கள். இங்க்லீஷ் கவர்ன்மெண்டின் உத்திரவுப்படி இங்கலண்டில் தங்கும் ஜெர்மனி தேசத்தார்கள் தங்கள் சொந்த தேசத்தோடு யாதொரு ஸம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்கள் இங்க்லண்டுக்குரிய ரகஸ்யங்களை தங்களுடைய சொந்த தேசத்துக்காவது, இதர தேசங்களுக்காவது, வெளியிட்டு

ஒத்தாசைசெய்தால், சட்டப்படி கைதிகளாக்கி தண்டிக்கப்படுவார்கள்.

அல்லாமலும் அயல்நாட்டுக் குடிகளின் சொத்துகள் அந்தக் குடிகள் இருக்கும் தேசத்து கவர்ன்மெண்டுக்கு சொந்தமாகமாட்டா. உதாரணமாக, ஜெர்மனியிலிருக்கும் இங்லீஷ்காரருடைய சொத்துகள் ஜெர்மன் கவன்மெண்டுக்கு சொந்தமாகமாட்டா; அதே மாதிரி இங்க்லண்டிலிருக்கும் ஜெர்மனியர்களின் சொத்துக்கள் இங்க்லீஷ் கவர்ன்மெண்டுக்கு சொந்தமாகமாட்டா. இதைத் தவிர முன் சொல்லியதுபோலவே ஒரு நாட்டுக் குடிகள் மற்றொரு நாட்டுக் குடிகளுக்குக் கொடுக்கவேண்டியதா யிருக்கும் கடன் முதலானவைகளும் சண்டை முடிந்து ஸமாதானமான பிறகு கொடுக்கும்படியாகும்.

மேலே சொல்லிய இன்டர்நாஷனல் லா என்னும் பரஸ்பரதேச சட்டத்தின் முறைமைப்படிக்கே ஒரு தேசத்து வர்த்தகக் கப்பல்கள் விரோதி தேசத்துத் துறைமுகத்தில் சண்டை ஆரம்பிக்குமுன்னாலிருக்கும் பட்சத்தில் அந்தக் கப்பல்களுக்கு யாதொரு தீங்குமன்னியில் ஸாமான்களுடன் தங்கள் சொந்த தேசத்துக் காவது, வேறே எங்கேயாவது போவதற்கு உத்திரவு கொடுக்கப்படும். ஆனால் அந்தக் கப்பல்களிலுள்ள ஸாமான்கள் சண்டைகாலத்தில் கொண்டுபோகக் கூடாதவை என்று விலக்கப்பட்டனவாக இருக்கக்கூடாது.

ARBITRATION.

மத்யஸ்தம்.

ஒரு கேஸை மத்யஸ்தத்திற்கு விட்டு மத்யஸ்தர் சொல்லும் தீர்மானத்தில் ஒரு பாகம் க்ரமமாயிருந்து, மற்ற பாகம் க்ரமமாயிராத பக்ஷத்தில், அந்த 2 பாகங்களும் பிரிக்கக் கூடியவைகளாயிருந்தால், க்ரமமா யில்லாத பாகத்தைத் தள்ளிவிட்டு சரியாயுள்ள பாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஒரு மத்யஸ்தர் கேஸை விசாரிப்பதில் விவாதத்திலுள்ள விஷயங்களை சரியாய் விசாரிக்காமல் தீர்ப்பு சொல்லும் பக்ஷத்தில் அந்தத் தீர்ப்பு சரியான தீர்ப்பாகாது. இப்படிப்பட்டத் தீர்ப்பு சொல்வதில் மத்யஸ்தர் யோக்யமாயில்லை யென்றாவது அல்லது பக்ஷபாதமா யிருந்தாரென்றாவது ரூபிக்கவேண்டியது அவசியம். கேஸ்களில் மத்யஸ்தம் செய்கிறவர்கள் அவைகளை விசாரிக்கும்போது பின்னால் உபயோகத்திற்காக அப்போதைக்கப்போது குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் விசாரணை நடக்கும்போது மத்யஸ்தர் குறிப்புகள் வைத்துக்கொள்ளாம லிருந்து, அதற்கு கக்ஷிக்காரரும் ஆக்ஷேபிக்காமலிருந்து விட்டால், மத்யஸ்தர் தீர்ப்பு சொன்ன பிறகு, அந்தத் தீர்ப்பு கக்ஷிக்காரருக்கு த்ருப்தி இல்லாமல் மத்யஸ்தர் குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்ள வில்லையென்று முகாந்திரம் சொல்லி, அவருடைய தீர்ப்பு அங்கிகாரம் செய்யத் தக்கதில்லை யென்று வாதிக்கக்கூடாது. ஒரு கேஸில் மத்யஸ்தராக இருந்தவரை அந்தத் தீர்ப்பைப்பற்றிய விவாதத்தில் ஸாக்ஷியாக விசாரிக்கலாம். இன்னும் மத்யஸ்தர் தீர்ப்பு சொல்லுவதில் பக்ஷபாதமில்லாமலும் யோக்யதையாயும் நடந்திருக்கிறார வென்று நிஷ்கர்ஷை செய்யவேண்டி யிருந்தால், அவருடைய ஸாக்ஷ்யத்தை கண்டிப்பாய் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவர் சொல்லும் ஸாக்ஷ்யத்தை வேறு விதமாக உபயோகப்படுத்தக் கூடாது. அதாவது, அவர் தீர்மானம் செய்யக்கூடிய விஷயங்களில் அவர் செய்தது பிசகு என்று ரூபிப்பதற்காக அவருடைய ஸாக்ஷ்யத்தை உபயோகப்படுத்தக்கூடாது. மோசடியாய் செய்திருந்தாலொழிய ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத் தலைவர் ஒரு கேஸை மத்யஸ்தத்திற்கு விடும் பக்ஷத்தில் அதற்கு இதர பாகஸ்தர்களும் கட்டுப்பட்டவர்களாவார்கள்

RE-UNION.

மறுபடியும் ஒன்றுசேர்தல்.

ஒரு குடும்பத்தில் பாகம் ஏற்பட்டு பாகஸ்தர்கள் மறுபடியும் ஒன்றுசேரும்பக்ஷத்தில், அவிபக்த குடும்பமாயிருந்தபோது ஒவ்வொரு பாகஸ்தருக்கும் என்ன பாத்யதை உண்டோ அந்த மாதிரி, பிரிந்து மறுபடியும் சேரும் பாகஸ்தர்களுக்கு பாத்யதை ஏற்படாது. மறுபடியும் ஒன்று சேரும்போது அவரவர்கள் என்ன ஸொத்துகள் போடுகிறார்களோ அதை பொருக்கும். ஒன்றுசேர்ந்து மறுபடியும் பிரியும் பக்ஷத்தில், பிரிவினையில் ஏற்படும் ஸொத்தின் விதம், ஒன்று சேரும்போது ஸொத்து விதம் என்ன போட்டார்களோ அப்படித்தான் இருக்கும். அவிபக்த குடும்ப பாகஸ்தர்களுக்கும், பாகமாய் மறுபடியும் சேரும் பாகஸ்தர்களுக்கும் சில வித்யாஸங்கள் உண்டு. அவிபக்த குடும்பத்திலுள்ள பாகஸ்தர்கள் கோபார்ஸனர்கள், அதாவது "ஸமபாகஸ்தர்கள்" ஆவார்கள். ஒரு தடவை பிரிந்து மறுபடியும் ஒன்று சேரும் பாகஸ்தர்களோ, 'டெனண்ட்ஸ இன்காமன்', அதாவது "பொதுவுடை பாகஸ்தர்கள்" ஆவார்கள்.

பிரிவினை ஆகாத குடும்பத்தில் ஒரு பாகஸ்தனுக்கு பிள்ளை இல்லாத பக்ஷத்தில் அவனுடைய பாகம் இதர பாகஸ்தர்களுக்குப் போகிறது. பிரிவினையாகி பாகஸ்தர்கள் மறுபடியும் ஒன்று சேரும்பக்ஷத்தில், அதில் ஒரு பாகஸ்தர் இறந்து போனால் அவருடைய வாரிஸுக்கு அவருடைய ஸொத்துகள் சேரும். பிரிவினையான குடும்பத்தில் மறுபடியும் ஒன்று சேர்ந்ததாக யாராவது வாதிக்கும் பக்ஷத்தில், அப்படி ஒன்று சேர்ந்ததை அவரே ரூபிக்கவேண்டிவரும்.

EASEMENT.

ஈஸ்மெண்ட்.

பக்கத்து நிலத்திலிருந்து ஒரு வீட்டு ஜன்னல்களின் வழியாய் வரும் வெளிச்சத்திற்குள்ள ஈஸ்மெண்ட் பாத்யதையை வெளிச்சத்தை அளந்து சொல்ல முடியாது. ஜன்னலுள்ள வீட்டில் குடியிருப்பவர்களோ அல்லது வ்யாபாரம் செய்கிறவர்களோ ஸௌகர்யமாய் குடியிருப்பதற்கு எவ்வளவு வெளிச்சம் வேண்டுமோ அவ்வளவுக்குத்தான் பாத்யமுண்டு. பக்கத்து நிலத்துக்காரன் ஜன்னலை அடைப்பதால் வீட்டுக்காரர்களுக்கு தொந்திரவு உண்டானலொழிய ஈஸ்மெண்ட் பாத்யதைக்கு கெடுதி நேரிட்டதாக எண்ணக்கூடாது.

USUFRUCTUARY MORTGAGE AND TAX.

போக்யமும் வரியும்.

ஒரு வீடு போக்யப் பத்ரத்தில் முனிஸிபாலிட்டி வீட்டுவரிபோக பாக்கி வரும்படியே வட்டி ஈடாக அநுபவித்து கொள்கிறது என்று கண்டிருந்தது. பிறகு முனிஸிபாலிட்டியார் தண்ணீர்த் தீர்வை போட்டார்கள். இந்தத் தீர்வையை யார் கொடுக்கிறதென்று விவாதம் ஏற்பட்டதில், போக்யக்காரனே கொடுக்கவேண்டியதென்று சென்னை ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். இப்படியேகுழாய் வைத்த செலவையும் போக்யக்காரனே ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

LOAN FOR BRIBE.

லஞ்சம் கொடுப்பதற்காக கடன் வாங்குவது.

லஞ்சம் கொடுப்பதற்காக வாங்கின கடனை திரும்பிப் பெருவதற்கு கடன் கொடுத்தவன் வ்யாஜ்யம் போட்டால் அது செல்லத்தக்கதல்ல. ஆனல் இப்படிக் கடன் வாங்கினவன் முதல் கோர்ட்டில் லஞ்சம கொடுப்பதற்காக வாங்கினது என்று சொல்லாமல் அதை அப்பீல் கோர்ட்டில் சொல்லும் பக்ஷத்தில் அப்பீல் கோர்ட்டார் அதை ஒப்புக்கொண்டு விசாரிக்கக்கூடாது.

DEFENCE OF THE HEAD OF A FAMILY.

குடும்பத் தலைவனுக்காக எதிர்வாதம்.

ஒரு அவிபக்த குடும்பத்தலைவன் ஒரு க்ரிமினல் கேஸில் அகப்பட்டுக்கொண்டு அவனை

விடுவிக்க எதிர்வாதமாட செலவுக்குப் பணம் கடன் வாங்கும்பக்ஷத்தில் அது அவச்யமான கார்யத்திற்கு கடன்வாங்கினதாகும். ஆகையால் இதர பாகஸ்தர்களை கட்டுப்படுத்தும்.

POWER OF ATTORNEY.

அதிகாரப் பத்ரம்.

ஏஜெண்டு முதலாளியை கட்டுப்படுத்தி பிறருக்கு ஜாமீன் இருக்கலாமென்றாவது அல்லது பிறரோடுசேர்ந்து ப்ராமஸரி நோட்டு போன்ற பத்ரங்கள் எழுதிக் கொடுக்கலாமென்றாவது முதலாளியால் ஏஜெண்டுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரபத்ரத்தில் வ்யக்தமாய் சொல்லியிருந்தாலொழிய ஏஜண்டுகள் முதலாளிகளைக் கட்டுப்படுத்தமுடியாது.

BEMAMI TRANSACTION.

பேர் இரவலான வ்யாபாரம்.

ஒரு கேஸில், ஒரு வீட்டிற்கு ஸொந்தக்காரன் ஒருவனிருக்க வேறொருவன் பெயரால் பேர் இரவலாய் வாடகைச்சீட்டு ஏற்பட்டிருந்தாலும், வாடகையை நிஜ ஸொந்தக்காரனுக்குக்கொடுத்து விடும் பக்ஷத்தில், பேர் இரவலாய் சீட்டு வாங்கிக்கொண்டவனுக்கு மறுபடியும் கொடுக்கவேண்டியதில்லை.

PENAL ASSESSMENT.

தண்டத் தீர்வை.

வாதி தமக்கு ஸொந்தமில்லாத நிலத்தில் ஆக்ரமித்ததற்காக ஸர்க்காரில் அந்த நிலத்தை வாதி விட்டுவிட வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்து, மதராஸ் லாண்ட் என்க்ரோச்மெண்ட் ஆக்ட் 5-வது ஸெக்ஷன்படி தண்டத்தீர்வையும் போடப்பட்டது. அதற்கு ஆறு மாஸத்திற்குப் பிறகு வாதி அந்த நிலம் தமமுடையதென்றும், தாம செலுத்திய தண்டத் தீர்வையை திரும்ப அடைய வேண்டுமென்றும் வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யம் ஷை ஆக்ட் 14-வது ஸெக்ஷன்படி காலாவதியாகி விடுகிறதால், அது செல்லாது.

14 மதராஸ் லா டைம்ஸ் 572.

LIMITATION FOR SUIT BY MINOR MEMBERS.

மைனர் பாகஸ்தர்கள் வ்யாஜ்யம் போடுவதற்குக் காலாவதி.

ஒரு அவிபக்த குடும்பத்தின் தலைவர் தமது மகன், தமது ஸகோதரன் மகன் ஆகிய இந்த இரண்டு மைனர்களுடைய கார்டியனாக இருந்து, ஒரு ஸொத்தை விற்பனை செய்தால், அப்படிச் செய்த விற்பனையை ரத்து செய்வதற்கு வ்யாஜ்ய மூலமானது ஒவ்வொரு மைனருக்கும் வெவ்வேறாக இருக்கிறது. வ்யாஜ்யத்துக்குள்ள ஆதாரங்களும் வெவ்வேறானவை. மைனர்களில் மூத்தவர் மேஜரான 3-வர்ஷத்துக்குப்பிறகு வ்யாஜ்யங்கொண்டு வந்தது காலாவதியாகி விட்டதென்று சொல்லலாமென்றாலும், மற்ற மைனருக்கு காலாவதியாகி விட்டதென்று சொல்வதற்கில்லை. அவர் தாம் மேஜரான மூன்று வர்ஷத்துக்குள் ஷை விற்பனையை ரத்து செய்ய வ்யாஜ்யங்கொண்டு வரலாம்.

DEBT BY FATHER TO PAY FINE.

அபராதம் செலுத்துவதற்கு தகப்பன் கடன் வாங்குதல்.

ஒரு க்ரிமினல் கேஸில் விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்துவதற்காக ஒரு தகப்பன் கடன் வாங்கினால் அந்தக் கடன் மகனைக் கட்டுப்படுத்தாது. அந்தக் கடனை நகை அடகு வைத்து வாங்கியிருந்து, அந்த நகையை மீட்க ஒரு ஸொத்தை அடமானம் செய்திருந்து, ஸொத்தை அடமானம் வாங்கியிருந்தவர் கேஸின் தன்மையை விசாரிக்காமலும், நகை அடகுவைத்திருந்ததின்காரணத்தை விசாரிக்காமலும் இருந்தால், ஸொத்தை அடமானம் செய்தது மகனைக் கட்டுப்படுத்தாது.

15 மதராஸ் லா டைம்ஸ் 372.

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி

VILLAGE SANITATION RULES.

க்ராம ஸுகாதாரவிதிகள்.

மைஸூர் கவர்ன்மெண்டார் க்ராம ஸுகாதார விஷயமாய் சில விதிகள் அச்சிட்டு ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு க்ராமவாஸியும் அவ்விதிகளையறிந்து கொண்டு அவைகளின்படி நடக்க முயலவேண்டியது அவச்யமாகும். அவ்விதிகள் நமது ராஜதானியிலுள்ள க்ராமங்களுக்கும் ஏற்குமாகையால் அவைகளை கீழே மொழி பெயர்த்தெழுதுகிறோம்.

i. தேகசுத்தம்:—நன்றாய் ஸ்நானம் செய்து துணிகளை துவைத்து சரீரத்தையும் உடைகளையும் சுத்தமாய் வைத்துக்கொள். உன்னுடைய குடும்பத்திலுள்ளவர்களையும் உன்கட்டுப்பாட்டுக்குள்பட்டவர்களையும் அம்மாதிரியாகவே சுத்தமாயிருக்கும்படி செய்.

ஜலத்தில் நனைக்க முடியாத படுக்கை முதலியவைகளை அடிக்கடி வெய்யிலில் போட்டு எடுத்து வைக்கவேண்டும்.

ii. தண்ணீர்:—ஸாத்யமான வரையில் குடிப்பதற்கு தண்ணீரை சுத்தமான கிணறுகளிலிருந்தாவது ஊற்றுகளிலிருந்தாவது எடுத்துக்கொள்ளவேண்டும். குடி ஜலம் எடுப்பதற்கு உபயோகப்படும் குளங்கள் குட்டைகள் கிணறுகள் முதலிய ஜலாதாரங்களை அசுத்தம் செய்யாமல் பாதுகாக்க வேண்டும். தண்ணீரில் இலைகளாவது வேறு அழுகிப்போகும் வஸ்துக்களாவது விழாமலும், அசுத்தமான பாத்ரங்கள், வஸ்த்ரங்கள் ஸம்பந்தப்படாமலும் பார்த்து வரவேண்டும். கால்நடைகளுக்கு தேவையாயிருக்கும் தண்ணீருக்கு வேறே ப்ரத்யேகமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

ஆகாரம்:—நன்றாய் வெந்து பக்வமாயிருக்கிறவும் ஸுலபமாய் ஜீர்ணத்துக்கு வரக்கூடியவுமான நல்ல உணவுகளை சாப்பிடவேண்டும்.

iii. உடை:—தேகஸுகத்துக்கு ஏற்றவைகளான உடைகளை உடுத்துக்கொள்ள வேண்டும். குளிர்காலத்தில் தேகத்தை கதகதப்பாய் வைத்திருக்கக்கூடிய உடைகளை உடுத்திக்கொள்ள வேண்டும். மழைகாலங்களில் மழையும், வெயில் காலங்களில் வெயிலும தலையில் படாதபடி குடை, குல்லாய், துணி முதலியவைகளை உபயோகிக்க வேண்டும்.

iv. ஸௌகர்யமான வீடுகள்:—ஓதயில்லாமல் காய்ந்துள்ள உயர்ந்த இடத்தில் தகுந்த தளத்துடன் வீட்டைக் கட்டவேண்டும். வீட்டுக்கருகாமையில் குட்டைகள், ஜலம் நிற்கும் பள்ளங்கள், நன்செய் வயல்கள் ஆகிய இவைகள் இருக்கக்கூடாது. நன்றாய்க் காற்று அடிக்கும்படி வேண்டிய ஜன்னல்களும் வாயிற்படிகளும் வீட்டிற்கிருக்கவேண்டும். வீட்டிலிருக்கும் ஸாமான்கள் எல்லாவற்றையும் அடிக்கடி தட்டி தூசியைத் துடைத்து, மறுபடியும் அவைகளை இருந்த இடத்தில் வைக்க வேண்டும். வீட்டிலுள்ள சந்துகளையும் மூலைகளையும் ரொம்பவும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். ஈரமான வஸ்துக்கள் ஒன்றும வீட்டுக்குள்ளேயாவது அருகாமையிலாவது அழுகிப்போகும்படி விடக்கூடாது.

v. மாட்டுக் கொட்டில்கள்:—குடியிருப்பு வீடுகளுக்கு ஸம்பந்தப்படாமல் தனியாயிருக்கும் கொட்டில்களில் ஆடுமாடு முதலானவைகளைக் கட்டவேண்டும். கொட்டில்கள் கூடிய வரையில் சுத்தமாயும், ஈரமில்லாமலுமிருக்க வேண்டும். மாட்டின் மூத்ரம் முதலானவைகளை ஒரு குழியில் கொட்டி சேர்த்து வைத்து

எருவாக உபயோகப்படுத்த வேண்டும். எரு வை ஒரு பெரிய குழியில் போட்டுவைத்து வாரத்துக்கு ஒரு தடவை மண்ணையாவது தழையாவது போட்டு மூடவேண்டும்.

vi. குப்பை, ஈ முதலியன:—வீட்டுக்குள்ளேயாவது, வீட்டுக்கு அருகாமையிலாவது சாம்பல், குப்பை, செத்தை ஆகிய இவைகள் சேரும்படி விடக்கூடாது. தெருவிலாவது மனிதர்கள் புழங்குகிற இடங்களிலாவது அவைகளை எறியக்கூடாது. குப்பைத்தொட்டியிலாவது வேறே பள்ளங்களிலாவது போட்டு வைத்து அடிக்கடி எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். வீட்டையும் சுற்றுப்பக்கத்தையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் ஈக்கள் கொசுக்கள் பூச்சி புழுக்கள் ஆகிய இவைகள் நெருங்கமாட்டா.

vii. கக்கூஸுகள்:—கக்கூஸுகள் இல்லாத இடங்களில் ஜனங்கள் வெளியில் எட்டியுள்ள வயல்களுக்குப் போகவேண்டும். தெருக்களையும், பொது ஸ்தலங்களையும், குடியிருக்கும் வீட்டுக்கு 100 கஜம் சுற்றிலும் உள்ள இடத்தையும் மலஜலாதிகளால் அசுத்தம் செய்யாமல் நேர்த்தியாய் வைத்துக் கொள்ளவேண்டும். ஆழமான குழிகளையும் கிணறுகளையும் கக்கூஸாக உபயோகப்படுத்தும் வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும்.

viii. சாக்கடை :— வீட்டுக்குள்ளேயாவது வீட்டுக்கு வெளிப்பக்கத்திலாவது சாக்கடை ஜலம் தேங்கி பூமிக்குள் சுவறும்படி விடக்கூடாது. பப்ளிக் தெருச் சாக்கடை யில்லாத இடங்களில் சாக்கடை ஜலத்தை ஒரு தொட்டி அல்லது சிறிய கல்லால் கட்டப்பட்ட குழியில் சேர்த்து, அடிக்கடி வெளியில் எடுத்துக் கொண்டு போய் கொட்டும்படியான ஏற்பாடு செய்யவேண்டும்.

சாக்கடை ஜலத்தை தொட்டு எடுப்பது அநேகருக்கு ஜாதி ஆசாரத்துக்கு விரோதமாயிருப்பதால், க்ராமங்களில் இதைப்பற்றி தனி ஏற்பாடுகள் செய்யவேண்டியதா யிருக்கும்.

ix. காலி நிலங்கள்:—சிறு க்ராமமானால் அதைச் சுற்றிலும் ஒரு பர்லாங் விஸ்தீரணத்திற்குள்ளும்; பெரியக்ராமமானால் அதைச்சுற்றி இரண்டு பர்லாங் தூரத்துக்குள்ளும் இருக்கக்கூடிய காலி நிலங்களில் ஜலம் தேங்கி ஈரமாயிராமலும், புல்பூண்டுகள் முளைக்காமலும் வைத்துக்கொள்ளவேணும்.

க்ராமத்துக்குள்ளும் அதற்கு வெளியில் ஒரு பர்லாங்கு தூரத்திலும் ஜலந் தேங்கி யிருக்கும் குழிகளை ஜலத்தை வடியச் செய்து, அவைகளையெல்லாம் தூர்த்துவிடவேண்டும்.

x. ரஸ்தாக்கள்:—கப்பி, சுக்கான், கெட்டி மண் முதலியவைகளால் செம்மையாக ரோடு போட்டு ரோட்டிற்கு இருபக்கத்திலும் தண்ணீர் போவதற்கு கருங்கல் அல்லது செங்கல்லால் வாய்க் கால்கள் கட்டவேண்டும்.

xi சில முன் ஜாக்ரதை விஷயங்கள்:—எப்போதும் ஒரு கட்டில் அல்லது விசுபலகை (பெஞ்ச்) மேல் படுத்து நித்ரை செய்ய வேண்டும். காற்றில்லாத அறையிலாவது, அதிகக் கூட்டமிருக்கும் அறையிலாவது நித்ரை செய்யக் கூடாது.

வீட்டில் தரையிலும் சுவரிலும் எச்சில் துப்பக்கூடாது.

போதுமானவரைக்கும்தேகப்பயிற்சிசெய்து வெளியில் நல்ல காற்றில் கூடுமானவரையில் காலத்தைக் கழிக்கவேண்டும்.

xii. ஒட்டுவாரொட்டி வ்யாதிகள் :—அம்மை குத்திக்கொள்வதால் வைஸூரி வாராமல் தடுத்துக்கொள்ளலாம். எலிகள் செத்துவிழ ஆரம்பித்தவுடனே வீட்டை விட்டுவிட்டு வேறிடத்துக்குப் போனால், ப்ளேக் வாராமல் தடுத்துக் கொள்ளலாம். தவிர, சூடுள்ள ஆகாரத்தைச் சாப்பிட்டு நன்றாய்க் கொதிக்கவைத்த தண்ணீ

ரைக் குடிப்பதால் காலராவையும், தடுக்கலாம். ஈரமுள்ள ஸ்தலங்களில் புழுங்காமல் கொசுக் களேயும் தடுத்தால், மலேரியா என்னும் ஜ்வரம் வராது. கொயினு சாப்பிட்டால் மலேரியா ஸ்வஸ்தமாகும்.

HOW TO AVOID TAKING COLD.

ஜலதோஷத்தைத் தடுக்க உபாயம்.

இது விஷயமாய் 'வைத்யகலாநிதி'யில் ஒரு வ்யாஸம் காணப்படுகிறது. அதில் இதைப் பற்றி டாக்டர் ரிச்சர்ட் என்பவர் கூறும் உபாயம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த டாக்டர் பின் வருமாறு சொல்லுகிறார்:—எவ்வித ஜலதோஷத்தையும் ஆரம்பத்திலேயே வேரறுப்பதற்கு நான் கண்டு பிடித்திருக்கிற ஒரு ஸுலபமான வழி அனைவருக்கும் தகுந்ததாயிருக்குமென்று நம்புகிறேன். சில வர்ஷங்களுக்கு முன் எனது நண்பர் ஒருவர், ஜலதோஷம் அதிகமாயிருக்கும்போது தன் மொட்டைத் தலையையும் முகத்தையும் அடிக்கடி நன்றாய்ச் சூடுண்டாகும்படி தேய்த்து, அவ்விடங்களில் ரத்தம் நன்றாகப் பரவும்படிசெய்து வந்ததில், ஜல தோஷத்தைத் தடுத்து வந்ததாகச் சொன்னார். பிறகு, இவ்விஷயத்தை மனதிலெண்ணிக்கொண்டே, தும்மலுண்டாகும்போது முகம் பருப்பதையும், ஜலதோஷம் பிடித்தவர் ஸ்வபாவமாகவும் தமது இஷ்டத்தின்மேலும் அதிகமாக இவ்விதம் தும்முவதையும் நன்றாக நான் உற்றுநோக்கி வந்ததில், உட்புறங்களில் சைத்யத்தினுல் பாதைப் படும் அவயவங்களுக்கு அதிக ரத்த வோட்டத்தையும், அதன் மூலமாய் முகத்திற்கும் மூக்குக்கும் வேண்டிய சூட்டையு முண்டுபண்ணுவதற்கே இவ்வாறு தும்மலென்னும் இயற்கையான கார்யம் ஏற்பட்டிருப்பதாய் அறிந்தேன். அதுமுதல், இந்த முறையை நிலைநிறுத்துவதற்காக, ஜலதோஷத்தினுல் முகம் மூதலியவை குளிர்ந்தும் வெளுத்துமிருக்கும்போது, அவ்வவயங்களில் ரத்தம் அதிகமாய் பரவுவதற்கு வேண்டிய அனேக உபாயங்களை பரீக்ஷா பூர்வமாகச் செய்துவந்தேன். ஆகையால், நான் இப்பொழுது சொல்வது என்னுடைய மூன்று வர்ஷத்திய விசேஷானுபவத்தின் மேல் தீர்மானிக்கப்பட்ட விஷயம்.

எவனொருவனுக்கு ஜல தோஷமுண்டாய் மூக்கின் உட்புறம் சிறிது சுருக்கங்கொண்டு இருப்பதாக உணர்ச்சியுண்டாகிறதோ, அவன் உடனே அடியில் கூறப்படும் விதம் செய்ய வேண்டும். தலை நன்றாக பூமியில் படும்படி நின்றவாறே குனிந்துகொண்டு, முகம் நன்கு சிவக்கும் வரையில் அந்நிலையிலேயே கஷ்டப் பட்டு நிற்கவேண்டும். பிறகு, தலையை நிமிர்த்தி மூக்குவழியாகவும், சிறிது வாய்வழியாகவும் இழுத்திழுத்து மூச்சு விடவேண்டியது. நாசியின் த்வாரங்கள் நன்றாகத் திறந்து, மூக்கு வழியாகவே மூச்சுவிடும் நிலைமை ஏற்படும் வரையில், இவ்விதமே அடிக்கடி குனிந்து நிமிரவேண்டும். ஆனால், நன்கு தேஹப் பயிற்சி செய்து, மிகச் சூடான பானங்களை அடிக்கடி உட்கொள்வதாலும் ஜலதோஷம் குணமாவதாக பலர் சொல்லுகிறார்கள். ஆகிலும், அவற்றால் அதிக ஜல தோஷத்தில் நாசியின் த்வாரம் சைத்யத்தினுல் சுருங்கி அடைபட்டிருப்பது குறைவதில்லை.

ஆகையால், இவ்விஷயம் பொதுவாக வெகு ஸாதாரணமானதென்றே பெரும்பான்மையோருக்குத் தோற்றியபோதிலும், கபஜ்வரம் முதலிய ப்ராணபாயமான ரோகங்கள் வராதபடி தடுப்பதற்கு இதுவே வெகு பெரிய விஷயமென்று அனைவரும் க்ரஹிக்கவேண்டும்.

INSECT BITES.

பூச்சிக் கடிகள்.

பூச்சிக்கடிகளைத் தடுப்பதற்கும், ஸ்வஸ்தப் படுத்துவதற்கும் பின்வரும் முறை ச்லாக்யமானதென்று சொல்லப்படுகிறது. ஒரு ஒளன்ஸ் எப்ஸம் ஸால்ட் (Epsom Salt) என்னும் உப்பை பட்டணம்படியால் ½-படி

ஜலத்தில் கலந்து அதில். உடம்புதேய்க்கும் துணியை நனைத்துக் கொள்ளவேண்டும். துணியை வெளியிலெடுத்தால் ஜலம் சொட்டாதபடி அவ்வளவு குறைவாய் ஜலம் துணியிலிருந்தால் போதும். பிறகு அந்தத் துணியினால் தேகம் பூராவும் தேய்த்துக்கொள்ளவும். இதனால் தேகம் ஈரமாய்ப்போகும். பிறகு காய்ந்த துணியினால் துடைக்காமலே வஸ்த்ரங்களையும் சட்டை முதலியவைகளையும் உடுத்திக் கொள்ளவேண்டும். இப்படிச்செய்தால் தெள்ளுப்பூச்சி, கொசு, ஈ முதலியவைகள் தேகத்தில் வந்து உட்காரவே மாட்டா.

காடுகள், படுகைகள் முதலியவைகளிலும், நீர்த்தாக்கான விடங்களிலும் இந்தப்பூச்சிகளின் உபத்ரவம் அதிகம். இப்படிப்பட்ட இடங்களில் யாராவது போகநேர்ந்தால், மேலேசொன்ன ஜலம் தயார்செய்வதில் அதிக மருந்துபோட்டுத் தயார்செய்து உபயோகித்தால் பூச்சிகளின் உபத்ரவமு இராது. இந்த மருந்தை முகம், காது, கழுத்து, கைகள் முதலிய இடங்களில் துணியால் தடவிக் காயவிட வேண்டும். காய்ந்தபிறகு தடவின இடங்களில் வெண்மையான பொடி பூசினதுபோலிருக்கும். ஒரு பூச்சியும் கிட்ட அண்டாது.

இந்த மருந்து ஜலத்தை பூச்சிக்கடிக்கும் தடவலாம். இதனால் பூச்சிகடி ஸ்வஸ்தமாவதோடு தோலைப்பற்றிய அநேக வ்யாதிகளும் குணமாகின்றனவாம்.

YOUTHS AND TOBACCO.

சிறுவர்களும் புகையிலையும்.

சிறுவயதில் புகையிலையை வழக்கமாய் உபயோகப்படுத்துவதால் அது சிறுவர்களின் தேகவளர்ச்சிக்கும், மனோசக்திகளின் விருத்திக்கும கெடுதலாகமுடியும். சுருட்டு, விகாட்டு முதலியவைகள் குடிப்பதால் ஜீர்ண சக்திக் குறைநதுபோகும். ஹ்ருதயம் மிகவும் படபடப்பாய் அடிக்கும. இன்னும் சுருட்டுக் குடிப்பதானது ரக்தம செய்யவேண்டிய வேலைகளெல்லாவற்றையும் தடுத்து, ஆகாரஸத்தை ரக்தத்தோடு சேராமல் செய்து நரம்புகளையும் கெடுத்து விடுகிறது. பெரியவர்களாகிற வரையில், அதாவது 30 வயஸாகிற வரையிலாவது சுருட்டு முதலியவைகள் பிடிக்கக்கூடாது. பால்யத்திலேயே சுருட்டுப் பிடிக்கிற ஒரு பேர்வழியை சுருட்டே பிடிக்காமலிருக்கும் இன்னொரு பேர்வழி யோடு ஒப்பிட்டுப்பார்க்கும்பக்ஷத்தில் சுருட்டுக்குடிப்பதனாலுண்டாகிற தீங்குகள் நன்றாய்த் தெரியவரும். சுருட்டுக்குடிக்கும் வாலிபனுக்கு தேகவன்மையும் புத்தியும் குறைந்து போகிறது.

வெகு நாள்களுக்கு முன்னமேயே ஜெர்மன் கவர்ன்மெண்டார் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் சுருட்டுக்குடிப்பதைத் தடுப்பதற்காக சட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே மாதிரி நம்முடைய மதராஸ் கவர்ன்மெண்டாரும் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

FOREIGN BODIES IN THE EAR.

காதுக்குள் விழும் வஸ்துக்கள்.

காதுக்குள் பூச்சிகள் நுழைந்துவிட்டால் எண்ணெயையாவது ஜலத்தையாவது விடவும். பூச்சி எண்ணெய் அல்லது ஜலத்தில் மூச்சு விடமுடியாமல் இறந்துபோய் மிதந்து வெளியே வந்துவிடும். பிறகு காதை பீச்சாங்குழாயால் அதாவது விரிஞ்சால் சுத்தி செய்துகொள்ள வேண்டியது அநேக ஸமயங்களில் அவச்யமாகும். பூச்சியல்லாமல் வேறு எந்த வஸ்துவிழுந்துவிட்டாலும் தெரிந்த டாக்டரைத் தவிர வேறு யாரும் ஒன்றும் செய்யக்கூடாது.

REMEDY FOR EAR-ACHE.

காது வலிக்கு சாந்தி.

(1) துளசி இலையை நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி காதில் விட்டு வரவும். (2) ஸாம்ப்ராணியை நல்லெண்ணெயில் காய்ச்சி காதில் விடவும். (3) பெருங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகிய இவைகளை நல்லெண்ணெயில் சேர்த்து காய்ச்சி காதில் விடவும். (4) மிளகாய்ப் பழத்தில் கொஞ்சம பட்டை சாராயத்தை அடைத்து வைத்திருந்து பின்பு காதில்விட்டு பஞ்சால்மூடவும். (5) சுடுசாம்பலை பொட்டணம் கட்டிக்கொண்டு காதில் ஒத்தவும்—விச்வகர்ம்குலோபகாரி.

The Boys' World.

பையன்கள் பகுதி.

A NEW SENSE IN PLANTS.

செடிகளுக்கு ஒரு புது அறிவு.

ஸ்தாவர சாஸ்த்ரிகள் செடியைப்பற்றி ஒரு புது விஷயம் கண்டு பிடித்திருக்கிறார்கள், அதாவது செடியானது கொஞ்சதூரத்திலிருக்கப்பட்ட பொருள்களை உணர்ந்து கொள்ளுகிறது என்பதே. செடி ஒரு பொருளின்மேல் பட்டுக் கொண்டிராவிட்டாலும் அந்தப் பொருளிருப்பதை எப்படியோ அறிந்து கொண்டு, அதற்கேற்றபடி நடந்துகொள்ளுகின்றது. இப்படியறிவதற்கு செடிக்கு ஒரு புது அறிவு அதாவது இந்த்ரியம் இருக்கக் கூடுமென்று சொல்லப்படுகிறது. அப்படிப் பட்ட ஒரு புது அறிவு செடிக்கு உண்டென்று ஊஹிப்பதற்கு தாவரசாஸ்த்ரிகள் செய்த சில பரீக்ஷைகளையும் அவர்கள் பார்த்த விஷயங்களையும் கீழே சுருக்கமாய் குறிப்பிடுகிறோம்.

'ஸன்ட்யூ' (Sundew) என்று ஒரு செடி பூச்சிகளைத்தின்னும் தன்மையுள்ளது. இந்தச் செடியின் இலைகளில் மெல்லிய கொடிகள் இருக்கின்றன. அந்தக்கொடிகளில் ஒருவித பசையிருக்கிறது. இதின் இலைகளில் ஏதாவது ஒரு பூச்சி அகஸ்மாத்தாய்ப் பட்டால் உடனே அந்தக்கொடிகள் அதைப்பிடித்து மேலே சுற்றிக்கொன்று விடுகின்றன. இது எல்லா தாவர சாஸ்த்ரிக்கும் தெரிந்தது. ஆனால் இந்தச்செடியைப்பற்றி ஒரு விசேஷ குணம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரம் பின் வருமாறு. 'ஸன்ட்யூ'ச்செடியின் இலையொன்றுக்கு அரையங்குல தூரத்தில் ஒரு ஈயை ஒரு கம்பியில் கட்டிவைத்திருந்தால், கட்டி வைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் 'ஸன்ட்யூ' இலையானது ஈயின் பக்கம் நகர்ந்து விடுகிறது. இலையிலுள்ள கொடிகள் ஈயைப்பிடித்துச் சுற்றிக்கொள்ளுகின்றன. சிறிது நேரத்துக்கெல்லாம் ஈயானது இறந்து போகிறது. இந்த 'ஸன்ட்யூ' இலையானது ஈ இருக்குமிடம் தேடி நகர்ந்தது ஆச்சர்யமாயிருக்கிறது.

'டாடர்' (Dodder) என்று ஒருவித புல்லுருவிச் செடியிருக்கிறது. இது, தான் அடைய வேண்டிய மரம் அல்லது செடி ரொம்ப தூரத்திலிருந்தாலும், அதை நோக்கி ப்ரயாணம் செய்யும் இயல்புள்ளது.

இந்தப் புல்லுருவி பூமியில் முளைக்கும் போது அதிலிருந்து ஒரு நூல் போன்ற கொடி வளருகிறது. அது பக்கத்திலுள்ள புல் வகைகளில் ஊடுருவிச்சென்று தனக்கு வேண்டிய செடியைத் தேடிப்போகிறது. அந்தச் செடியின் அருகில்போனதும புல்லுருவியின் கொடி வெகு வேகமாய் வளர்ந்து செடியைப் பிடித்துக்கொள்ளுகிறது. பிடித்துக்கொண்டதும், கொடியில் நூற்றுக்கணக்கான கிளைகள் உண்டாகி அவைகள் செடியின் ஸாரத்தையெல்லாம் க்ரஹித்துக் கொண்டுபோய் புல்லுருவி வளருவதற்குக் கொடுக்கின்றன.

பாகல், பரங்கி, பூசனி முதலிய கொடிகளின் கணுக்களில் கம்பிபோன்ற மெல்லிய கொடிவளர்ந்து குச்சி முதலியவைகளைச் சுற்றிக்கொள்கின்றன வல்லவா? அவைகளுக்கு இங்க்லீஷில் 'டெண்ட்ரில்' (Tendril) என்று பெயர். இந்தக் கம்பிகள் கொடிகள் படரும் கூறை பந்தல் முதலியவைகளிலுள்ள குச்சிகளில் சுற்றிக்கொண்டு கொடி நழுவி விழாதபடி காக்கின்றன. ஆதலால் இவற்றிற்கு பற்றுக் கம்பிகள் என்றும் பெயருண்டு. இந்தக் கம்பிகளும் தூரத்திலுள்ள பொருள்களை எப்படியோ அறிந்து கொள்ளுகின்றன. இது விஷயமாய் செய்யப்பட்ட ஒரு பரீக்ஷையை இங்கு

விவரிக்கிறோம். ஒரு சிறிய பட்டாணிச்செடியின் நுனியில் இரண்டு இலைகளும் அவைகளின் இடையில் ஒரு பற்றுக் கம்பியும் இருந்தன. இவைகள் நேராக இருந்தன. இந்தச் செடிக்குப் பக்கத்தில, ஒரு குச்சியை நட்டு, குச்சியின் ஒரு கிளை டெண்ட்ரிலுக்கு இரண்டங்குல தூரத்திலிருக்கும்படி யமைத்து வைக்கப்பட்டது. பரீக்ஷை செய்தவர்கள் சில மணி நேரம் அந்தச்செடியை கவனித்து வந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் 'டெண்ட்ரில்' என்னும் பற்றுக் கம்பியானது நேராயிருந்தது கீழேசாய்ந்து, பூமி மட்டத்துக்கு ஸமமான நிலைமையை யடைந்தது. பிறகு குச்சியின் பக்கம் சாய்ந்தது. அதே ஸமயத்தில் செடியின் மேல் பாகம் மெதுவாக குச்சி பக்கமாகச் சாய்ந்தது. போதுமான வளவு ஸமீபமாய் வந்தவுடனே கம்பியின் நுனியானது குச்சியைச் சுற்றிக்கொண்டது. ஆகவே இந்தச்செடி தனதருகில் ஒரு குச்சி யிருந்ததென்பதை யறிந்துகொண்டதனால் தான் அதன் பக்கம் சாய்ந்ததென்று யாவரும் ஊஹிப்பதற் கிடமேற்படுகிறது.

தென்னாப்ரிக்காவில் ஒரூரில் ஒரு கொட்டகைக்கு நாகத்தகட்டால் கூரை போட்டிருந்தது. அதன்மேல் கள்ளிபோன்ற ஒரு செடி படர்ந்திருந்தது. அந்தத்தகட்டில் ஒரு பாகம் துருப்பிடித்து கூரையில் த்வாரம் ஏற்பட்டிருந்தது. படர்ந்துவளர்ந்து கொண்டிருந்த மேற்படி செடியானது இந்தத்வாரத்தின்கிட்ட வந்ததும் அந்தச்செடியில் ஏராளமான வேர்கள் உண்டாகி த்வாரத்தின் வழியாக வளர்ந்து சென்று கொட்டகையின் கீழேயுள்ள மண்ணில் ஊன்றிக்கொண்டன. த்வாரத்துக்கு வந்ததும் மேற்படி செடியில் வேர்கள் உண்டாவானேன்? அந்த த்வாரத்தின் வழியாக வேர்கள் போனால் பூமியையடையுமென்பது அவைகளுக்கு எப்படித் தெரிந்தது?

வேர்களின் இப்படிப்பட்ட தன்மையைப் பற்றி ஒரு மேல்நாட்டு சாஸ்த்ரி 50 வர்ஷங்களுக்கு முன்னால் ஒரு விஷயங்கண்டு பிடித்திருந்தார். அந்த விஷயம் பின்வருமாறு, ஒரு 'ஓக்' (oak) மரத்தில் ஒரு பொந்திருந்தது. அந்தப் பொந்தில் மரத்தின்பாகங்கள் மட்கிக்கிடந்தன. அதில் அகஸ்மாத்தாய் பேரிக்காய் வர்க்கத்தைச்சேர்ந்த ஒரு மரத்தின் விதைவிழுந்து முளைத்துவிட்டது. செடி கொஞ்சம் பெரியதானதும் அதிலிருந்து அநேகவேர்கள் உண்டாகி பொந்தைவிட்டு வெளிக்கிளம்பி கீழே தொங்கின. வேர்கள் மிகவும் அடர்த்தியாயிருந்தன. இது வரையில் அவைகளைப்பற்றி ஆச்சர்யப்படத்தக்கதுஒன்றுமில்லை. தொங்கிக்கொண்டிருந்த வேர்களின் கீழே ஒரு அடிசதுரமுள்ள ஒரு கல் இருந்தது. இந்த வேர்கள் நேரே கல்லின் கிட்டப்போகாமல் கல்லுக்குமேல் $1\frac{1}{2}$ அடி உயரத்துக்கு வந்தவுடன் வேர்கள் இரண்டு பாகமாகப் பிரிந்தன. ஒரு பாகம் கல்லின் ஒரு பக்கத்திலும் இன்னொரு பாகம் கல்லின் இன்னொரு பக்கத்திலுமாகப் பிரிந்து போய் கீழே நோக்கி வளர்ந்தன. அவைகளில் ஒரு வேர் இரண்டு பாகமாகப்பிரிந்து இரண்டும் வெவ்வேறு பக்கத்துக்குப் போயின. வேர்களெல்லாம் கல்லின் ஓரமாய் பூமிக்கு வந்த பிறகு கல்லின் அடியில் துளைத்துக் கொண்டு போயின. இப்படியாக அந்தக் கல்லைச்சுற்றிலும் வேர்கள் பின்னிக்கொண்டன. வேர்கள் மேற் சொன்னபடி கல்லின்பக்கம் வந்தவுடன் இரண்டு பிரிவாகப் பிரிந்ததற்கு இன்ன காரணமென்பது தெரியவில்லை. மேலே சொன்ன ஸம்பவங்களைக்கொண்டு பற்றுக் கம்பிகளுக்கும் வேர்களுக்கும் ஒரு ஞான அறிவு (அதாவது இந்த்ரியம்) இருக்கவேண்டுமென்று அநேகர் ஊஹிக்கிறார்கள்.

FLIGHT ROUND THE WORLD.

ஆகாயக் கப்பலில் பூ ப்ரதக்ஷணம்.

1915-ம் வர்ஷம் பனமாகால்வாய் ஸம்பந்தமாக அமெரிக்காவில் ஒரு பொருள் காட்சி நடத்தப்போகிறார்களென்றும், அந்தப்பொருள் காட்சியை யொட்டி ஆகாயக் கப்பலில் பூ ப்ரதக்ஷணப்பந்தயம் ஒன்று நடக்குமென்றும் சென்ற மே மாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அந்த பந்தயத்துக்குப் போட்டிபோடும் ஆகாய யாத்ரிகர்கள் தங்குவதற்கும், கப்பலுக்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிக்கொள்ளுவதற்கும் டெபோக்கள் ஸ்தாபிக்க வேண்டிய ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யப் போகிறார்களாம். ஆகாயக் கப்பல்யாத்ரிகர்கள் எங்கெந்த ஊர்கள் வழியாகப் போவார்களோ அந்த ஊர்களில் முக்யமானவைகளில் மேற்படி டெம்பாக்கள் ஸ்தாபிப்பார்கள்.

இந்தப் பந்தய யாத்ரை அடுத்த வர்ஷம் மே மாஸம் நடைபெறும். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி ஆகாயக் கப்பல்காரர்கள் பொருள்காட்சி நடக்கும் ஸான் ப்ரான்ஸிஸ்கோ பட்டணத்திலிருந்து சிகாகோ, ந்யூயார்க் வழியாக கனடா தேசத்துக்குப் போய், அங்கே டொரண்டோ, மாண்ட்ரீல், க்வெபக் ஆகிய இந்தப் பட்டணங்களின் வழியாக லாப்ராடார் மாகாணத்துக்குப் போய், அங்கிருந்து ஸமுத்ரத்தைக் கடந்து க்ரீன்லண்ட் தீவுக்குப் போவார்கள். க்ரீன்லண்டிலிருந்து ஸமுத்ரத்தைக் கடந்து ஐஸ்லண்ட் தீவுக்கும், அங்கிருந்து ஷெட்லண்ட் தீவுகளுக்கும்போய், அங்கிருந்து புறப்பட்டு லண்டனுக்குப் போவார்கள். லண்டனிலிருந்து பாரிஸ், பெர்லின், ஸெயிண்ட்பீடர்ஸ்பர்க் ஆகிய இவைகளுக்குப் போய் ட்ரான்ஸ் ஸைபீரியன் ரெயில்வே மார்க்கமாய் வ்ளாடிவாஸ்டக், ஜப்பான், காம்ஸ்கட்கா, அலாஸ்கா ஆகிய இவைகளைக் கடந்து கனடா தேசத்தின் மேற்கு பாகமாகிய ப்ரிட்டிஷ் கொலம்பியாவுக்குப் போய் அதன் வழியாய் ஸான்ப்ரான்ஸிஸ்கோவிலுள்ள பொருள்காட்சி சாலைக்குப் போய்ச் சேருவார்கள்.

ஸமுத்ரத்தைக் கடந்து போவதில் லாப்ரடாரிலிருந்து க்ரீன்லண்ட் தீவுக்குப் போவது தான் ரொம்ப தூரமான யாத்ரை. அந்த ஸமயம் அமெரிக்க ஐக்ய நாடுகளின் கப்பல்படை ஆகாயக் கப்பல்களுக்கு உதவியாக ஸமுத்ரத்தில்கூட போய்க்கொண்டிருக்கும்.

ஐஸ்லண்டிலிருந்து ஷெட்லண்ட் தீவுகளுக்குப் போகும்போது டென்மார்க் தேசத்தின் கப்பல்படை கூடப்போகும்.

ஷெட்லண்ட் தீவுகளிலிருந்து ஸ்காட்லண்ட் தேசம் வரையில் ப்ரிட்டிஷ் கப்பல் படை துணைக்கு வருமாம். ஸுமார் 50 ஆகாயயாத்ரிகர்கள் இந்தப் பந்தயத்தில் போட்டி போடுவார்கள். மொத்தம் பந்தய வெகுமதிகளின் மதிப்பு 15 லக்ஷம் ரூபாயாகும்.

MADRAS.

மதராஸ்.

சென்னப்பட்டணத்துக்கு அப்பெயர் எப்படி வந்ததென்பதைப் பற்றி 'கல்லாசிரியன்' பின் வருமாறு எழுதுகிறது.

இங்க்லிஷ்காரர் முதல் முதல் சென்னை ராஜதானியின் வடக்கில் வந்து இறங்கினார்கள். அங்கே வர்த்தகம் நடத்த அவர்களுக்கு அனுகூலம் ஏற்படவில்லை. அதனால் இங்க்லிஷ்காரர் தெற்கில் வந்து வாத்தகத்திற்கு இடம் ஏற்படுத்திக்கொள்ள எண்ணினார்கள். அதனால் கடற்கரையை யடுத்துத் தெற்குப் புறமாக வந்தார்கள். அப்போது மயிலாப்பூர் சிறந்த நகரமாக இருந்தது. அங்கே போர்த்துக்கேசியர் நிலைத்து நல்ல வ்யாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய அநுஸரணை இங்க்லிஷ்காரருக்கு அதிகம் ஏற்பட்டது. அதனால், மயிலாப்பூருக்கு வடக்கில் ஒரு வாத்தக சாலை ஏற்படுத்த முயன்றார்கள்.

அந்த இடம் அப்போது செங்கல்பட்டை ஆண்டுகொண்டிருந்த தர்மாலு வேங்கடாததிரி நாயுடு என்பவருடைய அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது. அதனால் இங்க்லிஷ்காரர் அந்த அரசருடைய அநுமதியைக் கேட்டார்கள். அவர் அங்கே ஒரு வர்த்தக சாலை கட்டிக்கொள்ள இங்க்லிஷ்காரருக்கு அநுமதி கொடுத்து, அதனால் ஏற்படும் பட்டணத்தைத் தன் தகப்பனார் பெயரால் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினர். அவர் தகப்பனாருக்குச் சென்னப்பநாயுடு என்று பெயர். அதனால் அந்தப் பட்டணத்திற்குச் சென்னப்பட்டணம் என்று பெயரிடவேண்டும என்று சொன்னார். இங்க்லிஷ்காரர் சென்னையிலஇப்போது கோட்டையுள்ள இடத்தில் ஒரு வர்த்தக சாலை கட்டி வ்யாபாரம் நடத்தினார்கள். அப்போது இந்த இடம் கரையார் என்னும் ஒருவகை ஜாதியார் வஸிக்கும் ஒரு சிறு ஊராக இருந்தது. இங்க்லிஷ்காரர் இங்கே வர்த்தகம் தொடங்கின பிறகு, வர்த்தக சாலையை அடுத்து ஒரு பெரிய பட்டணம் உண்டாயிற்று. அதற்குச் சென்னப்பட்டணம் என்று இங்க்லிஷ்காரர் பெயரிட்டார்கள்.

JUPITER.

வியாழன்.

ஸூர்ய மண்டலத்திலுள்ள க்ரகங்களில் வியாழன்தான் மற்றெல்லா வற்றையும் விட மிகப் பெரியது. வியாழனுக்கு குரு அல்லது ப்ரஹஸ்பதி என்று வேறு பெயர்கள் உண்டு.

க்ரகங்களையெல்லாம் ஒவ்வொன்றிலும் நான்குள்ள இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். புதன், சுக்ரன், பூமி, செவ்வாய் ஆகிய இந்த நான்கு க்ரகங்களும் முதல் பிரிவைச் சேர்ந்தவை. இவைகள் சிறிய க்ரகங்களாகும். ஆனல் இவைகளின் பருமனை யுத்தேசிக்கும்போது ரொம்ப கனமானவை யென்று சொல்லவேண்டும். இரண்டாவது பிரிவைச் சேர்ந்த க்ரஹங்கள் வியாழன், சனி, யுரேனஸ், நெப்ட்யூன் ஆகிய இவைகளே. இவைகள் முதல் பிரிவைச் சேர்ந்த க்ரஹங்களைவிட மிகவும் பெரியவை. ஆனல் இவைகளுக்கு பருமனுக்குத் தக்க கனம் கிடையாது.

ஸூர்ய மண்டலத்தில் மேற்சொன்ன 8-க்ரஹங்களே யல்லாமல் மிகவும சிறியவையான க்ரஹங்களின் கூட்டம் ஒன்று இருக்கிறது. இவைகளும் ஸூர்யனைச் சுற்றி வருகின்றன. இவைகள் முன்பு ஒரு பெரிய க்ரஹமாயிருந்து பிறகு உடைந்து போனதின் பாகங்களாகு மென்று சில வானசாஸ்த்ரிகள் சொல்லுகிறார்கள்.

வியாழன் நமது பூமியைவிட 1300 மடங்கு பெரியது. ஆனல் அது மிகவும் லேசாகையால் பூமியைவிட 300 மடங்கு கனத்தானிருக்கிறது.

வியாழனைச் சுற்றி 8 உபக்ரஹங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் 4-உபக்ரஹங்களை நாம் ஸுலபமாய்ப் பார்க்கலாம். வியாழனில் மனிதர்களாவது வேறு ஜீவன்களாவது ஜீவித்திருப்பது முடியாதென்று சொல்லப்படுகிறது.

ALBINISM AMONG CROWS.

வெள்ளைக் காக்கைகள்!

அத்திப்பூவையும், வெள்ளைக் காக்கையையும், மீனுடைய கால்களையும் ஒருவரும் பார்த்ததில்லை யென்று சொல்வது ஸகஜம். ஆனல் ரங்கூனில் ஸமீபத்தில் ஒரு ரெயில்வே உத்யோகஸ்தர் காக்கைக்கூடு ஒன்றில் தேகம் முழுவதும் வெண்மையாயிருந்த ஒரு காக்கைக் குஞ்சைப் பார்த்ததாக 'மதராஸ் மெயில்' பத்ரிகை எழுதுகிறது.

மேலும் வெள்ளைக் காக்கைகள் இந்தியாவில் சில இடங்களில் இருந்திருக்கின்றனவாம். உதாரணமாக சில வர்ஷங்களுக்கு முன் கல்கத்தாவைச் சேர்ந்த ஹௌரா பட்டணத்தில் முழுவதும் வெண்மையான காகம் ஒன்று சுடப்பட்டதாம். இப்போதுள்ள புர்த்வான் மகாராஜாவின தகப்பனார் வைத்திருந்த ம்ருகக் காட்சிசாலையில் ஒரு வெள்ளைக் காகம இருந்ததாம.

The Ladies' World

ஸ்த்ரீகள் பகுதி.

CARE OF BABIES.

சிசுக்களின் ஸம்ரக்ஷணை.

வர்ஷந்தோறும் நாகரீகம் பொருந்தியுள்ள தேசங்களில் மாத்ரம் 3,200,000 சிசுக்கள் இறந்து போவதாகத் தெரியவருகிறது. அதாவது ஒரு மணிக்கு 360 சிசுக்களாக, நாள் ஒன்றுக்கு 8,640 சிசுக்கள் வீதம் இறந்து போகின்றன. இவ்விதமாக இறந்து போகும் குழந்தைகளில் ஸாதாரணமாக பேர்பாதிக் குழந்தைகள் கேவலம் அச்ரத்தையாலும் தெரியாத்தனத்தாலும் இறந்து போகின்றன. ஸ்வல்பபரிஹாரங்களை அனுஸரிப்பதால் இந்த மரணங்களை நீக்கிவிடலாம்.

பெரியவர்களாயிருக்கும் நம்மில் சிலர் அனுபவிக்கும் நோய் நொடிகளுக்கு, பெரும்பாலும் நமது பெற்றோர்களின் அறிவின்மையே காரணமாயிருக்கிறது. ஆகையால், தற்காலம் தாய்களும் தாய்களாகக்கூடியவர்களும் சிசுக்களை ஸம்ரக்ஷிக்கும் விஷயங்களைப்பற்றி நன்றாய்த்தெரிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவச்யம். இந்தக்காலத்துக் குழந்தைகள் தேக வன்மையிலும் நாடி உரத்திலும் குறைந்து கொண்டு வருகின்றன. இதற்குக்காரணம், சிலர், முன்னோர்களுடைய நடவடிக்கை, ஒழுக்க முதலியவையென்றும், சிலர், தற்காலத்திய ஆகார போஷிப்பு, வஸிக்கும் நிலைமை முதலியவை யென்றும், சொல்லுகிறார்கள். குழந்தை பிறப்பதற்குமுந்தி அதன் தாய் கர்ப்பகாலத்தில் நடந்தகொண்டிருந்த நிலைமைக்குத்தக்கபடி குழந்தைக்கு இயல்பு வாய்த்துப் பொருந்தியிருக்கும். இந்தக்காரணங்கள் எப்படியிருந்தபோதிலும் குழந்தைகள்மேலே சொல்லியவாறு ஏராளமாய் இறக்கும் விஷயத்தைப்பற்றி நாம்விசாரித்துத்தெரிந்துகொள்ள வேண்டியது அத்யாவச்யம்.

குழந்தைகள் ஏராளமாய் இறந்து போவதற்கு ஆஸ்பதமாயிருக்கும் காரணங்களில் சில மிகவும் ஸாமான்யமாயிருப்பதுடன் எளிதில் விலக்கக்கூடியவை யாயுமிருக்கின்றன. ஆனால் அத்தகைய காரணங்களை நன்றாய்த் தெரிந்தெடுத்துச்சொல்லத்தக்க யோக்யதையுடைய மனிதர்களிருந்தபோதிலும் அவர்கள் இவ்வாறு சொல்ல விருப்பமும் அவகாசமும் இல்லாதவர்களாயிருக்கிறார்கள். ஒரு தாய் தன்குழந்தைக்குப் பெருந்தீங்கை விளைவிக்கக்கூடிய சிற்சில காரணங்களை முன்னே தெரிந்துகொண்டு, விலக்கக்கூடாத ஸ்திதியிலிருப்பது விஸனிக்கத்தக்கதாயிருந்தாலும், அவள் பேரில் அது குற்றமாகமாட்டாது. ஏனெனில், குழந்தை ஒன்று பிறந்த மாத்ரத்திலேயே அவளுக்கு வயதில் முதிர்ந்த ஒரு பெரிய ஸ்திரீக்குள்ள அறிவும் அனுபோகமும் வந்து விடுமென்று எப்படி எதிர்பார்க்கலாம்? இக்காலத்து நாகரீகங்களும் நவீன ஆகாராதிகளும்சேர்ந்து தாய்க்கு இயல்பாயிருக்கக்கூடிய குணங்களை போக்கடித்து விடுகின்றன. அசுத்தமான பால்பெட்டிகள், கெட்டகாற்று, ஈ, கொசு முதலிய ஜந்துக்கள்—முக்யமாய் மாடு குதிரைகள் கட்டுமிடங்களிலிருந்துவரும் ஈக்கள்—அகாலத்தில் உணவு கொடுத்தல் ஆகிய இவைகள் குழந்தைக்குக்கொடிய சத்ருக்களாகும்.

தன் குழந்தைக்குதானே ஸ்தன்யபானம் கொடுத்தல் ஒருதாய்க்கு மிகவும் பெருந்தன்மையான கார்யமாயிருப்பதுடன், அது குழந்தைக்கும் தனக்கும் ஸௌக்யத்தைக்கொடுக்

கத் தக்கதாயுமிருக்கிறது. ஸில ஸமயங்களில் குழந்தைக்கு வயிற்றில் வலி ஏதாவது ஏற்பட்டால், தாயார் பால்கொடுப்பதை நிறுத்துகிறதில்லை. இப்படிப்பட்ட ஸமயங்களில் குழந்தைக்கு அடிக்கடி ரொம்ப பால் கொடுப்பதை நிறுத்திவிட்டு, தாயானவள் தேகப்பயிற்சிசெய்து, ஜலம்போன்ற(அதாவது கஞ்சி,பால் முதலியவைகள்) ஆகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டும். குழந்தைக்கு, குடிக்க தண்ணீர் கொடுக்கவேண்டும். குழந்தையை கட்டிலில் போட்டு ஒத்தடங்கள்கொடுத்து ஜுடுகுறையாமல் வைக்கவேண்டும். நன்றாகக் கொதிக்க வைத்து, பிறகு போதுமான அளவு ஆறின தண்ணீரை குழந்தைக்குக் குடிக்குமளவு கொடுக்கவேண்டும். பிறகு குழந்தையை எடுத்துத்தோளில் போட்டுக்கொண்டு தட்ட வேண்டும். உடனே வயிற்றுவலி குணமடையாமல்போனால், மறுபடியும் முன்போலவே கட்டிலில்போட்டு ஒத்தடங்கள்கொடுத்து குழந்தையை சூடாக வைக்கவேண்டும். அனேக தாய்கள் தங்கள் குழந்தைகளுக்குவேண்டிய அளவு தண்ணீர் கொடுப்பதில்லை. அது தப்பு. குழந்தைகளுக்கு ஜலம் (வெந்நீர்) கொடுப்பதினால் அவைகளுக்கு நித்திரையைக் கூட உண்டு பண்ணுமாதலால், அது எப்போதும் நல்லவாடிக்கை. தவிர, குழந்தைகளுக்குக்கடித்து சப்புவதற்கு வாயில் ரப்பர் முதலானவைகளைக் கொடுத்துவைப்பது கெடுதல் என்பதை கவனிக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு மிதமில்லாமல் அதிக ஆகாரம் கொடுப்பதனால் குழந்தைகளின ஜீர்ணசக்தி குறைந்துபோய், ரொம்ப தீமைகள் உண்டாகின்றன. பெரும்பாலும் தங்கள் குழந்தைகளின்பேரில் ரொம்பவும் ப்ரியமாகவும் ஆவலாகவுமிருக்கிற சிறிய தாயார்களுக்கு இந்தவிஷயம் தெரிகிறதில்லை. குழந்தையின் குடல் (ஆகாரப்பை) கொள்ளக்கூடிய ஆகாரம் எவ்வள வென்றால்:—

பிறந்தவுடன்	1	ஔன்ஸ்
2 வாரத்துக்கு	2	,,
3 மாதத்துக்கு	$4\frac{1}{2}$	,,
6 மாதத்துக்கு	6	,,
1 வர்ஷத்துக்கு	9	,,

பிறந்ததுமுதல் 6-வாரம்வரையில் $1\frac{1}{2}$-அல்லது 2-மணிக்கு ஒருதடவையும், பிறகு 4-மாஸமாகிறவரையில் $2\frac{1}{2}$-மணிக்கு ஒரு தடவையும், குழந்தைக்கு ஆகாரம் கொடுக்கவேண்டும். 4-மாஸத்துக்குமேல் 10-மாஸமாகிறவரைக்கும் 3-மணிக்கு ஒருதடவை கொடுக்கவேண்டும். பத்தாவது மாஸத்தில் ஸாதாரணமாக குழந்தைகளுக்கு ஸ்தன்யபானத்தை நிறுத்துவது வழக்கம்.

தலைச்சன் (அதாவது முதல்) குழந்தை விஷயமாய் தாய்கள் முக்யமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்னவென்றால்:—

i. தேகப்பயிற்சி செய்தவுடனே குழந்தைக்கு ஸ்தன்யபானம் கொடுக்கக்கூடாது.

ii. பால் குறைவாக இருக்கும் பக்ஷத்தில் தேகப்பயிற்சி செய்வதைக் கம்மிசெய்து கீரை, காய்கறிகளை அதிகமாக சாப்பிடவேண்டும்.

iii. பால் புளிப்புத்தட்டியிருந்தால், ஸ்தன்யபானம் கொடுத்தபிறகு, குழந்தைக்கு ஒரு டீ ஸ்பூன் அளவு சுண்ணாம்பு கரைத்துத் தெளிந்த ஜலம் குடிக்க கொடுக்கவேண்டும்.

மாம்ஸம் சாப்பிடாத தாய்கள், வேணுமென்கிற அளவு நல்ல பழங்களையும் காய் கறிகளையும் சாப்பிட்டு வந்தால், தங்கள் பாலில் குழந்தைக்கு வேண்டிய சுண்ணாம்பு உற்பத்தியாகும். தேகசுத்தம் ஆடைசுத்தம் ஆகிய இவைகளோடுகூட குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கும் பாத்ரங்களும் மிகவும் சுத்தமாயிருக்க வேண்டும். பால் பெட்டிகள், பால் காய்ச்சவும் பால் வாங்கவும் உபயோகப்படுத்தும் பாத்ரங்கள் ஆகிய இவைகளை எல்லாம் நன்

ருக வெந்நீரில் அரைமணிநேரம் போட்டுக் கொதிக்கவைத்து கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இவைகளுக்கு சுத்தமான தண்ணீரையே உபயோகிக்கவேண்டும்.

நல்ல பசுவின் பாலில் கொழுப்பு அதிகமாயிருக்கிறது. குழந்தைகளுக்கு அதை ஜீர்ணம் செய்ய போதுமான சக்தி கிடையாது. மேலும், பால் ரொம்ப சூடாகவாவது ரொம்ப குளிர்ச்சியாகவாவது இருக்கக்கூடாது. பாலின் சூடு குழந்தைக்குக் கொடுக்கும் போது பாரனீட் தர்மாமிடரின் படி 98-டிக்ரி இருக்கவேண்டும். பாலிலுள்ள 'ஆல்ப்யூமன்' என்னும் ஒரு வஸ்து உறைந்து கெட்டுப் போகுமாதலால், பாலை ஒருபோதும் கொதிக்க வைக்கக் கூடாது. குழந்தைகளுக்கு ஆகாரத்தில் சர்க்கரை உபயோகப்படுத்துவது உசிதமல்ல. எப்பொழுதாவது உபயோகப்படுத்துவது அவச்யமாயிருக்கும்பக்ஷத்தில் அதைக் கொதிக்கும் ஜலத்தில் போட்டு உபயோகப் படுத்தவேண்டும். இதைத்தவிர, பால் கொடுக்கும் பசு யாதொரு விதமான நோயுமின்றி யிருக்கவேண்டும். அல்லாமலும், அது பரிசுத்தமாயு மிருக்கவேண்டும். நல்ல பசுவின் பால் சுத்தமாய்க் கிடைக்காமல் போனால் உயர்ந்தக்கட்டிப்பாலை உபயோகப் படுத்தலாம். சில குழந்தைகள் வால்கோதுமைக் (பார்லி) கஞ்சியையும் பாலையும் கலந்து சாப்பிட்டு ஸௌக்யமாயிருக்கின்றன. ஆனால் பார்லி விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாயிருக்கவேண்டும். சிலர் பார்லி வெண்மையாயிருக்கவேண்டுமென்று அதில் சுண்ணாம்புத் தூள் கலப்பதுண்டு.

ஆறுமாஸத்துக்குள்ளிருக்கும் குழந்தைகளுக்குக் கரண்டியால் (ஸ்பூனால்) ஆகாரம் கொடுக்கக்கூடாது. ஆகாரம் உமிழ் நீரோடு ஸம்பந்தப்பட்டு நன்றாய் ஜீர்ணமாவதற்கும், பற்கள் முளைத்து பலமடைவதற்கும், குழந்தைகள் ஆகாரத்தை உறிஞ்சிக் குடிப்பதுதான் ரொம்ப நல்லது. படுக்கையி லிருக்கும் போது குழந்தைகளுக்கு ஆகாரம் கொடுக்கக் கூடாது. ஒரு ஸமயம் அப்படி கொடுப்பது அவச்யமாயிருக்கும்பக்ஷத்தில் குழந்தையின் தலையை ஒரு தலையணையிலாவது கம்பளியிலாவது உயர்த்திவைத்துக்கொண்டுபால்கொடுக்க வேண்டும்.

பெண்குழந்தையைப் பார்க்கிலும் ஆண்குழந்தையை வளர்ப்பது ரொம்ப கஷ்டம். இது வெகுபேர்களுக்குத் தெரியாத விஷயம். ஆண் குழந்தைகள் அதிக பலமுள்ளவையாதலால் தங்களுக்கு வேண்டியவற்றை தங்கள் அழுகையால் தெரிவிக்கின்றன. இதனால் குழந்தைகள் பசியால் வருந்துகின்றன வென்று அவைகளுடைய தாய்மார்கள் எண்ணி அநுவச்யமாய் பாலூட்டுகிறார்கள். அப்படி அழும் போது சிறிது இளஞ்சூடான வெந்நீரோ அல்லது கொஞ்சம் ஆரஞ்ச் பழரஸமோ குழந்தைகளுக்குக் கொடுப்பது நல்லது என்று சொல்லப்படுகிறது. குழந்தைகள் மிதமிஞ்சி பருமனாவதும் இளைத்துப் போவதும் ஆகாரக் கோளாறால்தான். அதிக ஆகாரம், ஆகாரக்குறைவு அல்லது அகால ஆகாரம் ஆகியஇவைகள்தான் முக்ய காரணங்கள். குழந்தை கொஞ்சம் பெரியதான பிறகு மத்யானத்தில் ஆகாரம் கொடுப்பதற்குமுன் அதை சற்று தூங்கவைப்பது நலம். காலைவேளையில் தூங்கி எழுந்தவுடன் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்படி செய்யவேண்டும். அதிகாலையில் எழுந்திருப்பது தேக ஸௌக்யத்தையும் மனஸ்துஷ்டியையும் குழந்தைகளுக்கு உண்டுபண்ணுகிறது.

முதலில், குழந்தைகள் ஆகாரவேளை தவிர சற்றேறக்குறைய நாள் முழுவதும் தூங்கும். பிற்கு சிலநாள்களுக் கப்பால், காலையில் இரண்டு மணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் தூங்கும். ஆகாரம்கொடுத்தவுடனே குழந்

தையை தூங்கவைக்கக்கூடாது. ராத்ரி வேளையில் ஒரு ஸமயம் ஆகாரத்துக்குப் பிறகு தூங்கினல் பாதகமில்லை. எப்போதும் குழந்தைதூங்கினல், அது ஜீர்ணசக்தி குறைந்திருப்பதற்கும் ஈரல் கெட்டிருப்பதற்கும் அடையாளமாகும். குழந்தை தூங்கும் அறை இருட்டாயிருக்க வேண்டும். அது 60 டிக்ரி உஷ்ணத்துக்குக் குறைவாகவாவது, சற்றேறக்குறைய 70 டிக்ரிக்கு அதிகமாகவாவது இருக்கக்கூடாது (இங்கே டிக்ரி யென்பதை பாரனேட் தர்மாமிடர்படி கணக்கிட வேண்டும்.)

TRAINING IN HOUSEHOLD WORK.

வீட்டு வேலை செய்யப் பழக்குதல்.

இது விஷயமாக 'பெண்கல்வி' யின் ஸமீப ஸஞ்சிகை யொன்றில் ஸ்ரீஸுந்தரம்மாள் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

மேல் நாட்டு ஸ்த்ரீகளெல்லாம் க்ருஹ க்ருத்யங்களைத் தள்ளிவிட்டு வேறு ஏதோ வேலைகள் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை தாதிமார்களிடம் ஒப்புவித்துவிடுகிறார்கள். அவர்கள் இந்த வேலைகளெல்லாம் கௌரவக் குறைவானவை யென்றெண்ணுகிறார்கள். அதனல் அனேக கெடுதிகள் உண்டாகின்றன. லண்டன் பத்ரிகைகள் அவ்விடத்து ஸ்த்ரீகள் தங்கள் க்ருஹ க்ருதயங்களை சரிவர செய்வதில்லையென்றும், அதனல் அனேக கெடுதிகள் ஸம்பவிக்கின்றன வென்றும், பெண்கள் புருஷர்களுக் கடங்கியிருப்பதால் பெற்றோர்களாவது புருஷர்களாவது கண்டிக்கவேண்டுமென்றும் முறையிடுகின்றன.

நமது தேசத்திலும் அநேக ஸ்த்ரீகள் மேல் நாட்டு நாகரீகத்தைப்பார்த்து குடும்பத்தை சரிவர கவனிக்காமலும், மற்றுமுள்ள வேலைகளை கவனிக்காமலும இருந்து வருகிறார்கள். நமது தேசத்து ஸ்த்ரீகள் மேல் நாட்டு ஸ்த்ரீகளைப்போல் நடந்துவந்தால் அநேக கெடுதல்கள் ஏற்படும். நமது ஸ்த்ரீகளின் நோக்கம் மேல் நாட்டு ஸ்த்ரீகளின் நோக்கம் போலிருந்தால் அந்நோக்கத்தை மாற்றி விடவேண்டும். உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை நியமிக்கப்பட்டிருப்பதாலும், ஸ்த்ரீகளுக்கு க்ரஹக்ருத்யங்களை சரிவர கவனிக்கவேண்டிய வேலையிருப்பதாலும், அவர்கள் அவ்வேலையை நடத்தாவிட்டால் க்ருஹம் சீர்குலைந்தே போகுமாதலாலும், பெண்களுக்கு சிறுவயதிலேயே உபாத்யாயினிகளும் பெற்றோர்களும் குடும்பவேலைகளில்பயிற்சி ஏற்படும்படி செய்ய வேண்டும். அப்படி சிறுவயதிலேயே பயிற்சி செய்வித்தால்தான் அவர்கள் பிற்காலத்தில்குடும்பகார்யங்களை சரிவர கவனித்து நடத்தக் கூடியவர்களாயிருப்பார்கள். ஆகையால் நமது தேசத்திலுள்ள பெண் பாடசாலைகளில் பெண்களுக்கு க்ரஹக்ருத்யங்களுக்குரிய பாடங்களை விசேஷமாய்க் கற்றுக்கொடுப்பது மிகவும் நல்லது.

SOME HOUSEHOLD MEDICAL RECIPES.

சில குடும்ப வைத்ய முறைகள்.

வயிற்று நோய்க்கும், வயிற்று க்ருமிகட்கும் கியாழம்:—பிரண்டை பலம் ஒன்றேகால், புரசைவித்து பலம் ஒன்றேகால், வேப்பம் ஈர்க்கு பலம ஒன்றேகால ஆகிய இவைகளைக் கொண்டுவந்து இடித்து அரைப்படி ஜலம்விட்டுஅரைக்கால்படி ஜலமாகச் சுண்டக் காய்ச்சி, பசும்பால் படி அரைக்கால், சீனகற்கண்டு பலம் கால், சித்தாமணக் கெண்ணெய் ஒரு உச்சிக் கரண்டி யளவிட்டுச் சாப்பிடவும். நாலைந்து தடவை பேதியாவதுடன் வயிற்றுப்பூச்சியும் வெளிப்படும். வயிற்று நோயுந் தீரும்.

பிள்ளைகளுக்கு கணைச்சூட்டுக்கும், தேஹ புஷ்டிக்கும்:—ஒரு மண்பாத்ரத்தில் 5-பலம் சித்தாமணக் கெண்ணெயிட்டு அதில் பேயன் வாழைப்பழத்தை 3 அல்லது 4 கொணர்ந்து பில்லை பில்லையாக நறுக்கிப்போட்டு, அதனோடு பனங்கற்கண்டு பலம் இரண்டரையிட்டு மேல் சீலை மூடி ஸூர்ய புடத்தில் வைத்து காலையிலும மாலையிலும் 2 பில்லை உள்ளுக்குக் கொடுக்கவும். பத்யமில்லை.—விச்வகர்ம குலோபகாரி.

Biography.

ஜீவ்ய சரித்ரம்.

WAR PERSONALITIES.

சண்டையில் முக்யஸ்தர்கள்.

இப்போது நடந்துவரும் யுத்தத்தில் இன்னின்னார் இன்னின்ன தேசத்துக் கப்பல் படை, தரைப்படை முதலியவைகளுக்குத் தலைவரென்பதையும், இன்னின்ன தேசத்துக்கு இன்னின்னார் அரசர், யுத்தமந்த்ரி, அன்ய மந்த்ரி என்பதையும் நமது நேயர்கள் அறிய விரும்புவார்கள். அவர்களைப்பற்றி சிறு குறிப்புகள் இங்கு எழுதுகிறோம்.

இங்க்லண்ட்.

இங்க்லண்டின் ப்ரதம மந்த்ரி மிஸ்டர் ஆஸ்க்வித். அன்யதேச மந்த்ரி ஸர் எட்வர்ட் க்ரே. இவர் (க்ரே) யுத்தத்தைத் தடுப்பதற்கு தம்மாலானமட்டும் முயற்சித்தார். ஆனால் அவர் சொன்ன ப்ரேரணைகளை ஜெர்மானியர்கள் ஏற்றுக்கொள்ளாததால் இங்க்லண்ட் ஜெர்மனி மேல் படையெடுக்கலாயிற்று. இவர் இந்த மாஸம் பார்லிமெண்டில் இங்க்லண்ட் ஜெர்மனியோடு யுத்தம் செய்வதற்கு காரணங்கள் இன்னவென்பதை விரிவாக எடுத்துச் சொன்னார். அதன் ஸாராம்சத்தை மாஸவர்த்தமானத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

லார்ட் கிட்சனர் தற்போது இங்க்லண்டின் யுத்த மந்த்ரியாக இருந்துவருகிறார். இவருக்கு யுத்த விஷயங்களில் விசேஷ ஞானமுண்டு. இவருக்கு கிட்சனர் அப் கார்ட்டுமென் னும், கே. அப் கே. என்னும் பெயருண்டு. இவர் 1850-ம் வர்ஷம் ஜூன் மாஸம் 24-தேதி பிறந்தார். இவர் ஈஜிப்ட் யுத்தத்திலும் (1882-84), நைல் நதிப் படையெடுப்பிலும் (1884-85), கார்ட்டூம் படையெடுப்பிலும் (1898) ஸேனாதிபதியாக இருந்தார். தென்னாப்ரிக்காவில் 1900-முதல்-1902-ம் வர்ஷம் வரையில் ஸேனைத்தலைவராக இருந்தார். 1902-ம் வர்ஷம் முதல் 1909-ம் வர்ஷம் வரையில் இந்திய ஸேனாதிபதியாக இருந்தார்.

ஸர் ஜான் ப்ரேஞ்ச்.

பீல்ட்-மார்ஷல் ஸர் ஜான் ப்ரெஞ்ச் ப்ரிட்டிஷ் ஸைன்யங்களின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் 1852-ம் வர்ஷத்தில் பிறந்தவர். ஆகவே இவருக்கு இப்போது கிட்டத்தட்ட 62-வயஸாகிறது. இவர் 1874-ம் வர்ஷத்தில் ஸைன்யத்தில் சேர்ந்தார். தென்னாப்ரிக்கா போயர் யுத்தத்தில் அநேக ஸமயங்களில் லார்ட் ராபர்ட்ஸின் ஸைன்யங்களில் சில பிரிவுகளுக்குத் தலைவராக இருந்திருக்கிறார். யுத்த விஷயங்களில் விசேஷ ஞானமுள்ளவர். இவர் ஸைன்யங்களுடன் ப்ரெஞ்ச் ஸைன்யங்களுக்கு உதவி செய்யவும், ஜெர்மனியரை எதிர்க்கவும் ப்ரான்ஸுக்கு போயிருக்கிறார்.

ஸர் ஜான் ஜேல்லிகோ.

வைஸ்-அட்மிரல் ஸர்ஜான் ஜெல்லிகோ ப்ரிட்டிஷ் கப்பல் படையின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு இப்போது கிட்டத்தட்ட 55 வயஸாகிறது. இவர் 13-வது வயஸிலேயே கப்பல் படையில் சேர்ந்துகொண்டார். 23-வது வயஸில் ஈஜிபட் சண்டையில் போர் செய்து க்யாதியடைந்தார். இவருக்கு அப்போது ஒரு தங்க மெடல் கொடுக்கப்பட்டது. இவர் வேறு பல இடங்களில் காட்டிய ஸாமர்த்யத்திற்காக இவருக்கு பல மெடல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவர் கால க்ரமத்தில் கப்பல் படையில் பல உயர்ந்த உத்யோகங்களையடைந்து, 1910-11-ம் வர்ஷத்தில் அட்லான்டிக் கப்பல் படையின் தலைவராகவும், 1912-ம் வர்ஷத்தில் ஹோம் ப்ளீட் என்று சொல்லப்

படும் இங்க்லண்டிலேயே இருக்கும் கப்பல் படையின் ஒரு பிரிவுக்குத் தலைவராகவும் இருந்து வந்தார்.

ப்ரான்ஸ்.

ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மா. ரேமண்ட் பாயின்கரே ப்ரெஸிடெண்டாக வருவதற்குமுன் ப்ரான்ஸின் ப்ரதம மந்த்ரியாக இருந்தார். ஸர் எட்வர்ட் க்ரேயைப்போல் அன்யதேச வ்யவஹாரங்களில் மிகவும் ஸாமர்த்யசாலி. ப்ரான்ஸுக்கு ரஷ்யாவின் கூட்டுறவு அவச்யம் வேண்டுமென்பது அவருடைய அபிப்ராயம். யுத்தம் ஆரம்பிப்பதற்கு கொஞ்ச காலத்துக்கு முன்தான் அவர் ரஷ்யாவுக்குப் போய் அந்த தேசத்து சக்ரவர்த்தியாகிய ஸாரிடம் ஐரோப்பிய தேசங்களின் வ்யவஹாரங்களைப் பற்றிப் பேசிவந்தார்.

அவருடைய ப்ரதம மந்த்ரிக்கு மா. விவியானி யென்று பெயர். அவர் ஸோஷலிஸ்ட் என்று சொல்லப்படும் அபேதவாதக் கக்ஷியைச் சேர்ந்தவர். அவர் ரொம்பஸாத்வீக குணமுள்ளவர். ப்ரான்ஸின் அன்ய தேச வ்யவஹார மந்த்ரியின் பெயர் மா. டேல்காஸே. இவருக்கு ஜெர்மனியை யுத்தத்துக்கு இழுப்பதில் கொஞ்சம் ப்ரியமதிக மென்று சொல்வதுண்டு. இவர் ரஷ்யாவில் ப்ரான்ஸின் தூதராக கொஞ்சகால மிருந்து வந்தார்.

ஜெனரல் ஜ்யாப்ரே.

ப்ரான்ஸின் ஸேனைத் தலைவராகிய ஜெனரல் ஜ்யாப்ரே ரொம்ப ஸாமர்த்யசாலி யென்று சொல்லப்படுகிறது. அவர் 1852-ம் வர்ஷத்தில் பிறந்தார். அவர் அநேக யுத்தங்களில் சண்டை செய்திருக்கிறார். 1870-ம் வருஷம் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த சண்டையில் பீரங்கிப்படையில் ஒரு லெப்டினண்டாக இருந்தார். பாரிஸ் முற்றுகையில் உதவி செய்திருக்கிறார். சீனாவில் டாங்கின் சண்டையிலும், ப்ரெஞ்ச்-இண்டோ சைனாவில் நடந்த ஒரு யுத்தத்திலும யுத்தம் செய்திருக்கிறார்.

அவர் சற்று இரட்டை நாடியானவர். கொஞ்சம் குட்டையான மூக்கும், வெண்மையான மீசையும், ஆழ்ந்த பார்வையும் உள்ளவர். 1912-ம் வர்ஷம் ஜூலை மாஸம் முதல் அவர் ப்ரெஞ்ச் ஸைன்யங்களுக்குத் தலைவராக இருந்து வருகிறார்.

பௌ-டி-லாபய்ரர்.

இவர் ப்ரெஞ்ச் கப்பல் படையின் தலைவர். இவருக்கு இப்பொழுது 61-வயஸாகிறது. சென்ற 1912-ம் வர்ஷம ஸெப்டம்பர் மாஸம் முதல் இந்த உத்யோகத்தை வகித்து வருகிறார். ப்ரெஞ்ச் கப்பல் படையிலுள்ள உத்யோகஸ்தர்களுக்கு கடல் யுத்தம் செய்வதற்கு ஸந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆனால் இவருக்கு மாத்ரம் ஒரு தடவை இந்த ஸந்தர்ப்பம் கிடைத்ததாம். கொஞ்ச காலத்துக்கு முன் சைனாவில் யுத்தம் நடந்தபோது பூச்சௌ சண்டையில் ஒரு கப்பல் படைக்கு தலைவராக இருந்து மிகவும் தைர்யமாய் சண்டை செய்தார். இவர் அந்த சண்டையில் ஒரு சீனப் பீரங்கிப் படகை வெகு ஸாமர்த்யமாய் எதிர்த்துப் பிடித்தாராம். இவர் ப்ரெஞ்ச் கப்பல் படையின் பல பிரிவுகளுக்கு தலைவராக இருந்திருக்கிறா.

ப்ரிட்டிஷ் கப்பல் படையில் படைத்தலைவர்கள் தங்கள் கீழுள்ள உத்யோகஸ்தர்களைக் கொண்டு கப்பல்களின் நடவடிக்கைகளை நிர்வஹிக்காமல் தாங்களே ஸொந்தத்தில் நிர்வஹித்து உத்தரவு முதலானவைகள் இடுவது வழக்கம். அட்மிரல் லாப்யாரும் அதே வழக்கத்தை அனுஸரிப்பவா. இன்னும் இங்கிலீஷ் கப்பல் படைகளில் தளகர்த்தர்கள் சண்டை நடக்கு மிடத்துக்குப் பக்கத்திலேயிருந்து சண்டையை கவனித்து வருவது வழக்கம். இவரும் அப்படியே செய்வது வழக்கமாம்.

ஜெர்மன் வழக்கமென்ன வென்றால், தளகர்த்தர் சண்டை நடக்குமிடத்துக்கு கொஞ்ச தூரத்தில் அதிக சத்தம் சந்தடியில்லாத இடத்திலிருந்துகொண்டு யுத்தத்துக்கு வேண்டிய ப்ளான்களை தயாரித்துக் கொண்டிருப்பார். ஆனால் இங்க்லீஷ் தளகர்த்தர்கள் சண்டை நடக்குமிடத்திலேயே இருப்பதால் யுத்தத்தின் போக்கை அப்போதைக்கப்போது கவனித்து யுத்தத்தின் நிலைமைக்குத் தக்கபடி கப்பல்களை நடத்த ஏற்பாடு செய்வார்கள்.

ஜெர்மனி.

ஜெர்மன் சக்ரவர்த்தியின் பெயர் கேய்ஸர் வில்லியம். இவர் 1859-ம் வர்ஷம் பிறந்தார். இவருடைய மூத்த குமாரரும் பட்டத்துக்குரியவருமான ப்ரிடரிக் வில்லியம் ராஜகுமாரருக்கும் சக்ரவர்த்திக்கும் சில ஸமயங்களில் மனஸ்தாபம் நேருவதுண்டு. கெய்ஸர் தம் மனம்போன போக்கின்படியே ராஜ்யம் நடக்க வேண்டுமென்று எண்ணுபவர். ஜெர்மனியின் ப்ரதமமந்த்ரி டாக்டர் வான் பெத்மான் ஹால்வெக் என்பவர். அன்யதேச மந்த்ரி ஹேர் வான் ஜகௌ என்பவர். இவர் கெய்ஸருக்கு ரொம்பவும் வேண்டியவர்.

ஜெர்மன் யுத்த தளகர்த்தர்.

ஜெர்மன் ஸைன்யங்களின் தலைவர் லெப்டினண்ட் ஜெனரல் ஹெல்மத் வான் மால்ட்க் என்பவர். இவருடைய குணங்கள் அதிசலாக்யமானவைகளென்று சொல்வதற்கில்லையாம். ஆனால் ரொம்ப தைர்யமும் விவேகமும் உள்ளவர். இவர் 1848-ம் வர்ஷம் பிறந்தார். இவருடைய தந்தையின் ஸகோதரராகிய காலஞ்சென்ற பீல்ட் மார்ஷல கௌண்ட் வான் மால்ட்க் என்பவர் ரொம்ப க்யாதி பெற்ற தளகர்த்தர். அவருக்கு "யுத்தங்களில் ஜயிப்பவர்" என்றும், "ஜயம் அடைய ஏற்பாடு செய்பவ" ரென்றும் பெயருண்டு. அவரிடம் இவர் வேலை பார்த்து வந்திருக்கிறார்.

ஜெர்மன் ஸைனயங்கள் இப்போது உள்ள உயர்ந்த நிலைமையை யடைந்திருப்பதற்கு இவர் தான் காரணம். இவருக்கு விடாமுயற்சி யதிகமுண்டு.

ஜெர்மன் கப்பல் படை.

ஜெர்மன் கப்பல் படையின் தலைவர் வைஸ்-அட்மிரல் ப்ரேடரிக் வான் இஞ்ஜெனால் என்பவர். இவருக்கு ரொம்ப அனுபோகமும் கப்பல் படையின் விஷயங்களைப் பற்றி ரொம்ப அறிவும் உண்டு. இவர் 1857-ம் வர்ஷத்தில் பிறந்தவர். இவர் 40 வர்ஷகாலம ஜெர்மன் கப்பல் படையில் வேலை பார்த்து வந்திருக்கிறார். இவர் 187?-ம் வர்ஷத்தில் சீனவிலும், 1895-ம் வர்ஷத்து சீன-ஜப்பான் யுத்தத்திலும் சண்டை செய்திருக்கிறார். இவர் கப்பல் யுத்தத்தில் ரொம்ப ஸாமாத்யமாய் நடந்து கொள்வாரென்றும் சொல்லப்படுகிறது.

Short Stories

சிறு கதைகள்.

INQUISITIVENESS.

பிறருடைய விஷயங்களை அறிந்துகொள்ள விரும்புதல்.

ஒரு மனிதன் அந்தரங்கமான சில விஷயங்களைப்பற்றி ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மற்றொருவன் அக்கடிதத்தைக் கவனித்துப் பார்த்துக்கொண்டே இருந்தான். அப்பொழுது கடிதம் எழுதிக்கொண்டிருந்தவன் அக்கடிதத்தில் 'ஒரு மூடன் என்கடிதத்தில் எழுதியுள்ள விஷயங்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறான்'. ஆகையினால்தான் நான் என்னுடைய

மற்ற ரகஸ்யங்களை இதில் எழுதவில்லை' என்று எழுதினான். அப்பொழுது கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவனுக்கு கோபம் வந்து, நான் உன் கடிதத்தை பார்க்கவில்லையே' என்றான். அதற்கு எழுதுகிறவன் 'உன்னைப்பற்றி நான் ஒன்றும் எழுதவில்லையே.' என்று மறுமொழி பகர்ந்தான்.

OUTWITTED.

கள்ளனுக்குள் குள்ளம் பாய்ந்தது.

ஒருவன் தன் ஸ்நேகிதனிடத்தில் இருநூறு மணங்கு இரும்பை வைத்துவிட்டு தேசாந்த்ரம் போனான். திரும்பி வந்தவுடன் இரும்பைக் கேட்கவே, த்ரோக சிந்தனையுள்ள அந்த ஸ்நேகிதன் தன் வீட்டில் ஏதோ ஒரு மூலையில் அஜாக்ரதையாய் போட்டு வைத்திருந்தமையால் எல்லாவற்றையும் எலிதின்றுவிட்டதென்று சொல்லிவிட்டான். இதைக்கேட்டு சொந்தக்காரன் வியப்படைந்து மறுமொழி யாதொன்றும் சொல்லாமல் தன் வீட்டிற்குப் போனான். மறுநாள் திரும்பிவந்து அந்த ஸ்நேகிதனிடத்து, "நான் இன்னும் யாத்ரை போவதாக இருக்கிறேன். வேறு சில சாமன்களையும் உன்னிடம் ஒப்பிவித்து விட்டுபோவதாக எண்ணியிருக்கிறேன். ஆனால் முன் தடவையைப்போல் அஜாக்ரதையாக இருக்கக் கூடாது." என்று சொன்னான். அந்த அயோக்யன் இவனை வெகுவாய்ப்புகழ்ந்து 'இத்தடவை என் உயிரைக்கொடுத்துக் காப்பாற்றுவேன்,' என்று சொல்லி அன்றிரவே அவனுக்கு ஒரு பெரிய விருந்தளித்தான். சாப்பாடு ஆனவுடன் இரும்பு வ்யாபாரி இவன் பையன்களில் ஒரு சிறு பையனை ஒருவருக்குந்தெரியாமல் தன்னிருப்பிடத்துக்குக் கொண்டுபோய் விட்டான். பிள்ளையின் தகப்பன் பலவிடங்களிலும் பிள்ளையை தேடிக்காணாமல், முடிவில் ஒன்றுந்தெரியாமல், மதிமயங்கி கதிகலங்கி நிற்குந் தருவாயில், தன் ஸ்நேகிதனை இரும்பு வ்யாபாரியினிடம் சென்று தன் துயரத்தைதெரியப்படுத்தினான். அதற்கவன் நான் உன் வீட்டினின்று திரும்பி வரும்பொழுது ஆகாயத்தில் ஏதோ ஒரு குழந்தையின் அழுகைக் குரல்போல் கேட்டது. ஆதலினாலே பருந்து தூக்கிக்கொண்டுபோய் விட்டதென்று எனக்கு தோன்றுகிறது." என்றான். இதைக்கேட்ட பிள்ளைக்குடையவன் "என்ன ஸ்நேகிதா, உனக்குப் பயித்யம் பிடித்ததா? எங்கே யாகிலும் பிள்ளையை பருந்து தூக்கிக்கொண்டுபோவதுண்டா?" என்றான். அதற்கு மற்றவன் "இருநூறு மணங்கு இரும்பை எலிதின்னும்பொழுது பிள்ளையை ஏன் பருந்து கொண்டுபோகக்கூடாது ?" என்றான். இதைக்கேட்டவுடன் அந்த அயோக்யன் காரியம் இன்னதென்று தெரிந்து கொண்டு "ஸ்நேகிதா, பயப்படாதே; இரும்பை எலி தின்னவில்லை," என்றான். உடனே மற்றவனும் "நீயும் பயப்படவேண்டாம். குழந்தையையும் பருந்துகொண்டு போகவில்லை." என்றான்.

AN ADRIANOPLE STORY.

அடரியனேபிளைப்பற்றிய ஒரு கதை.

பால்கன் யுத்தத்தில் பால்கன் நாடுகளால் பிடிக்கப்பட்டு மறுபடியும் துருக்கியால் பிடிக்கப்பட்ட அட்ரியனேபிளில உள்ள மசூதிகளில் ஸுல்தான் ஸலிமின் மசூதி ரொம்ப பெயர் பெற்ற கட்டிடமாம். அது ரொம்ப நேர்த்தியாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அது 16-வது நூற்றாண்டில் கட்டப்பட்டது. அந்த மசூதியைக் கட்டுவித்த ஸுல்தான் அது ரொம்ப நேர்த்தியான கட்டிடமாயிருக்குமென்று அறிந்ததும், அதைக்கட்டின சிற்ப சாஸ்த்ரி உயிருடனிருந்தால் அவன், அதைப் போல் அவ்வளவு நேர்த்தியான கட்டிடம் வேறு இடத்திலும் கட்டிக்கொடுக்கக்கூடுமென்று எண்ணி, கட்டிடம் கட்டி முடிந்ததும் அவனைக்கொன்றுவிட வேண்டுமென்றும் எண்ணினார். இந்த ஸங்கதி யறிந்த சிற்ப சாஸ்த்ரி தப்பியோடிவிட நினைத்து பறவையின் இறக்கைகளைப்போல் செய்யப்பட்ட இரண்டு சிறகுகளை தனது தோளில் கட்டிக் கொண்டு கோபுரத்திலிருந்து பறந்து ஓட முயன்றான். ஆனால் துரத்ருஷ்டவசமாய் அவனுடைய உடையிலிருந்த ஒரு ஆயுதமானது அவனுக்குத் தடையாயிருந்து அவன் கீழே விழுந்து இறந்துபோனான். ஸுல்தானுடைய எண்ணம் ஒருவாறு நிறைவேறிற்று.

Departmental Notes.
பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.
வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

THE LAWYER IS SICK.
வக்கீல் அஸௌக்ய மாயிருக்கிறார்.

அமெரிக்காவில் ஒரு ஸமயம் போலீஸார் ஒருவனை ஏதோ ஒரு ஸாமானைத்திருடினதற்காகப்பிடித்து கோர்ட்டில் விசாரிக்கக் கொண்டு வந்திருந்தார்கள். அந்தக் கைதி இதற்கு முன் ஸுமார் பத்துப்பன்னிரண்டு தடவை திருடினதற்காக தண்டனை யடைந்திருந்தான். அவன் ஜட்ஜைப்பார்த்து, "ப்ரபோ, எனது கேஸை ஒரு வாரத்துக்கு தள்ளிவைக்கும்படி மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால், எனது வக்கீல் ரொம்ப அஸௌக்யமாயிருக்கிறார்." என்றான். அதற்கு ஜட்ஜ், "நீ தான் இந்த கனவான் சட்டைப்பையில் கைப்போட்டுத் திருடிக்கொண்டிருக்கும்போது கையுங்களவுமாய்ப் பிடிக்கப்பட்டாயே. உனக்கு ஸாதகமாய் வக்கில் என்ன சொல்லப்போகிறார்?" என்றார். கைதி:—"அது தான், ப்ரபோ, எனக்குந் தெரியவில்லை.

A TACTFUL DRUGGIST.
ஒரு ஸாமர்த்யமுள்ள மருந்துக் கடைக்காரன்.

ஒரு மனிதன் ஒரு மருந்துக் கடைக்குப் போயிருந்தபோது, மருந்துக்கடைக்காரன் தலைமயிர் வளரச்செய்யும் ஒரு தைலத்தைக் காட்டி அது அவருக்குத் தேவையா என்று கேட்டான். அதற்கு வந்த மனிதன் "என்ன திமிரப்பா உனக்கு? உனது நலை வழுக்கையாக இருக்கும்போது, எனக்கு தலைமயிர் வளர்ச்செய்யும் மருந்து விற்க வருகிறாயே!" என்றான்.

அதற்கு மருந்துக்கடைக்காரன், "அதென்ன அப்படிக்கேட்கிறாய்? இந்தத்தைலத்தை எனது வேலைக்காரனல்லவா உபயோகித்துவருகிறான். அவனுது தலைமயிரைப்பார். எவ்வளவு அடர்த்தியாயும் நேர்த்தியாயுமிருக்கிறது. எனது தலையோ என்றால், நான் மயிரைப்போக்கும் மருந்து ஒன்றை உபயோகித்துப் பரீக்ஷை செய்து கொண்டிருக்கிறேன். என் தலையைப் பார். கண்ணாடியைப்போல் எவ்வளவு வழுவழுப்பாயிருக்கிறது." என்றான்.

SELF-TREATMENT.
தனக்குத்தானே வைத்யம் செய்து கொள்ளுதல்.

வைத்யர்களுடைய ஸஹாயமின்றியே சிலர் அனேகம் ஔஷதங்களைத் தாமே தயார் செய்து உபயோகித்துக் கொள்வதை நாம் பார்த்து வருகிறோம். அவர்கள், புஸ்தகங்களில் எழுதப்பட்டுள்ளபடி ஒருக்கால் எவ்விதமோ ஔஷதம் செய்து உபயோகிப்பதாகவே இருக்கட்டும். ஆகிலும் தகுந்த வைத்யர்களுடைய யோசனையில்லாமல் அவ்விதம் செய்வது மிகவும் அபாயகரமானது. பெர்லின் நகரத்தில், டாக்டர் மார்கஸ் ஹெஜ் என்பவரிடம் ஒரு வ்யாதியஸ்தன் சென்றான். அப்பிணியாளி, "தானே ஜாக்ரதையாக மருந்துகளை உபயோகித்துக்கொள்வதற்கு எந்த வைத்ய புஸ்தகங்களைப் படிக்கலாம்?" என்று டாக்டரை வினவினான். அதற்கு டாக்டர் "என் நண்பனே, ஜாக்ரதை! புஸ்தகங்களில் அச்சுப் பிழையிருந்தால், என்றைக்காவது அன்யாயமாய் நீ செத்துப்போவாய்!" என்று பதில் சொன்னார்.

THE CUNNING PASSENGER.
தந்த்ரமுள்ள ப்ரயாணி.

ஒரு ரெயில்வே ப்ரயாணி (மூக்குகண்ணாடி போட்டுக்கொண்டு பத்ரிகை வாசித்துக் கொண்டிருந்த இன்னொருரெயில்வே ப்ரயாணியைப்பார்த்து:)—"தயவுசெய்து தங்கள் மூக்குக்கண்ணாடியை சிறிது நேரம் கொடுக்கிறீர்களா?"

இ. ப்ர:—"ஆகா, தருகிறேன்."

முதல் ப்ர:—(மூக்குக் கண்ணாடியை வாங்கிப் போட்டுக்கொண்டு) நீங்கள் தான் கண்ணாடியில்லாமல் வாசிக்கமுடியாதே. பத்ரிகையையும் சற்று தயவுசெய்து என்னிடம் கொடுக்கலாமே?"

CURIOSITIES.
விநோதங்கள்.

HEART'S STRENGTH.
ஹ்ருதயத்தின் சக்தி.

ஸாதாரண மனிதனுடைய ஹ்ருதயமானது 11 ஔன்ஸ் நிறைதான் இருக்கிறது. ஆனால் அது தினந்தோறும் செய்யும் வேலையோ 120 டவுன் நிறையுள்ள ஒரு பொருளை ஒரு அடி உயரத்துக்குத் தூக்க என்ன வேலை ஏற்படுமோ அதற்கு ஸமமாயிருக்கிறது.

ஹ்ருதயமானது ரொம்ப ஆச்சர்யமான யந்த்ரங்களில் ஒன்றாகும். அது ஸராஸரியில் நிமிஷத்துக்கு 70-தடவை வீதம் அடித்துக்கொள்கிறது. அது அடித்துக்கொள்ளும் ஒவ்வொரு தடவையிலும ஆறு ஔன்ஸ் ரத்தத்தை சுத்திசெய்து தேகத்திற்குள் பரவச் செய்கிறது. ஒரு வர்ஷத்தில் அது 3,00,00,000-தடவை அடித்துக்கொள்ளுகிறது. அதன் வழியாக 5000 டன் நிறையுள்ள ரத்தம் தேகத்திற்குள் போகிறது.

மனிதனுடைய வயஸு ஸராஸரி 70 என்பது வழக்கம். அந்தக் காலத்தில் ஹ்ருதயம் தன்னிடமிருந்து வெளிப்படுத்தின ரத்தத்தின் நிறையானது உலகத்தில் மிகவும் பெரியவையான ஆறு கப்பல்களின் நிறையை விட அதிகமாயிருக்குமாம்.

A CURIOUS WOMAN.
ஒரு அதிசயமான ஸ்த்ரீ.

பாரீஸ் நகரத்தில் 62-வயஸுள்ள ஒரு ஸ்த்ரீ இருக்கிறாள். அவளுடைய முகமும் கைகளும் புருஷரின் முகமும் கைகளும் போலிருக்கின்றன. அவளுக்கு 40-வது வயஸில் ஒரு வ்யாதி யுண்டாயிற்று. அதுமுதல் அவள் சரீர முழுதும் மாறிவிட்டது. ஒரு கொழுத்த ஆண்பிள்ளையின் புஜங்களைப்போல அவளுடைய புஜங்களும் மாறிவிட்டன. அவளுடைய மார்பும் விரிந்து அகலமாய்விட்டது. அவளுடைய தலை வழுக்கைத் தலையாய் விட்டது. அதற்கு ஈடாக தாடி வளர்ந்து இடுப்பு வரையில் தொங்குகிறதாம்.

NEW PETS FOR ENGLISH LADIES.
இங்க்லீஷ் ஸ்த்ரீகளுடைய புது செல்வ ப்ராணிகள்.

இந்திய ஸ்த்ரீகள் செல்வ ப்ராணிகளாக கிளிகளை வளர்த்து வருவது வழக்கம். இங்க்லீஷ் ஸ்த்ரீகளோ இதுவரையில் பூனைகளை செல்வ ப்ராணிகளாக வளர்த்து, தாங்கள் வெளியில் ஸவாரி போகும்போது கூட அழைத்துக்கொண்டு போவது வழக்கம். இப்போது அவர்கள் குரங்குகளை செல்வ ப்ராணிகளாக வளர்த்து, அவைகளுக்கு நகை முதலியவைகள் போட்டு அலங்கரித்து வைத்துக்கொள்ளுகிறார்களாம்.

A WONDERFUL CLOCK.
ஒரு விசித்ரமான கடியாரம்.

பர்லினில் ஒரு கடியாரஞ் செய்யும் வ்யாபாரி தமது கடையில் ஒரு அபூர்வ கடியாரம் வைத்திருக்கிறார். அது 9-தேசங்களுக்கு காலத்தைக் காட்டுகிறது. கடியாரத்தில் மணிகளைக் காட்ட எண்கள் குறிக்கப்பட்டிருக்கும் வெண்மையான தகட்டுக்கு 'டையல்' என்று பெயர். இந்த கடியாரத்தில் ஒன்பது தேசங்களுக்கும் நேரங்காட்ட 9-'டையல்'கள் இருக்கின்றன. அந்த 9-'டையல்'களும் பின்வரும் ஊர்களுக்குக்காலம் காட்டுகின்றன. பெர்லின் (ஜெர்மனி தேசம்), பாரிஸ் (ப்ரான்ஸ் தேசம்), லண்டன் (இங்கலண்ட் தேசம), நியூயார்க் (அமெரிக்கா ஐக்ய மாகாணங்கள்; இந்தப்பட்டணம் அமெரிக்கா ஐக்யமாகாணங்களின் கிழ்பாகத்தில் இருக்கிறது.) ஸான் ப்ரான்ஸிஸ்கோ (அமெரிக்கா ஐக்யமாகாணங்களின் மேற்கேயிருக்கிறது) ஸெண்ட்பீடர்ஸ் பர்க் (ருஷ்யா தேசம்), கான்ஸ்டாண்டி நோபிள் (துருக்கி தேசம்), பீகின் (சைனா தேசம்), டோக்யோ (ஜப்பான் தேசம்).

இந்த கடியாரம் 6½ அடி நீளமுள்ளது. இதன் வேலைப் பாடுகள் ரொம்ப நேர்த்தியானவை. இது ரொம்ப சரியாகக் காலங் காட்டுகிறதாம்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

HOW TO RESUSCITATE THE DROWNED
ஜலத்தில் விழுந்து ப்ரக்ஞை யற்றிருப்பவர்களை பிழைப்பு மூட்டுதல்.

ஜலத்தில் விழுந்து ப்ரக்ஞை தப்பியிருப்பவனை ஒருபீப்பாய்க்குள் தலை கீழாகவும், வயிறு பீப்பாயின் மேலிருக்கும்படியாகவும் தேகத்தை வளைக்கவேண்டும். இப்படிச்செய்த பிற்பாடு முகம்மேலே யிருக்கும்படி கீழே அவனை படுக்கப்போட்டு வாயைத் துணியினால் துடைத்துவிட்டு, முழங்கைகளைப் பிடித்துக்கொண்டு நிற்கவைத்து கைகளைத் தலைக்கு மேலாகவும் கீழாகவும் மெதுவாகத் திருப்புவதினால் ச்வாஸ மூண்டாகும்.

ப்ரான்ஸ்தேசத்தில் ப்ரக்ஞையற்றவனை நாக்கைப் பிடித்துக்கொண்டு இழுப்பதினால் பிழைக்கவைக்கிறார்கள். கைக்குட்டையை கையில் வைத்துக்கொண்டு நாக்கை விரல்களுக்கு மத்தியிலிருக்கும்படி பிடித்துக்கொண்டு கீழும் மேலுமாக நாக்கைத்தள்ளவேண்டும். இப்படிச்செய்வதனால் கட்டாயம் பிழைத்து விடுகிறார்கள். டாக்டர்கள் ப்ராணனில்லை யென்று சொன்ன ஒரு கேஸில் இரண்டு மணிநேரம் இம்மாதிரி செய்ததனால் ப்ராணன் வந்ததாம். இப்படி சிகித்ஸையடைந்தவன் அரைமணி நேரம் ஜலத்தில் முழுக்கிடந்தானாம்.

இன்னொருவிதமாய்து.—கைகளையும் கால்களையும் விரல்களிலிருந்து மார்பு வரையில் தேய்த்துக்கொண்டே இருக்கவேண்டும்.

ஜலத்தில் விழுந்தவனுடைய துணிகளை அவிழ்த்துவிட்டு கம்பளிகளினால் மூடி காற்றுள்ள இடத்தில் அவனை வைக்கவேண்டும். உடம்பில் சீக்ரம் சூடுவாரவிட்டால், சூடான கம்பளிகள், தண்ணீர்ப் புட்டிகள், சுடவைக்கப்பட்ட செங்கல்கள் இவைகளை வயிற்றின் பேரிலும் தொடைகளின் பேரிலும் கக்ஷங்களிலும், கால்களிலும் வைக்கவேண்டும். கொஞ்சம் ப்ராந்தி, வெந்நீர் இவைகளை 10, 15 நிமிஷங்களுக்கு ஒரு தடவை கொடுப்பது நல்லது. முழுகிப் பிழைக்கிற கேஸுகளில் ஈரல்கள் ஒன்றுப்போகாமல் காப்பாற்றவேண்டும். இதுமுதல் தண்ணீரில் விழுந்தவனுக்கு ஒரு வேலையும் கொடுக்காமல் இளைப்பாறச் செய்து உடம்பு எப்போதும் சூடாயிருக்கும்படி செய்யவேண்டும். சுவாஸம் விடுவதில் ஏதாவது கஷ்டம் ஏற்பட்டால் கடுகை அரைத்து அதைத்துணியில் தடவி மார்பில் ப்ளாஸ்திரிபோல் போடவேண்டும்.—சுதேசமித்திரன்.

FOWLS IN FOWL HOUSES.
கோழிக் கூடுகளில் கோழிகள்.

ஒரு கோழிக்கூட்டில் எத்தனை கோழிகள் விடலாமென்பதைக் கண்டுபிடிக்க அந்தக்கூட்டின் அகலம், நீளம், உயரம் ஆகிய இவற்றைப் பெருக்கி வந்ததொகையை 8-ஆல் வகுக்கவும். வகுத்து வந்த ஈவு இத்தனை கோழிகளை அமைக்கலா மென்பதைக்குறிக்கும். உதாரணமாக ஒருகூடு 6-அடி உயரம், 6-அடி நீளம், 4-அடி அகலமிருந்தால், $(6\times6\times4=144\div8=18)$ 18-கோழிகள் அதிலிருக்கலாமென்று ஏற்படும். அதிக கோழிகளில்லாமலிருந்து கூடுகளும்வேண்டிய அளவு இருந்தால் பெருக்கிவந்த தொகையை 10-ல் வகுக்கவும். அப்படியானால் முன்சொன்ன கூட்டில 14, அல்லது 15-கோழிகளைவிடலாம்.

REMOVING INK FROM BOOKS.
புஸ்தகங்களிலிருந்து இங்கிக் கறையைப் போக்குதல்.

ஆக்ஸாலிக் ஆஸிட் (Oxalic acid), ஸிட்ரிக் ஆஸிட், (Citric acid), டார்ட்டாரிக் ஆஸிட் (Tartaric acid) ஆகிய இந்த மருந்துகளில் எவற்றையாவது ஜலத்தில் கரைத்து, அந்த ஜலத்தை புஸ்தகங்களில் இங்கிபட்ட பாகத்தில் தட்வினால் கறைவிட்டுப்போகும். புஸ்தகங்கள் கெட்டுப்போக மாட்டா.

TAMIL LITERATURE.
தமிழ்க் கல்வி.

OXFORD STORY READERS.
ஆக்ஸ்பர்ட் கதைப் புஸ்தகங்கள்.

நந்தனும் மோஹனுங்கியும்; பொன்புறவை; பெரும்புயல் :—இந்த மூன்று சிறு புஸ்தகங்களும் சிறுவர்களுக்கு ஏற்ற கதைப் புஸ்தகங்களாகும். இவைகளின் நடை ஸுலபமாயிருக்கிறது. இவைகள் பேர்பெற்ற இங்கிலீஷ் கதைகளை அனுஸரித்து எழுதப்பட்ட கதைகள். கதைகள் வாசிக்க நன்றுயிருக்கின்றன. ஒவ்வொன்றும் விலை $1\frac{1}{4}$ அணுவாகும். புஸ்தகங்கள் வேண்டுவோர் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிட்டி ப்ரெஸ், 21, சுங்குராம செட்டித்தெரு, சென்னையென்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

LOVER ?
காதலி ?

இந்த நாவல் மிஸ்டர் வி. எம். ராஜு செட்டியாரால் இயற்றப்பட்டது. தனது கணவனை விட்டுவிட்டு தன் மனதுக்கிசைந்த வேறொரு புருஷனைக் கல்யாணஞ்செய்துகொண்டு பிறகு தனது முதற் கணவனல் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் கதையாகும். இது எளியநடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 12. வேண்டுவோர் வி. எம். ராஜு செட்டியார், 'ராஜன் டேல்', வால்டாக்ஸ் ரோட், சென்னை என்றெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

SUNDARANGI.
சுந்தராங்கி.

இது வடலூர் கே. துரைஸாமி அய்யங்கார் இயற்றியது. இது ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகளில் ஒன்றாகிய 'ஸிம்பலின்' என்னும் கதையை அனுஸரித்து எழுதப்பட்ட ஒரு நாடகமாகும். இது எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் இடையிடையே பற்பல செய்யுள்களும், பாட்டுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை 1 ரூ. வேண்டுவோர் சென்னை திருவல்லிக்கேணி எஸ். ஜி. ஐயர் அண்ட் கம்பெனியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

OTHER BOOKS.
மற்ற புஸ்தகங்கள்.

கல்பலதா. அல்லது வெளிவராத இரகசியம் (விலை அணு 14); மாதவி அல்லது மாதவனின் மாயக்கோலே. (விலை அணு 6). இவை இரண்டும் 'இந்துலேகா' என்னும் நாவல் எழுதிய பண்டிதர் டி. எஸ். ராஜமய்யர் எழுதியவைகள். 'கல்பலதா' ஒரு துப்பறியும் தமிழ் நாவல்: 'மாதவி ரொமான்ஸ் என்னும் கதை வர்க்கத்தைச் சேர்ந்தது. இவை இரண்டும் வேண்டுவோர் நாகப்பட்டணம் சாரதா விலாஸ புஸ்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

தத்வ ஞானபோதினி என்னும் அத்வைத மஞ்சரி (விலை அணு 8); பக்திவிளக்கம் (விலை அணு 12). இவை இரண்டும் கும்பகோணம் 'லோகானுகூலன்' பத்ராதிபர் மிஸ்டர் வி.எஸ். ராதாக்ருஷ்ணய்யரால் எழுதப்பட்டவையாகும் 'தத்வஞானபோதினி'யில் கடவுளின் தன்மை, ப்ரணவத்தின் தத்வம், ஜீவனுக்கும் தேகத்துக்கும் உள்ள ஸம்பந்தம் ஆகிய இவை முதலாகிய பல வேதாந்த விஷயங்கள் யாவரும் அறியும்படியான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. பக்தி விளக்கத்தில் பக்தியின் சிறப்புக் கூறப்பட்டிருக்கிறது. இதில் விநாயகர், ஸுப்ரமண்யர், நடராஜர், ஸ்ரீராமர், ஸ்ரீ க்ருஷ்ணர் முதலியவர்களைப் பற்றியும் அநேக பக்தர்களைப் பற்றியும் வ்யாஸங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவை இரண்டும் வேண்டுவோர் வி. எஸ் ராதாக்ருஷ்ணய்யர், மங்களவிலாஸ புக் டெபோ, கும்பகோணம், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

WAR IN EUROPE.

ஐரோப்பாவில் யுத்தம்.

ப்ரான்ஸிலும் பெல்ஜியத்திலும் நடக்கும் யுத்தம்:-ஜெர்மனி பெல்ஜியத்தின் வழியாக தனது ஸைன்யங்களை நடத்திக்கொண்டுபோய் ப்ரான்ஸில் புகுந்து அதன் தலை நகராகிய பாரிஸைப் பிடித்துவிட வேண்டுமென்று எண்ணியிருக்கிறதாகத் தோன்றுகிறது. ஜெர்மன் ஸைன்யங்கள் பெல்ஜியத்திலுள்ள முக்யபட்டணங்களைப் பிடித்துக்கொண்டு ப்ரான்ஸில் புகுந்து அங்கேயுள்ள ப்ரான்ஸ், பெல்ஜியம், இங்லண்ட் ஆகிய இவைகளின் ஸைன்யங்களை எதிர்த்துக் கொண்டிருக்கின்றன. பெல்ஜியத்திலும், ப்ரான்ஸின் கிழ்பாகத்திலும் நடந்த சண்டைகளின் விவரம் பின் வருமாறு.

ஆகஸ்டு மீ 5-தேதி.

பெல்ஜியத்திலுள்ள லீஜுக்குப் பக்கத்திலுள்ள ப்ளௌரன் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களை பெல்ஜியர்கள் தோற்கடித்தார்கள்.

7-தேதி.

ப்ரெஞ்ச் துருப்புகள் விக், மோயன்விக் என்னும் இரண்டு ஜெர்மன் பட்டணங்களைப் பிடித்துக்கொண்டன.

8-தேதி.

ப்ரான்ஸுக்கு ஸொந்தமான ஆல்ஸேஸ் மாகாணத்தை 46-வர்ஷங்களுக்கு முன்னால் ஜெர்மனி பிடுங்கிக்கொண்டது. இப்போது ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் அந்த மாகாணத்தில் ஆல்ட்கிர்க், முல்ஹாஸன் என்னும் இரண்டிடங்களைப் பிடித்திருக்கிறார்கள். இதுவிஷயத்தில் ப்ரெஞ்சுக்காரர்கள் மிகவும் ஸந்தோஷப்படுகிறார்கள்.

ஒருஜெர்மன் குதிரைப்படை இன்று ம்யூஸ் நதியைக்கடக்க முயலுகையில் பெல்ஜியன் குதிரைப்படையால் நிர்மூலமாக்கப்பட்டது.

9-தேதி

இன்று இரவு ஜெர்மன் ஸைன்யங்கள் லீஜ் கோட்டைகளில் ஒன்றாகிய விரெய்ங் கோட்டையைப் பிடிக்க தங்களா லானமட்டும் முயன்றும் முடியாமல் பின்வாங்கின. 800-பேர் சண்டையில் இறந்தார்கள்.

10-தேதி.

ஜெர்மானியர்கள் லீஜ் பட்டணத்துக்குள் புகுந்துவிட்டார்கள். ஆனால் லீஜ்கோட்டைகள் இன்னும் பிடிபடவில்லை.

11-தேதி.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் தாங்கள் பிடித்த முல்ஹாஸனைவிட்டு விட்டுப்போய் விட்டன.

8000 ஜெர்மானியர்கள் பெல்ஜியத்தில் கைதிகளாயிருக்கிறார்கள்.

12-தேதி.

பெல்ஜியர்கள் ஜெர்மானியர்களை ஹேலன் என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள்.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் ஜெர்மானியர்களை எக்ஸீ என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள்.

14-தேதி.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் ஸேல்ஸ் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டன.

16-தேதி.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் ஜெர்மனியின் ஒரு பாகமாகிய பவேரியாவைச்சேர்ந்த பவேரிய ஸைன்யங்களை ஆவ்ரிகோர்ட் என்னுமிடத்திலும், விரீ என்னுமிடத்திலும் தோற்கடித்தன.

17-தேதி.

ஜெர்மன் சக்ரவர்த்தி யுத்தம் நடக்குமிடத்துக்குப் போயிருக்கிறார்.

20-தேதி.

ஜெர்மன் ஸைன்யங்கள் லௌவய்ன் என்னுமிடத்தைப் பிடித்துக்கொண்டன.

பெல்ஜிய ஸைன்யங்கள் ப்ரஸ்ஸல்ஸை விட்டுவிட்டுப் போய்விட்டதன்மேல், ஜெர்மானியர்கள் ப்ரஸ்ஸல்ஸைப் பிடித்துக்கொண்டார்கள்.

21-தேதி.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் ஆல்ஸேஸில் ஜெர்மனிய ஸைன்யங்களைத் தோற்கடித்து 24-ஜெர்மன் பீரங்கிகளைக் கைப்பற்றிக்கொண்டன.

22-தேதி.

ஜெர்மானியர்கள் நாமூர் கோட்டைகளைத் தாக்குகிறார்கள். அவர்கள் கெண்ட் பட்ட

ணத்தையும், ஆஸ்டெண்ட் பட்டணத்தையும் பிடித்துக்கொண்டார்களாம்.

23-தேதி.

ப்ரெஞ்ச் ஸைன்யங்கள் சார்லராய் என்னும் ஜில்லாவில் ஜெர்மானியர்களை தாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

24-தேதி.

பெல்ஜியத்தில் மான்ஸூக்கும் நாமூருக்கும் இடையிலுள்ள பாகத்தில் ஒருபெரிய யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.

நாமூரிலுள்ள கோட்டைகளில் ஐந்து ஜெர்மனியர்களால் பிடிக்கப்பட்டன.

25-தேதி.

ப்ரான்ஸைச்சேர்ந்த நான்ஸிக்கு 15 மைல் தென் கிழக்கிலுள்ள லூனிவில்லி யென்னும் ஊரை ஜெர்மானியர்கள் பிடித்துக்கொண்டார்கள்.

28-தேதி.

ப்ரிட்டிஷ் ஸைன்யங்களில் ஒருபாகம் ஏராளமான ஜெர்மன் ஸைன்யங்களால் எதிர்க்கப்பட்டு பின் வாங்கிற்று.

30-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரிட்டிஷ், ப்ரெஞ்ச், பெல்ஜிய ஸைன்யங்களைத் துரத்திக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியர்களுக்கு ப்ரிட்டிஷார் மேல் தான் ரொம்ப ஆக்ரமம்.

31-தேதி

இதுவரையில் 4,30,000 ஜெர்மானியர்கள் மூஸ் நதியைத் தாண்டிப்போயிருக்கிறார்களாம். பெல்ஜியத்தில் 3½ லக்ஷம் ஜெர்மானியர்கள் இருக்கிறார்களாம். இவர்களைத் தவிர ஆல்ஸேஸிலும், லொரெய்னிலும் ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். ஆனால் ப்ரெஞ்ச ஸைன்யங்கள் 20 லக்ஷமிருப்பதாலும், இன்னும் இங்க்லீஷ் ஸைன்யங்களும் பெல்ஜிய ஸைன்யங்களுமிருப்பதாலும் இங்க்லீஷ், ப்ரெஞ்ச் பக்கமே ஜயமேற்படுமென்று நம்பப்படுகிறது.

காம்ப்ராய் என்னுமிடத்துக்கு 13 மைல் தென்மேற்கிலுள்ள பாபாம் என்னுமிடத்தில் சண்டை நடந்து கொண்டிருக்கிறது.

ஜெர்மன் சக்ரவர்த்தியின் மருமகனாகிய கௌண்ட் ஷெவ்ரின் ஒரு ப்ரெஞ்ச் ஸேனாகர்த்தரால் கைது செய்யப்பட்டார்.

ஸெப்டம்பர்மீ 2-தேதி.

ஜெர்மனியின் கிழக்கில் ருஷியர்கள் முன்வந்துகொண்டிருப்பதைத் தடுப்பதற்காக ப்ரான்ஸிலிருந்து சில ஜெர்மன் துருப்புகளை கிழக்கே அனுப்பப் போகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ப்ரான்ஸின் கிழக்கிலுள்ள வெர்டூனுக்குவட கிழக்கில் ஜெர்மன் இளவரசருடைய ஸைன்யம் ப்ரெஞ்ச ஸைன்யங்களால் தோற்கடிக்கப்பட்டது.

இன்றைய தினம் ப்ரான்ஸின் வடகிழக்கில் ரீம்ஸுக்கும் வெர்டூனுக்கும் மத்தியில் ஜெர்மன் ஸைன்யங்களுக்கும், ப்ரான்ஸ், இங்க்லண்ட், பெல்ஜியம் ஆகிய இவைகளின் ஸைன்யங்கள் சேர்ந்த கூட்டு ஸைன்யங்களுக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்ததாகத் தெரிகிறது. இரண்டுக் கக்ஷியிலும் உள்ள ஸைன்யங்களின் தொகை 7½-லக்ஷமாம்

3-தேதி.

பாரிஸ் பட்டணமானது ஜெர்மனியால் முற்றுகையிடப்படுமென்பதை யுத்தேசித்து ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டும், அதைச் சேர்ந்த ஆபீஸுகளும் அங்கிருந்து போர்டோ பட்டணத்துக்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

4-தேதி.

பாரிஸ் ஜெர்மனிய ஸைன்யங்களால் முற்றுகையிடப்படுமென்பதை யுத்தேசித்து அவ்விடத்திலுள்ள ஜனங்களில் பெரும்பாலார் ஊரை விட்டு வேறிடங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

பாரிஸிலுள்ள கோட்டைகள் ஜெர்மானியர்களை பாரிஸுக்குப் பக்கத்தில் வராமல் 16 மைலுக்கு அப்பாலேயே, இருக்கும்படி தடுத்துவிடும். 16-மைல் தூரத்திலிருந்து பாரிஸைத் தாக்கக்கூடிய பீரங்கிகள் ஜெர்மனியர்களிடம் கிடையா.

பாரிஸைச் சுற்றியுள்ள கோட்டைகளைப் பிடிக்காமல் பாரிஸை ஜெர்மானியர்கள் தாக்க முடியாதென்று சொல்லப்படுகிறது.

5-தேதி.

ஜெர்மன் ஸைன்யங்கள் பாரிஸை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. ஜெர்மனியர்கள் பாரிஸுக்கு சற்று தூரத்திலுள்ள சாண்டிலி என்னும் ஊருக்கு வந்திருக்கிறார்கள்.

7-தேதி.

பாரிஸுக்கு வடக்கில் 25-மைல் தூரத்திலுள்ள ப்ரெவி என்னுமிடத்தில் கூட்டு ஸைன்யங்கள் ஜெர்மானியர்களைத் தோற்கடித்தன.

ஜெர்மன் ஸைன்யங்களுக்கும (இங்க்லீஷ், ப்ரெஞ்ச், பெல்ஜிய) கூட்டு ஸைன்யங்களுக்கும வடகிழக்கிலுள்ள வெர்டனுக்குப் பக்கத்தில் சண்டை நடந்தது. ஜெர்மானியர்கள் பின்வாங்குவதாகத் தெரிகிறது.

ப்ரான்ஸில் மாலின்ஸுக்கு மேற்கே நடந்த ஒரு பெரிய சண்டையில் ஜெர்மனிக்கு 3000 பேர் சேதமாம்.

8-தேதி.

ஜெர்மானியர்கள் டினென்ட் பட்டணத்தை நாசம்செய்து விட்டார்கள்.

ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா ஜெர்மனி ஆகிய இந்த இரண்டு தேசங்களுக்கும் யுத்தம் :— ரஷ்யா ஜெர்மனியின் கீழ்பாகங்களையும், ஆஸட்ரியாவின் வடகிழக்குப் பாகங்களையும பிடித்துக்கொண்டு ஜெர்மனியின் ப்ரதானப் பட்டணமாகிய பெர்லினைப் பிடிக்கவோ, அல்லது ப்ரான்ஸின் பக்கம் அதிகமாயுள்ள ஜெர்மன ஸைன்யங்களை ரஷ்யாவின் பக்கத்துக்கு இழுக்கவோ முயன்றுகொண்டிருக்கிற தென்று தோன்றுகிறது.

ஆகஸ்டுமீ 7-தேதி.

ஆஸ்ட்ரியா ஹங்கேரி ரஷ்யாவின்மேல் போர் ஆரம்பித்துவிட்டதாகத் தெரிவித்திருக்கிறது.

9-தேதி.

ரஷ்ய ஸைன்யங்கள் ஸ்டர் பள்ளத்தாக்கு வழியாக ஆஸ்ட்ரியாவின் எல்லை மாகாணங்களில் ப்ரவேசித்துவிட்டன.

18-தேதி

ரஷ்ய ஸைன்யங்கள் ஜெர்மனியின்மேல் படையெடுத்துப் போயிருக்கின்றன.

19-தேதி.

ரஷ்யர்கள் ஆஸ்ட்ரியர்களைகோரடக் என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள். ஆஸ்ட்ரியாவுக்கு ரொம்பசேதம்.

20-தேதி.

ரஷ்யர்கள் ஜெர்மானிய பட்டணமாகிய கம்பின்னன் என்னும பட்டணத்தைப் பிடித்துக்கொண்டார்கள். அப்போது நடந்த சண்டையில் 12 ஜெர்மன் பீரங்கிகளையும் அநேக ஜெர்மன் கைதிகளையும் பிடித்துக்கொண்டார்கள்.

21-தேதி.

ரஷ்ய துருப்புகள் ப்ரஷ்யாவின் கீழ்பாகத்திலுள்ள லிக் என்னும் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டன.

23-தேதி.

ரஷ்யர்கள கம்பின்னன் என்னுமிடத்தில் ஜெர்மானியர்களைத் தோற்கடித்து இன்ஸ்டர்பர்க், கோல்டாப் என்னும் இடங்களைப்பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

ரஷ்யஸைன்யங்கள் ஜோஹன்னிஸ்பர்க், ஆர்டல்ஸ்பர்க், வில்லனபர்க், ஸால்டன், ஆரிஸ ஆகிய இந்த ஜெர்மன பட்டணங்களைப் பிடித்துக்கொண்டார்கள்.

27-தேதி.

ரஷ்யர்கள் ஜெர்மனியின கீழ் பாகத்தில் புதிதாக மூன்று பட்டணங்களைப் பிடித்திருக்கிறார்கள். அவர்கள ஆஸ்ட்ரியாவைச்சேர்ந்த காலீஷ்யாவின் மேல் படையெடுத்துப் போயிருக்கிறார்கள்.

29-தேதி.

ரஷ்யர்கள் லெமபர்க் என்னுமிடத்தில் 4,000 ஆஸ்ட்ரியர்களைக் கைதியாகப் பிடித்திருக்கிறார்கள். ஆஸ்ட்ரியர்களுக்கு ஸொந்தமான 13 பீரங்கிகளும் அவர்களுக்குக் கிடைத்தன.

31-தேதி.

காலீஷ்யா என்னும் மாகாணத்தில் ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் அதிகமாயிருப்பதால் ரஷ்யர்கள் ஜெர்மனியில ரொம்ப முன் செல்ல முடியவில்லையாம்.

ஸெப்டம்பர்மீ 1-தேதி.

ஆஸ்ட்ரியாவில் லெம்பர்க் என்னும் பட்டணத்துக்கு 10 மைல் கிழக்கில் ஆஸட்ரியர்களுக்கும ரஷ்யர்களுக்கும் 7-நாள் யுத்தம நடந்தது. 2 லக்ஷம வீரர்கள் உள்ள ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள தோற்கடிக்கப்பட்டு ஓடின.

2-தேதி.

ரஷ்யர்கள் ஜெர்மானியர்களால் கீழ் ப்ரஷ்யாவில் தோற்கடிக்கப் பட்டார்கள். திடீரென்று ஜெர்மனிக்கு உதவி ஸைன்யங்கள் வந்து சேர்ந்ததால் ரஷ்யர்கள் தோற்றார்கள் என்று சொல்லப்படுகிறது.

4-தேதி.

ஆஸட்ரியாவைச் சேர்ந்த காலீஷ்யாவில் ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் ரஷ்யர்களால லெம்பர்க் பட்டணத்தில் கிழக்கிலும், ஹாப்ஸிலுக்கு.

தெற்கிலும் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆஸ்ட்ரியர்களுக்கு ரொம்ப சேதம். 70,000 ஆஸ்ட்ரியர்கள் ரஷ்யர்களால் கைது செய்யப்பட்டார்கள்.

ஆஸ்ட்ரியர்கள் காமியன்கா, காலிட்ச் என்னுமிடங்களில் ரஷ்யர்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். இந்த சண்டைகளில் ஒரு இடத்தில் மாத்ரம் 20,000 ஆஸ்ட்ரியர்கள் சேதமாம்.

7-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் தாங்கள் படும் கஷ்டங்களை ஸகிக்க முடியாமல் தங்களைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு போகும்படி ரஷ்யர்களைக் கேட்கிறார்களாம்.

8-தேதி.

ரஷ்யர்கள் பிடித்த ஆஸ்ட்ரியாவின் ஒரு பாகமாகிய காலீஷ்யா ரஷ்யமாகாணமாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு கௌண்ட் பாப்ரின்ஸ்கி கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் வயிற்றுக் கடுப்பால் ரொம்ப கஷ்டப்படுகின்றனவாம்.

ஆஸ்ட்ரோ ஸெர்விய யுத்தம்:—ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்குந்தான் முதல்முதலில் யுத்தம் ஆரம்பமாயிற்று. ஆனால் ஆஸ்ட்ரியாவின் வடகிழக்கில் ரஷ்யாவின் தொந்தரை அதிகமானபடியால் ஆஸ்ட்ரியா தனது ஸைன்யங்களின் பெரும்பாகத்தை ரஷ்ய ஸைன்யங்களோடு சண்டைசெய்ய, ஆஸ்ட்ரியாவின் வடகிழக்குப்பாகத்து அனுப்பிவிட்டதென்று தெரிகிறது.

ஆகஸ்டுமீ 4-தேதி

ஆஸ்ட்ரியாவுக்கும் ஸெர்வியாவுக்கும் இடையிலுள்ள எல்லை ப்ரதேசத்தில் ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் போஸர்வாட்ஸ், ஸெமண்ட்ரியா, பெல்க்ரேட் முதலிய இடங்களில் ஸெர்வியரைத் தாக்கின. ஆஸ்ட்ரியர்கள் தோல்வியடைந்து பின் வாங்கினார்கள்.

5-தேதி.

ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் 7-தடவை டான்யூப் நதியைக்கடந்து ஸெர்வியாவுக்குள் போக முயன்றும் ஸெர்வியர்கள் தடுத்துவிட்டார்கள்

11-தேதி.

ஆஸ்ட்ரியர்கள் ஏழு இடங்களில் ஸெர்வியர்களைத்தாக்கியும், ஜயிக்கமுடியாமல் மிகுந்த சேதத்துடன் பின்வாங்கி யோடிவிட்டார்கள்.

17-தேதி.

ஸெர்வியர்கள் ஆஸ்ட்ரிய ஸைன்யங்களை ஷாபாட்ஸ் என்னுமிடத்தில் தோற்கடித்தார்கள்.

22-தேதி.

சென்ற நான்கு நாள்களாய் லோஸ்னிட்ஸா என்னும் இடத்தில் ஆஸ்ட்ரியர்களுக்கும் ஸெர்வியர்களுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. ஆஸ்ட்ரியர்கள் தோல்வியடைந்தார்கள்.

24-தேதி

ஆஸ்ட்ரியா ஸெர்வியாவை விட்டுவிட்டு, ரஷ்யாவை எதிர்க்கத்தனது ஸைன்யங்களை ரஷ்யா பக்கம் கொண்டுபோகிறதாம்.

ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் நடக்கும் யுத்தம்:—

ஆகஸ்டுமீ 6-தேதி.

ஜப்பானுக்கும் ப்ரிட்டனுக்கும் உள்ள உடன்படிக்கையின்படி ஜப்பான் ப்ரிட்டனுக்கு உதவிசெய்வதாக வாக்களித்திருக்கிறது.

17-தேதி.

ஜெர்மனி சீனக்கடலிலுள்ள தனது போர்க்கப்பல்களின் பீரங்கி முதலியவைகளை எடுத்துவிட வேண்டுமென்றும், கெயசௌ என்னுமிடத்தை ஜப்பானிடம் விட்டுவிட வேண்டுமென்றும், ஜப்பான் ஜெர்மனிக்கு கடைசிப்பேச்சாக ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறது.

23-தேதி.

ஜப்பான் கேட்டுக்கொண்டபடி ஜெர்மனி நடந்துகொள்ள ஸம்மதியாததால் (17-தேதி பார்க்கவும்.) ஜப்பான் ஜெர்மனிமேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

30-தேதி.

ஜப்பானியர்கள் சீனாவில் ஜெர்மனிக்கு ஸொந்தமான கயாசௌவை முற்றுகை போட்டிருக்கிறார்கள்.

ஸெப்டம்பர்மீ 2-தேதி.

ஜப்பானியர்கள் கையசௌ என்னும் பரதேசத்தைச் சுற்றியுள்ள 7-தீவுகளைப் பிடித்திருக்கிறார்கள்.

3-தேதி.

2000-ஜப்பானியர்கள் சீனாவில் ஜெர்மனிக்கு ஸொந்தமான கெயசௌவுக்குப் பக்கத்திலுள்ள லங்சௌ என்னுமிடத்திற்கு வந்திருக்கிறார்கள்.

7-தேதி.

சீனவில் ட்ஸிங்டௌ கோட்டைகளில் இருக்கும் ஜெர்மானியர்கள், ஸமுத்ரத்தில் ஜெர்மன் கப்பல்களால் போடப்பட்டிருக்கும் வெடிகுண்டுகளைப் பொறுக்கிக்கொண்டிருக்கும் ஜப்பானிய கப்பல்களை மூழ்கடிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனல் இதுவரையில ஜப்பான் கப்பல் ஒன்றும் சேதமாகவில்லை.

பொது விஷயங்கள்:—இதில் இங்க்லண்ட் ஏன் யுத்தத்தில் சேர்ந்துகொண்டதென்பதைப் பற்றிய விவரமும் மற்ற பொது விஷயங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆகஸ்டு மீ 3-தேதி.

இன்றையதினம ப்ரிட்டிஷ் அன்ய மந்த்ரியாகிய ஸர் எட்வர்ட் க்ரே ஐரோப்பிய யுத்தத்தில் இங்க்லண்ட் ஏன் சேரவேண்டுமென்பதைப்பற்றி பார்லிமெண்டில் பேசினர்.

தற்போது இங்க்லண்டுக்கும் ப்ரான்ஸுக்கும் ஸ்நேகம் இருந்து வருவதில், ப்ரான்ஸின் கப்பல்படையானது மத்யதரைக்கடலில் வைக்கப்பட்டிருக்கிறது. ப்ரான்ஸின் வடக்குக்கரையையும், மேற்குக் கரையையும் பாதுகாக்க ப்ரான்ஸுக்கு வேறு கப்பல படை கிடையாது. ப்ரான்ஸுக்கும் இங்க்லண்டுக்கும் ஸ்நேகிதமில்லாமலிருந்தால் ப்ரெஞ்ச் கப்பல்படை முழுவதும் மத்யதரைக்கடலிலேயே இருந்துவிடாமல், ப்ரான்ஸின் மற்ற பாகங்களையும் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். அப்படியின்றி, ப்ரான்ஸின் வடகரையையும் மேற்குக்கரையையும் பாதுகாக்க ப்ரான்ஸ் ஏற்பாடு செய்யாமலிருக்கும்போது, ஜெர்மனியின் கப்பல்படைகள், ப்ரான்ஸின் வடக்கு மேற்குக்கரைகளைத்தாக்க ஆரம்பித்தால் இங்க்லீஷ் ஜனங்கள் சும்மா இருக்க மாட்டார்கள். அவர்கள் இந்த யுத்தத்தில் ப்ரான்ஸின் பக்கம சேர முன்வருவார்கள்.

நிற்க, இங்க்லீஷார் ப்ரான்ஸுக்கு உதவவில்லையென்று வைத்துக்கொள்வோம். ப்ரான்ஸின் வடக்கு மேற்குக்கரைகளை ஜெர்மனி தாக்கினல், ப்ரான்ஸ் அவ்விடங்களைக் காப்பதற்காக மத்யதரைக்கடலில் உள்ள ப்ரெஞ்ச் கப்பல்படையை அவ்விடங்களுக்கு அனுப்பக்கூடும். ஆகவே மத்யதரைக் கடலில் ப்ரெஞ்ச் கப்பல்படை தங்கியிருப்பதற்கில்லை.

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தமோ ப்ரமாண்டமான யுத்தமாகும். இதிலிருந்து என்ன நேரிடுமென்று நாம் நிச்சயமாய் ஒன்றும் சொல்லமுடியாது. இப்போது நாம் ஒரு கக்ஷியிலும் சேரவில்லையென்பதாக சொல்லுகிறோமென்று வைத்துக்கொள்வோம். ப்ரான்ஸும் மத்யதரைக் கடலில் உள்ள தன் கப்பல்படையை வேறிடங்களுக்கு அனுப்பி விடுகிறதென்று வைத்துக்கொள்வோம். இவற்றால் நாம் எதிர்பார்க்காத சில ஸம்பவங்கள் நேர்ந்து, நமது தேசத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு நாமும யுத்தத்துக்குப் போகும்படி நேரிடுகிறதென்றும், நாம தனியாக யுத்தம் செய்ய நேரிடுங்காலத்தில், இப்போது ஒரு கக்ஷியிலும் சேராமலிருக்கும இட்டலி அந்நிலைமையை விட்டு மாறிவிடுகிறதென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியானல் மத்யதரைக்கடலில் நமது நிலைமை என்னவாகும்? மத்யதரைக்கடலில் வ்யாபாரக்கப்பல்கள் போகும் மார்க்கங்களை நாம் காப்பாற்றவேண்டியது ரொம்ப முக்ய கடமையாயிருந்து, ப்ரெஞ்ச் கப்பல் படையும நமக்கு உதவாமல் போனல், நமது நிலைமை என்னவாகும? மத்யதரைக்கடலிலுள்ள இங்க்லீஷ் கப்பல்படையோ ஸ்வயமாக, வேறுதுணையின்றி மற்ற எதிரிகளின் கப்பல்படையை எதிர்க்கும்படி அவ்வளவு பெரிய படையல்ல. இப்போது ப்ரான்ஸுடன் சேராமல் தனியே இருந்து, பிறகு யுத்தம் நேர்ந்தால் இங்க்லண்டைப் பாதுகாப்பதற்கு வேண்டியவளவு கப்பல்படை இங்க்லண்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டியிருக்குமாதலால், மத்யதரைக்கடலுக்கு வேறு யுத்தக் கப்பல்கள் அனுப்பமுடியாது. ஆகவே நமது தேசத்தின க்ஷேமத்தை யுத்தேசித்து, இங்க்லண்டின் கப்பல்படையானது ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கடலகரைகளைக் காப்பாற்ற கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், ஜெர்மனியானது பெல்ஜியத்தின் வழியாக தனது ஸைன்யத்தைக் கொண்டுபோக பெல்ஜியம் ஸம்மதப்பட வேண்டுமென்று பெல்ஜியத்தைக் கேட்டிருக்கிறது. பெல்ஜியமானது ஒரு கக்ஷியிலும சேராத தனியரசாக இருக்கவேண்டுமென்று 1839-ம் வர்ஷத்து உடன்படிக்கையின்படி வல்லரசுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த தேசத்தின் ஸ்வாதீனத்தை ஜெர்மனி பிடுங்கிக்கொள்ளும்படி இங்க்லண்டு விடுவதானது, பெல்ஜியம ஸ்வாதீனமாய் இருக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்ட தேசங்களில் ஒன்றாகிய நமது தேசத்துக்கே (இங்க்லண்டுக்கு)

கௌரவதைக் குறைவாக ஏற்படும். ஆகையால் இங்கிலண்ட் தனது கௌரவதையைக் காப்பாற்றவும், பெல்ஜியம் ஸ்வாதீனமாயிருப்பதால் இங்கிலண்டுக்கு ஏற்படும் ஸௌகர்யங்களை காத்துக்கொள்ளவும் இங்கிலண்ட் கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், இந்த யுத்தத்தில் இப்போது கலந்துகொண்டாலுஞ் சரி, அல்லது ஒன்றிலும் சேராமல் தனியாக இருந்தாலுஞ்சரி, நாம் கஷ்டங்கள் அநுபவிக்காமலிருக்கப்போவதில்லை. நாம் யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தனியாக இருந்தால் என்ன கெடுதிகள் நேரிடுமோ அதைவிட யுத்தத்தில் கலந்துகொண்டால் அதிகமாக கஷ்டங்கள் ஏற்படமாட்டா. ஆகையால் இவைகளை யுத்தேசித்து நாம இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளாமல் தனியாயிருப்பது முடியாத கார்யமென்று ஏற்படுகிறது.

4-தேதி.

இட்டலி இப்போது நடக்கும் யுத்தத்தில் எந்தக் கக்ஷியிலும் சேராமலிருப்பதாகச் சொன்னதின்மேல், ஜெர்மனி அதைத் தன் கக்ஷியில் சேரவேண்டுமென்று கேட்டது இட்டலி மறுத்துவிட்டது.

5-தேதி.

தெம்ஸ் நதிப்பக்கமாய்க் கடலில் வெடிகுண்டுகள்வைத்துக் கப்பல்களை நாசம்செய்ய முயன்ற ஒரு ஜெர்மன் கப்பலை ஒரு ப்ரிட்டிஷ் கப்பல் மூழ்கடித்துவிட்டது.

6-தேதி.

இட்டலி ஜெர்மனியோடு சேராவிட்டால் இரண்டுக்கும் யுத்தம் நேரிடுமென்று ஜெர்மனி இட்டலிக்குத் தெரிவித்திருக்கிறது.

ஸமுத்ரத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு (இதற்கு இங்கிலீஷில் 'மைன்' (mine) என்று பெயர்) ஒன்றின்மேல் ஒரு ப்ரிட்டிஷ் யுத்தக் கப்பல்பட்டு மூழ்கிவிட்டது. 130-பேர் இறந்துபோனார்கள்.

7-தேதி.

தெரிவிக்கக்கூடிய யுத்த ஸமாசாரங்களை பத்ரிகைகளுக்குத் தெரிவிப்பதற்காக ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் 'ப்ரெஸ் பீரோ' என்று ஒரு ஆபீஸ் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ்யுத்த மந்த்ரியாகிய லார்ட்கிட்சனர் 5 லக்ஷம் போர்வீரர்கள் இன்னும் அதிகப்படியாக வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்.

சீனாவிலுள்ள வைஹாவை என்னுமிடத்துக்குப் பக்கத்தில், ஒரு ரஷ்ய யுத்தக்கப்பலும் ஒரு ஜர்மன்ய யுத்தக்கப்பலும் சண்டையிட்டதில் இரண்டும் மூழ்கிப்போயின.

12-தேதி.

ஆஸ்ட்ரியாவுக்கும் க்ரேட் ப்ரிட்டனுக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று.

14-தேதி.

ரஷ்யசக்ரவர்த்தி தமது ஆட்சிக்குள்பட்டிருக்கும் போலண்டுக்கு ஸ்வய ஆட்சி கொடுத்திருக்கிறார்.

16-தேதி.

ப்ரெஞ்சுக்கப்பல்படை ஒரு ஆஸ்ட்ரிய போர்க் கப்பலை (க்ரூஸர்) மூழ்கடித்துவிட்டது.

வடகடலில் ப்ரிட்டிஷ் கப்பல் படைக்கும் ஜெர்மன கப்பல படைக்கும் சிறு சண்டைகள் நடந்தன.

23-தேதி.

ஜெர்மன் கப்பல்படை சிலப்ரிட்டிஷ் கப்பல்களை மூழ்கடித்துவிட்டது.

26-தேதி.

மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள ஜெர்மனிக்கு ஸொந்தமான ஜெர்மன் டோகோலாண்ட் என்னும் ப்ரதேசத்தை ப்ரிட்டிஷார் பிடித்து விட்டார்கள்.

28-தேதி.

வடகடலில் ஹெலிகோலண்ட் தீவுக்கு ஸமீபத்தில் ப்ரிட்டிஷ கப்பல் படைக்கும், ஜெர்மன கப்பல் படைக்கும் ஒரு கடல் சண்டை நடந்தது. ஜெர்மன கப்பல் படை தோற்கடிக்கப்பட்டது.

29-தேதி.

இதுவரையில் 226 ஜெர்மன கப்பல்களும் ஆஸ்ட்ரியா கப்பல்களும் இங்கிலீஷாரால் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

30-தேதி.

அட்மிரல் பௌ-டி-லாபெய்ரர் மத்யதரைக் கடலிலுள்ள ப்ரிட்டிஷ், ப்ரெஞ்சு கப்பல் படைகளின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆகஸ்டு௴ 5-தேதி.

ஜெர்மனி ப்ரான்ஸோடு ஸமாதானம் செய்துகொள்ளப்போவதாக ஒரு வதந்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ப்ரிட்டிஷ், ப்ரெஞ்சு, பெல்ஜியன் கவர்னமெண்டுகள் தனியாக ஜெர்மனியோடு ஸமாதான உடன்படிக்கை செய்துகொள்ள மாட்டாவென்றும், மூன்று

கவர்ன்மெண்டுகளும் ஸமாதான நிபந்தனை களைப்பற்றிக் கலந்து பேசி ஒரு முடிவு செய்த பிறகே, ஜெர்மனியோடு ஸமாதான நிபந்தனை களைப் பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனவென்றும் ப்ரிட்டிஷ் அன்ய வ்யஹார மந்த்ரி தெரிவிக்கிறார்.

GENERAL NEWS.

பொது வர்த்தமானம்

20-தேதி.

காலஞ்சென்ற போப்—ரோமன் காதோலிக் கிறிஸ்தவர்களின் சமயகுருவாகிய பத்தாவது பயஸ்என்ற பெயருள்ள போப் இன்று ரோமில் காலம் சென்றார். இவர் சிலகாலமாக ஐரோப்பிய யுத்தத்தை நிறுத்த முயன்றும் முடியாமல் போய் அதனால் மனவருத்தமடைந்து தேக அஸௌக்ய மடைந்து இறந்து போனார்.

21-தேதி.

யுத்த ஸம்பந்தமாக சென்னையில் ஒரு மீட்டிங்—இன்றையதினம சென்னை பிரபுக்கள் ஒரு மீட்டிங் கூடி, யுத்தத்தில் நேரும கஷ்டங்களின் நிவர்த்திக்காக சென்னை ராஜதானியின பலபாகங்களிலிருந்தும் பணம் சேகரம் செய்ய வேண்டுமென்றும், பணம் சேகரிப்பதற்காக ஒருகமிட்டி நியமிக்க வேண்டுமென்றும தீர்மானம் செய்தார்கள்.

26-தேதி.

மைஸூர் மகாராஜாவின் உதவி.—மைஸூர் மகாராஜா ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்துக்கு இந்தியாவிலிருந்து ஸைன்யம் அனுப்புவதற்கேற்படும் செலவுக்காக 50 லக்ஷம் ரூபாய் வைஸ்ராய்க்குக் கொடுத்திருக்கிறார்.

ஸெப்டம்பர் 3-தேதி.

புதிய போப்—இட்டலியில் பொலோனுவின் ஆர்ச்பிஷப்பாக இருந்த கார்டினல் டெல்லா சியஸா என்பவர் போப்பாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் 15-வது பெனடிக்ட் என்று பெயர் வைத்துக்கொள்ளுவார். (போப் என்பவர் ரோமன காத்தோலிக் கிறிஸ்தவர்களின் லோககுரு. அவர் இட்டலியிலுள்ள ரோமில் இருக்கிறார்.)

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1914௵ ஏப்ரல்மீ 1௳யிலிருந்து 1914௵ ஆகஸ்ட்மீ 1௳ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	33·81	23·66
வால்டேர்	19·75	17·54
காக்கிநாடா	23·93	18·00
மசூலிப்பட்டணம்	20·71	19·53
நெல்லூர்	10·79	8·67
மதராஸ்	14·71	12·80
கடலூர்	15·51	11·39
நாகப்பட்டணம்	6·75	9·67
பாம்பன்	1·08	4·14
கொழும்பு	33·65	37·36
திருவநந்தபுரம்	41·91	37·73
கொச்சி	74·56	80·93
கள்ளிக்கோட்டை	90·43	93·29
மங்களூர்	121·78	106·41
மெர்க்காரா	102·63	103·36
ஐதராபாத்	29·52	19·28
பல்லாரி	6·86	9·10
கர்நூல்	17·06	15·47
கடப்பை	15·36	15·57
ஹாஸ்ஸான்	17·79	21·17
பெங்களூர்	17·55	18·39
கொடைக்கானல்	27·81	26·73
உதகமண்டலம்	26·10	32·20
கோயம்புத்தூர்	3·56	8·34
வேலூர்	13·13	19·80
சேலம்	18·77	21·36
திருச்சிராப்பள்ளி	5·47	12·21
புதுக்கோட்டை	15·70	15·80
மதுரை	10·81	12·79
திருநெல்வேலி	1·08	5·96

Calendar -பஞ்சாங்கம்.

தமிழ் தாதி	லக்ன புரக்கி	அகர மாக	ஆங்	இங்	தமி	வார	48-ஆனந்தவருஷ புரட்டாசிமாதம் தக்ஷிணாயனம்-வர்ஷருது { பாத்ரபதமாசம் ஆசுவிஜம் } கொல்லம்-1090 பவலி-1324 { இங்கிலீஷ் - 1914 செப்டம்பர்-அக்டோபர்மீ } ஹிஜரி1332ல் ஷவ்வால்-ஜில்கா
சி 5	30	12	25	16	1	[illegible]	ஏகா-15-33,பூச-35-51,பரி-20-30,[illegible]-44-0,சே-0-25,தி-6-48,கன்யாரவி-11-21,கந்யாத்வாதசீதி, யதிம்காளய, [ஷடசீதி புண்யகாலம், ஸர்வஏகா, சூன்யார்க்கம்
சிக 4	52	10	26	17	2	வி	த்வா-12-1,ஆயி-33-30,சிவ-14-[illegible],கர-39-30,ப்ரதோஷ,த்வாபரயுகாதி,கஜச்சாயை
மசி	42	8	27	18	3	வெ	த்ர-6-48,மக-29-34,சித-7-45,[illegible]-51-47,பத்-33-38,தி-1-43,ரா-17-49,சஸ்திரஹதமகாளய,மாஸசிவரா
சிஉ	32		28	19	4	ச	சசி-0-9,உப-●-52-17,பூர-24-20,சுப-50-25,சது-26-24,ரா-10-28,ஸாவமகாளய அமா,பிண்டபிதிரு,அவம
அ	22	5	29	20	5	ஞா	ப்ர-44-1,உத்-18-11,சுப்-40-42,கிம்-18-19,ரா-6-49,ஆசுவினசுத்த,இஷ்டி,நவராத்ராரம்ப,தௌஹித்ரப்ரதிபத்
சிபி	13	4	30	21	6	தி	த்வி-35-18,ஹஸ-11-33,பிரா-30-44,பால-9-40,தி-29-18,சந்திரதர்சன
சிசிம	3	2	1	22	7	செ	த்ரி-26-41,சித-4-51,உப-53-37,மா-20-48,[illegible]-0-57,வணி-52-33,தி-17-19,த்விதீயாதி,வைசிரா,வாஜீராஜனம்,
சிஅ 3	53	30 1	2	23	8	பு	சது-18-35,விசா-52-48,[illegible]-11-15,பவ-44-50,தி-11-4,துலாயன-52-6, திதித்வய, சதுர்த்தீவிரு, உபாங்கலளி
சிபி	43	29 59	3	24	9	வி	பஞ்-11-20,அனு-48-12,விஷ்-2-23,உ[illegible]-52-1,கவ-38-6,தி-1-58,ஷஷ்டீதி,ஷஷ்டியுப,இராமா [தாவிரு
மஅ	33	58	4	25	10	வெ	ஷஷ்-5-12,கேட்-44-54,ஆயு-47-30,கர-32-39,தி-1-18,பத்ரிகாபூஜாதி,திவாமா
சி	23	57	5	26	11	ச	ஸப்-0-28,உப-56-49,மூல-43-5,ஸவு-41-50,பத்-28-41,தி-4-7,ரா-9-13,அவம
சிஅ	14	55	6	27	12	ஞா	நவ-55-41,பூரா-42-50,சோ-37-26,பால-26-17,தி-6-48,ஸரஸ்வதீபூஜை,மகாநவமீ, மன்வாதி, (ரக்கூன் அவம)
மஅ	4	54	7	28	13	தி	தச-55-38,உரா-44-7,அதி-34-19,தை-25-28,தி-3-6,ரா-24-37,விஜயதசமீ, ஸரஸ்வதீ விஸர்ஜனம்,பலிதானம், பட்டாபிஷேகம்,விஜயயாத்ரை,எனுதிநாயனார்
சி 2	54	59	8	29	14	செ	ஏகா-57-3,திரு-46-51,சுக-32-16,வணி-26-10,ரா-27-36,சிரவணஉப,ஸர்வஏகா,சிரவணதீபம்.
பிசி	44	50	9	30	15	பு	த்வா-59-44,அவி-50-51,திரு-31-21,பவ-28-16,சே-1-36,(ரக்கூன் திரிதினஸ்பிருக்,ஸர்வஏகா)
மசி	34	49	10	1	16	வி	த்ர-60-0,சத-55-54,சூல-31-17,சவு-31-30,தி-10-15,ப்ரதோஷம்,த்ரிதினஸ்பிருக்,கரிநாள்,நரசிங்கமுனையரையர்
சி	24	48	11	2	17	வெ	த்ர-3-30,பூட்-60-0,கண்-31-59,கர-35-44,தி-13-25,
மசி	15	46	12	3	18	ச	சசி-8-10,பூட்-1-49,விரு-33-16,பத்-40-46,தி-28-24,கோஜாகரீ, ஆசுவயுஜீகர்ம
அ	5	44	13	4	19	ஞா	○-13-31,உட்-3-26,துரு-35-2,பால-46-24,ரா-12-13,பிரதமாதி, அபத்யநீராஜனம்
சி 1	55	43	14	5	20	தி	ப்ர-19-23,ரே-15-32,வியா-37-8,தை-52-27,ஆசுவினபகுள, இஷ்டி,அதிதி,அசூன்யசயனவிரு,ருத்ரபசுபதி
சி	45	42	15	6	21	செ	த்வி-25-33,அசு-22-56,ஹர்-39-25,வணி-58-41,தி-11-41,ரா-20-16,த்விதீயாதி
[illegible]	35	40	16	7	22	பு	த்ரி-31-50,பர-30-27,வஜ்-41-44,பத்-31-50,சங்கடசதுர்த்தீ,கரகசதுர்த்தீ
[illegible]	25	38	17	8	23	வி	சது-37-54,கிரு-37-46,ஸித்-43-51,பவ-4-55,தி-4-9,கிருத்திகை
[illegible]	16	37	18	9	24	வெ	பஞ்-48-26,ரோ-44-35,விய-45-32,கவ-10-45,தி-22-23,வியசிரா,திருநாளைப்போவார்
[illegible]	6	35	19	10	25	ச	ஷஷ்-48-4,மிரு-50-30,வரீ-46-31,கர-15-53,தி-0-4,
சி 0	56	34	20	11	26	ஞா	ஸப்-51-21,திரு-55-7,பரி-46-29,பத்-19-53,தி-13-16,ராதாஜயந்தீ,இராமா,மித்ரஸப்தமி
சி	46	33	21	12	27	தி	அஷ்-53-2,புன-58-10,சிவ-45-13,பால-22-25,தி-26-51,காலாஷ்டமீ,திவாமா
சி	36	31	22	13	28	செ	நவ-52-50,பூச-59-22,சித்-42-32,தை-23-11,தி-18-48,அருணந்திசிவாசாரியார்
சி	26	29	23	14	29	பு	தச-50-36,ஆயி-58-36,சாத்-38-14,வணி-21-57,ரா-1-43,கரிநாள்
சி	17	28	24	15	30	வி	ஏகா-46-25,மக-55-55,சுப-32-22,பவ-12-45,தி-27-29,கன்யாஏகாதசீதி,ஸர்வஜீவஸரஏகா [கோவத்ஸத்வாதசீ
சி 0	7	29 27	25	16	31	வெ	த்வா-40-27,பூர-51-29, சுப்-25-0,சவு-13-38, தி-14-27, துலாரவி-41,[illegible]துலாசங்க்ரமண புண்யகாலம்

			சனி
ரா	3-து-செ 12-து-பு 16-வி-சு		
குரு			கே
		சு	ர-செ பு